# கலைக்கிளி - 2012



விருதுபெறும் கலைஞர்கள்

மற்றும்

அரச அலுவலர்களது

ஆக்கத்திறன் போட்டிகளில்

வெற்றிபெற்ற ஆக்கங்களின்

தொகுப்புகளடங்கிய நூல்



வெளியீடு

பண்பாட்டுப் பேரவை,
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்கிளி - 2012

விருதுபெறும் கலைஞர்கள்
மற்றும்
அரச அலுவலர்களது
ஆக்கத்திறன் போட்டிகளில்
வெற்றிபெற்ற ஆக்கங்களின்
தொகுப்புகளடங்கிய நூல்

4939

வெளியீடு

பண்பாட்டுப் பேரவை,
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : "கலைக்கிளி" – 2012

பதிப்புரிமை : பண்பாட்டுப் பேரவை 2012.12.02

வெளியீடு : பண்பாட்டுப் பேரவை, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

நிதி அனுசரணை : காவேரி கலாமன்றம், கிளிநொச்சி.

அளவு : A5

பிரதிகள் : 200

தாள் : 80gsm

பக்கங்கள் : 92 + iv

அச்சுப்பதிப்பு : Andra Digital Printers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகளை வளர்ப்போம்
# கலைஞரைப் போற்றுவோம்



கிளிகள் கிள்ளை மொழி பேசிக் குலாவியிருந்த நொச்சி மரத்தோப்புக்கள் நிறைந்த பிரதேசமாகிய கிளிநொச்சி மாவட்டத்தில் கலைவளர்த்த கலைஞர் பெருமக்கள் போற்றப்படவேண்டியவர்கள். அவர்களது சேவை மறத்தற்பாலன்று. கலைக்காகவே வாழ்ந்த இக்கலைஞர்கள் வாழும்போதே கௌரவிக்கப்பட வேண்டியவர்கள், போற்றப்படவேண்டியவர்கள். எத்தனையோ சிரமங்களின் மத்தியிலும் கூத்துக்களை, நாடகங்களை பாடல்களை, அரங்கேற்றுவ திலும் அவற்றை மற்றவர்களிடம் கையளிப்பதிலும் இக்கலைஞர்களது பணி எமக்குப் கிடைக்கப்பெற்றமை மிகவும் மகத்தானது. எமது மாவட்டத்தில் வாழுகின்ற கலைஞர்களிடையே பிரதேச செயலக பண்பாட்டுப் பேரவைகளினூடாக சிபார்சு செய்யப்பட்ட வயது முதிர்ந்த 12 கலைஞர்கள் எமது மாவட்டப் பண்பாட்டு விழாவில் "கலைக்கிளி –2012" விருது வழங்கிப் பாராட்டப்படுகின்றார்கள். இது ஒவ்வொரு வருடமும் தொடரும். இத்தகைய செயற்பாடுகளினூடாக கலைகளினது இருப்பும், தொடர்ச்சியும் பேணப்படுவதும், கலைஞர்களுக்கு உந்து சக்தியாகவும் அமையும் என்பது திண்ணம். கலைக்கிளி விருது பெறுகின்ற கலைஞர்களை மேலும் பலவிருதுகள் பெற்று தொடர்ச்சியான கலைச்சேவை செய்வதற்கு மனதார வாழ்த்துகின்றேன்.

கலைக்கிளி 2012 விருது வழங்குதல் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அரச அலுவலர்களுக்கிடையேயான ஆக்கத்திறன் மற்றும் கலைவெளிப்பாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டி யவர்களுக்கான பரிசில் வழங்குதல் ஆகிய இரண்டு நிகழ்வுகளையும் இணைத்து நடைபெறுகின்ற பண்பாட்டு விழாவானது புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்வேகத்தை ஏற்படுத்தும் என்பது எமது எண்ணம். இவற்றினூடாக புதிய எண்ணச் சுழற்சிகளை எமக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் ஏற்படுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அபிவிருத்திப் பணிகள் மற்றும் தற்கால வாழ்வியல் போக்குகளை கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும், சிறுகதைகளாகவும் ஓவியமாகவும் தரமான ஆக்கங்களைப் படைத்திருப்பதில் எமது அரச அலுவலர்கள் கடமையில் மட்டுமல்ல ஏனைய செயற்பாடுகளிலும் வல்லவர்கள் என்பதைப் பறைசாற்றி நிற்கின்றமை கண்கூடு. இப்பணி சிறப்புற அமைய உழைத்த அத்தனை உள்ளங்களையும் குறிப்பாக மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் மற்றும் பண்பாட்டுப் பேரவையினரையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்ட வேண்டிய கடப்பாடு எனக்குண்டு. மேலும் இந்நூல் வெளிவர நிதி அனுசரணை வழங்கிய காவேரிக் கலாமன்றம் (கிளிநொச்சி), அழகுற அமைச்சத்த அன்ரா நிறுவனம் ஆகியோருக்கும் எங்கள் நன்றிகள்.

கலைக்கிளி விருது மற்றும் அரச அலுவலர்களுக்கான போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற அனைவரையும் பாராட்டுவதோடு, அவர்களின் கலைப்பணி தொடர மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

**திருமதி. றூ. கேதீஸ்வரன்,**
அரசாங்க அதிபரும்,
பண்பாட்டுப் பேரவையின் தலைவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.வே. இறைபிள்ளை- தமிழ்ப்பணி



பெரும்பாலான தமிழர்களும், தமிழ் கற்றுத் தேர்ந்த தமிழறிஞர்களும் தாம் நிகழ்த்தும் கோயில் வழிபாடு தொடக்கம் திருமண விழா முதலான குடும்பக் கரணங்கள் (சடங்குகள்) வரை தெய்வமொழி என்று நம்பும் வட மொழிக்கே வாழ்வளிக்கும் போது தமிழில் தேர்வு எழுதி பணிக்குத் தெரிவாகி பணிமனையில் பணியாற்றும் அலுவலர்கள், படிவங்கள் தொடக்கம் பதிவேடுகள் வரை ஆங்கிலத்துக்கே முதன்மை அளித்து ஆங்கிலத்திலே பணியாற்றும் இக்காலத்திலே, அரச பணிமனைகளில் பணியாற்றிய காலத்திலும் தமது குடும்ப வாழ்விலும் தமிழை உயிராக மதித்து தமிழுக்கு முதன்மையளித்து, எங்கும் எதிலும் தமிழையும் தமிழர் பண்பாட்டையும் கடந்த நாற்பது (40) ஆண்டுகளாக வளர்த்து வருகின்றார் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்க நிறுவுநர் வே.இறைபிள்ளை (பரமநாதபிள்ளை) அவர்கள்.

இவர் வட்டுக்கோட்டை சிந்துபுரத்தில் 1940ஆம் ஆண்டில் பிறந்தார். தொடக்கக் கல்வியை வட்டுக்கோட்டை திருநாவுக்கரசுப் பள்ளியிலும், உயர் கல்வியை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் பயின்றார். தமிழ் எழில் முத்திங்கள் இலக்கிய இதழை அதன் ஆசிரியராக இருந்து வெளியிட்டார். மாணவர்களுக்கு திருக்குறள், தமிழ் இலக்கியத் திறன் தேர்வை நடத்துவதற்காக "மாணவர் வாழ்வில் திருக்குறள்" "தமிழர் வாழ்வில் தமிழ்" "தமிழ் மகள் ஔவையார்" ஆகிய நூல்களையும் தமிழ் வழிபாட்டை ஊக்குவிக்கும் வகையில் முருகவேள் போற்றி, பிள்ளையார் போற்றி, இறைவன் இறைவி போற்றி, ஆகிய நூல்களையும் திருவள்ளுவர் தொடர் ஆண்டைக் குறிக்கும் வகையில் இலக்கியக் காட்சிகளைக் கொண்ட நாட்காட்டிகளை ப.நோ.சங்கங்களின் உதவியுடன் வெளியிட்டுள்ளார்.

இவரது தமிழ்ப்பணிகளை கௌரவிக்குமுகமாக 2012ஆம் ஆண்டிற்கான "கலைக்கிளி" விருது வழங்குவதில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவை பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையதம்பி நடராசா - எழுத்துத்துறை



கிளிநொச்சியில் திருநகர் கிழக்கு கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த இளையதம்பி நடராசா ஒரு முதிர்ந்த எழுத்தாளராவார். 1939ஆம் ஆண்டு மாசி மாதம் 11ஆம் திகதி இளையதம்பி பார்வதி தம்பதியினரின் புதல்வராக பரவிப்பாஞ்சானில் பிறந்த நடராசா, கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 09ஆம் தரம் வரை கல்வி கற்றுள்ளார். பின்பு கட்டடத் தொழிலை தனது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகிறார்.

1968ஆம் ஆண்டு இவரது கன்னிக் கதை "வாடா மல்லிகை" எனும் தலைப்பில் "தினபதி"ப் பத்திரிகையில் பிரசுரமானது. தொடர்ந்து சுதந்திரன் பத்திரிகையும் இவரது ஆக்கங்களுக்கு ஊக்கமளித்தது.

1966ஆம் ஆண்டின் பின் பூண்டுலோயாவில் இருந்து வெளிவந்த "வெற்றிமணி" சஞ்சிகையில் "பசுவும் கயிறும்", "முதலாளியும் தொழிலாளியும்", "இதயக்கோயிலும் இறைவழிபாடுகளும்", தாயும்சேய்களும்", திருவள்ளுவரும் திருக்குறளும்" போன்ற தலைப்புக்களிலான தத்துவக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இவர் இதுவரை 75ற்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 200ற்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, மித்திரன், ராதா போன்ற பத்திரிகைகளிலும், பல்வேறு சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. 2008ஆம் ஆண்டு இவரது நேர் காணல் ஒன்று 'ஐ' தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகியது. தொடர்ந்து தினக்குரலிலும் இவரது நேர்காணல் பிரசுரமானது.

2011ஆம் ஆண்டு இவரது எழுத்துத் துறைக்காக கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அத்துடன் கரைச்சி பிரதேச செயலகத்தினால் 2011ஆம் ஆண்டு "கரைஎழில்" எனும் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மேலும் கரைச்சி பிரதேச கலாசாரப் பேரவை இவரது சிறுகதைகளைத் தொகுத்து காவேரி கலாமன்றத்துடன் இணைந்து "ஓய்வு" என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளது.

இத்தகு முது கலைஞனது சேவையைப் பாராட்டி கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவை "கலைக்கிளி" விருது வழங்கி பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வதிசிவம்



கீரிமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுச்சாமி தேசிகருக்கும் இராமலட்சுமி அம்மாளுக்கும் 1950களில் மகளாகப் பிறந்தவர் திருமதி பார்வதிசிவம். இவருடைய தந்தையார் ஒரு ஆர்மோனிய வித்துவானாகவும், நாடகக் கலைஞராகவும், தாயார் ஒரு பாடகராகவும் விளங்கியிருக்கிறார்கள்.

சிறந்ததொரு கலைப்பாரம்பரியம் உள்ள குடும்பத்தில் பிறந்த இவர் தனது ஏழாவது வயதில் இருந்தே நாடகங்களில் நடித்தும், பாடல்களைப் பாடியும் தனது கலைப்பயணத்தை ஆரம்பித்தவர். கலையரசு சொர்ணலிங்கம் உட்பட பல கலைஞர்களினதும், அறிஞர்களினதும் பாராட்டைப் பெற்றவர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பல ஆண்டுகள் இசை நிகழ்ச்சி செய்ததோடு இலங்கையில் தயாரிக்கப்பட்ட "தெய்வம் தந்த வீடு" என்ற திரைப்படத்திலும் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார். இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் கூட இவரது கலைப்பயணத்தினை வாழ்த்தி கௌரவித்திருக்கிறார்கள்.

பாடகி என்ற நிலையில் மட்டுமன்றி பல நாடகங்களிலும் நடித்துள்ளார். 50 ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது கலைப்பயணத்தில் தடம்பதித்திருக்கும் இவருக்கு இவருடைய கலைத்துறைச் சேவைக்காக கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவை "கலைக்கிளி" விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. வினாசித்தம்பி வேலாயுதபிள்ளை - கூத்து



கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் தட்டுவன்கொட்டி கிராமத்தில் 1932.02.07இல் பிறந்த இக் கூத்துக் கலைஞர் தற்போது கண்ணகிநகர், புன்னை நீராவியில் வசித்து வருகிறார். தனது பன்னிரெண்டாவது வயது முதல் கூத்து, நாடகம் போன்றவற்றில் நடிப்பதில் ஆர்வம் காட்டத் தொடங்கியதுடன், இத்துறையில் முதலில் "சத்தியவான்" பாத்திரம் ஏற்று நடித்தவர். தட்டுவன்கொட்டி கண்ணகியம்மன் ஆலய உற்சவ, பங்குனி பெரும் பொங்கல் காலங்களில் அல்லி அர்ச்சுனா, பவளக்கொடி, கோவலன் கண்ணகி, காத்தவராயன் போன்ற அறக்கூத்துக்களில் முதன்மைப் பாத்திரங்களை அலங்கரித்த முதுகலைஞராகத் திகழ்கிறார். தட்டுவன்கொட்டி அம்பாள் கலாமன்ற ஆரம்பகால உறுப்பினராகத் திகழ்ந்ததுடன், தற்போது கண்ணகிநகர் கண்ணகி அம்பாள் கலாமன்ற போசகர்களில் ஒருவராகவும் முதுபெரும் நடிகராகவும் செயற்பட்டு வருகின்றார்.

இவரது 50 வருடங்களுக்கு மேற்பட்ட துறைசார் சேவைக்காக 2010ஆம் ஆண்டின் வடமாகாண ஆளுநர் விருதும், கண்டாவளை பிரதேச கலாசாரப் பேரவையால் "கலை ஒளிர்" விருதும், 2011ஆம் ஆண்டில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை தக்க சான்றாகும்.

இத்தகு கலைஞனுக்கு கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் 2012ஆம் ஆண்டில் "கலைக்கிளி" விருதினை வழங்கிப் பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. முருகேசு செல்லத்துரை - கூத்து



கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் நாகேந்திரபுரம், புளியம்பொக்கணையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், 1929.08.19 இல் மீசாலையில் பிறந்தவர். இவர் ஆரம்பக் கல்வியை மீசாலை கனகாம்பிகை வித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டார்.

15 வயது முதல் காத்தவராயன், அரிச்சந்திரா போன்ற பாத்திரங்களில் நடிக்கத் தொடங்கியதுடன், உடுக்கை, டொல்கி போன்ற தோல்வாத்தியக் கருவிகளையும் வாசிப்பதில் சிறப்புப் பெற்று விளங்குகிறார். கண்டாவளைப் பிரதேசத்தின் பல பாடசாலைகளினூடாக பல இளம் கலைஞர்கள் தோன்றுவதற்கு காரணமாயிருந்தவர். அறக்கூத்துக்களான காத்தான், கோவலன், கண்ணகி, அரிச்சந்திரா போன்றவற்றை அண்ணாவியாராக இருந்து பழக்கி வந்ததுடன், இன்றுவரை அவற்றின் சம்பூர்ண பிரதிகளையும் எழுத்துருவில் பாதுகாத்து வருகின்றார். கூத்துக்களில் (அண்ணாவி) நெறியாள்கை, நடிகர், பின்னணி வாத்தியம் என பன்முக ஆளுமையுடன் செயற்படும் இவர், சிறந்த ஒப்பனைக் கலைஞரும் கூட. இவற்றுடன் சுமார் பத்து வரையிலான வில்லிசைகளை இயற்றிப் பழக்கி பிரதேச பாடசாலைகள், ஆலய உற்சவ காலங்களில் மேடையேற்றிப் பலரது பாராட்டையும் பெற்றுக் கொண்டவர். 2007இல் "மாலைக்கு வாதாடிய மைந்தன்" எனும் கூத்தினை புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் மேடையேற்றி பாராட்டுப் பெற்றவர்.

இவரது கலைச் சேவையைப் பாராட்டி 1998இல் கிளி/ தமிழ்ச் சங்கத்தால் கௌரவிக்கப்பட்டதுடன், கண்டாவளை பிரதேச கலாசாரப் பேரவையின் "கலை ஒளி" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை தக்க சான்றாகும். இத்தகு முது கலைஞனது சேவையைப் பாராட்டி கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவை "கலைக்கிளி" விருது வழங்கி பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கலைத்தென்றல்" ஜேம்ஸ் அல்பிரட் - கூத்து



புலோப்பளையைச் சொந்த வாழ்விடமாகக் கொண்ட ஜேம்ஸ் அல்பிரட் அவர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேசததின் மூத்த அண்ணாவியர்களில் ஒருவர். குருநகர் கிறிஸ்தோபர் அவர்களின் நேரடி மாணவனான இவர், இளம் வயது தொடக்கம் இசைக் கலையில் ஈடுபாடு உடையவராகத்திகழ்ந்தார். ஆயினும் தனது தந்தை வழி கூத்துக்களைப் பழகியதன் அடிப்படையில் தனது கலைப்பணியை சிந்துநடைக் கூத்துகளூடாக மேற்கொண்ட ஒரு கலைஞர்.

கிறிஸ்தவ கதைக் கருக்களைச் சிறந்த முறையில் கையாண்டு அதை சிந்துநடைக் கூத்துக்களாக மாற்றியமைத்தவர். 19 வயதில் தனது முழு முயற்சியால் பளை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் முதல்க் கூத்தினை அரங்கேற்றியவர். அன்றிலிருந்து இன்றுவரை 150இற்கு மேற்பட்ட மேடைகளில் தனது ஆற்றுகைகளை மேற்கொண்டவர்.

இவரின் கலைப்பணியின் மகத்துவங்களில் ஒன்று, இவரது கலைப்பயிற்சியில் இன்றும் இவரது மாணவர்கள் சிறந்த நடிகர்களாயும், நாடகங்களையும் கூத்துக்களையும் மேடையேற்றுபவர்களாகவும் உள்ளனர். புலோப்பளையின் அலெக்ஸ், நிக்கலஸ் போன்றவர்கள் பெயர் குறிப்பிடக்கூடியவர்கள். அத்துடன் இளம் கலைஞர்கள் என நூற்றுக் கணக்கானவர்களை உருவாக்கிய மிகப் பெரும் பெருமைக்குரியவர். இவரின் கலைப்பணியை கௌரவிக்கும் முகமாக பச்சிலைப்பள்ளி கலாசாரப் பேரவையானது தமது 2011ஆம் ஆண்டு கலாசார விழாவில் கலைத்தென்றல் பட்டம் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதுடன், இவரது கலைப்பணிக்காக 2012ஆம் ஆண்டிற்கான "கலைக்கிளி" விருது வழங்கிக் கௌரவிப்பதில் கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பேரவை பெருமை கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கலாபூஷணம்", "கலைத்தென்றல்"
# வல்லிபுரம் செல்லத்துரை - பல்துறை



புலோப்பளையை வாழ்விடமாகக் கொண்ட வல்லிபுரம் செல்லத்துரை அவர்கள் கலைப் பாரம்பரியத்தை தந்தை வழியாகக் கொண்டவர். இளம் வயதில் தந்தையாருடன் இணைந்து வழிவிடு முருகன் ஆலயம், பளை இரட்டைக்கேணி அம்மன் ஆலயம் போன்றவற்றில் வில்லுப்பாட்டு, கரகம், காவடி போன்ற நிகழ்வுகளை பழகி பின்னர் மேடையேற்றியவராவார்.

இப்பிரதேசத்தின் மூத்த கலைஞர்களுள் ஒருவரான இவர், தனது கலைப்பணிச் சேவையை கிளிநொச்சி மாவட்டம் மட்டுமன்றி திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற வெளிமாவட்டங்களிலும் தனது ஆற்றுகையை செயற்படுத்தினார். இற்றைவரை ஓர் இயங்கு கலைஞனாகத் திகழும் இவர், பாம்பரியக் கலைகளை வில்லுப்பாட்டு, கரகம், காவடி, தேர் ஓட்டம், உடுக்கை, ஆர்மோனியம், ஒப்பாரி போன்ற அனைத்துக் கலைகளையும் இளம் கலைஞர்களுக்கு பழக்கி வருகின்றமை சிறப்பம்சமாகும்.

இவரது கலைச் சேவைகள் என்பது இவரின் சிறப்பான முருகன் திருநடனம் எனும் நிகழ்வு சர்வதேச பாரம்பரிய இசைகள் சங்கமத்தில் 2010ஆம் அண்டு யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டு பாராட்டுப் பெற்றதினூடாக அறியலாம். இவரது தொடர்ச்சியான கலைச் சேவையைப் பாராட்டி 2010ஆம் ஆண்டு ஆளுநர் விருதும், 2011ஆம் ஆண்டு கலாபூஷணம் விருதும் வழங்கக் கௌரவிக்கப்பட்டவர். அத்துடன் 2012ஆம் ஆண்டு பச்சிலைப்பள்ளி கலாசார பேரவையின் "கலைத்தென்றல்" பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்ட இக் கலைஞனது வாழ்க்கை கலைப்பணியை மையப்படுத்தியதாகும். இத்தகு கலைஞனுக்கு இவரது கலைப்ணிகளை கௌரவிக்குமுகமாக 2012ஆம் ஆண்டிற்கான "கலைக்கிளி" விருது வழங்குவதில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவை பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கலைத்தென்றல்" ஆசீர்வாதமுத்து
## மரியநாயகம் / அழகரத்தினம் - வாத்தியம்



தம்பகாமத்தை வதிவிடமாகக் கொண்ட ஆசீர்வாதமுத்து மரியநாயகம் அவர்கள் இளவயது தொடக்கம் கலைத்துறையில் அதிகம் ஈடுபாடு உடையவராகக் காணப்பட்டார். கலைத்தேடலில் இவரது பணி இசைத்துறையாக மிளிர்ந்ததுடன் அவற்றில் ஆர்மோனியம், மிருதங்கம் என்பவற்றை வாசிப்பதில் அதீத ஆற்றல் உடையவர்.

ஆரம்பகால கல்வியைப் பெற்றுக் கொண்ட இவர், மிருதங்க வாத்தியத்தை சாஸ்திரீய முறைப்படி கற்றுக் கொண்டவர். ஆர்மோனியத்தைச் சிறப்பாகக் கற்றுக்கொள்ளும் முகமாக யாழ்ப்பாணம் சென்று நீண்டகாலம் பயிற்சி பெற்றுக்கொண்டவர்.இவரின் சிறப்பான திறன்களில் இசை நாடகம் மற்றும் வடமோடி, தென்மோடிகளில் அமைந்த கூத்துக்களுக்கு இரண்டின் வேறுபாடுகளுமின்றி ஆர்மோனியம் வாசிப்பதில் சிறப்புடையவர்.

ஆர்மோனியத்தில் மட்டுமன்றி நாடகத்துறையிலும் நடிகராகச் செயற்பட்டு பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினாலும் உரிய முறையில் கௌரவம் அளிக்கப்பட்டவர். அத்துடன் பிரதேச செயலகத்தால் 2000ஆம் அண்டு கௌரவிக்கப்பட்டவர். மேலும் ஜோன் டி சில்வா கலை அரங்கில் இவரது ஆர்மோனிய இசை கலாபூஷண நிகழ்வு நடைபெற்ற பொழுது இடம்பெற்றதாக அறியமுடிகிறது. இவ்வாறு இவரின் கலைப்பணியையும், நீண்டகால ஆர்மோனிய பணிக்காகவும் 2011ஆம் ஆண்டு பச்சிலைப்பள்ளி கலாசாரப் பேரவை 'கலைத்தென்றல்' எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. 50 வருடத்துக்கு மேற்பட்ட இக் கலைஞரின் பணி மகத்தானதாகும். இத்தகு கலைஞனுக்கு இவரது கலைப்ணிகளை கௌரவிக்குமுகமாக 2012ம் ஆண்டிற்கான "கலைக்கிளி" விருது வழங்குவதில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவை பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கலாபூஷணம்" பொன். தில்லைநாதன் - நாடகம்



கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மட்டுவில்நாடு கிழக்கு கிராமத்தில் 1945.09.12ஆம் திகதி பிறந்தவர். ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளராகிய இவர், 34 வருடங்களுக்கு மேலாகக் கலைத்துறை, சமயத்துறை, ஊடகத்துறை மூன்றிலும் பெரும் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றார்.

1975ஆம் ஆண்டு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் சிறந்த நடிகருக்கான விருது பெற்றவர். இவர் 25இற்கு மேற்பட்ட நாடகங்களைத் தயாரித்து நெறியாள்கை செய்து, பிரதம பாத்திரங்களில் நடித்தும் வந்துள்ளார்.

2006ஆம் ஆண்டு "நினைவழியா நினைவுகள்" என்னும் இவரது சிறுகதைத் தொகுதி வெளியீடு செய்யப்பட்டு பாராட்டுக்கள் பெற்றுள்ளார். பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவற்றில் இன்றுவரை சிறுகதைகளை எழுதி வருகின்றார். வவுனியாவில் இருந்து வெளிவரும் 'மாருதம்' சஞ்சிகையில் தொடர்ந்து சிறுகதைகளை வெளியிட்டு வருகின்றார்.

கலைத்துறையில் ஆற்றிய சேவைக்காக 2011ஆம் ஆண்டு அரச உயர் விருதான கலாபூஷணம் விருது வழங்கப்பெற்றவர். பூநகரி கலாசாரப் பேரவையால் 2012ஆம் ஆண்டு 'கலைநகரி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவரது கலைச் சேவையைப் பாராட்டி 2012ஆம் ஆண்டிற்கான 'கலைக்கிளி' விருது வழங்குவதில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவை பெருமை கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. சந்தியாப்பிள்ளை பத்திநாதர் - கூத்து



கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நாச்சிக்குடா கிராமத்தில் 1950.06.24ஆம் நாள் பிறந்தவர். சிறுவயதிலேயே கலைத்துறையில் ஈடுபாடு கொண்ட இவர், 1970இல் சென்றொக் சரிதையை நாடகமாக எழுதினார். 1974இல் நொண்டி நாடகம் என்னும் நாட்டுக்கூத்தை இவரது தந்தையின் நெறியாள்கையில் நடித்துள்ளார்.

தொடர்ந்து பல்வேறு நாடகங்களையும், கூத்துக்களையம் பழக்கி பல்வேறு மேடைகளிலே அரங்கேற்றி வந்துள்ளார். 1983ஆம் ஆண்டு பாலசூரன் நாட்டுக்கூத்து, 1987ஆம் ஆண்டு வாள்பிடித்தவல்லி எனும் அரச நாடகம், 1993ஆம் ஆண்டு நவீன கண்டியரசன் எனும் நாட்டுக்குத்து, மந்திரவாதியின் மரணம் ஆகிய நாட்டுக்கூத்துக்களையும், பாவமன்னிப்பு நாடகம் முதலியவற்றினையும் எழுதி மேடையேற்றியும், நடித்தும் உள்ளார். இடப்பெயர்வின் பின்னர் நவீன பொன்னூற் செபமாலை என்ற நாடகத்தினை எழுதி எழுத்துருவில் வைத்துள்ளார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2012ஆம் ஆண்டிற்கான 'கலைக்கிளி' விருது வழங்குவதில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவை பெருமை கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. சின்னத்தம்பி வயிரவநாதர் - பண்ணிசை



கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கறுக்காய்த்தீவு கிராமத்தில் 1931.05.25ஆம் நாள் பிறந்தவர். அதிபர் ஆகிய இவர், ஏழாம்தரம் படிக்கும் காலத்தில் இருந்து ஆலயங்களில் தேவார திருமுறைகளை முறைப்படி ஓதியும், கந்தபுராணம், பெரிய புராணம் முதலானவற்றுக்கு பொருள் கூறிப் படிக்கும் கலையையும் மேற்கொண்டு வந்துள்ளார்.

அந்தவகையிலே பூநகரி திகிரிவிநாயகர், செல்வியாதீவு கண்ணகை அம்மன், கறுக்காய்தீவு முருகன், கோபாலபிட்டி பிள்ளையார் முதலியவற்றில் பல நூற்றாண்டுகளாக கந்தபுராணம், திருவாதபூர்ப் புராணம், சிவராத்திரி புராணம் முதலான புராணங்களைப் படித்து பொருள் விரிக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றார்.

இவரது சிறந்த இத்தொண்டினை மேற்கொள்வதற்குக் காரணமானவர், இவரது குருவாகிய திரு. செல்லப்பா விநாயகமூர்த்தி என்ற புராணிகரிடத்திலே குருகுல முறையிலே புராணங்களைக் கற்றமையே ஆகும்.

தற்போது முதுமை வாட்டுகின்றபோதும் திருமுறைகள், திருமந்திரம், திருவாசகம், பன்னிரு திருமுறைத் திரட்டு போன்றவற்றை ஓதுகின்ற பணியை மேற்கொண்டு வருகின்றார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2012ஆம் ஆண்டிற்கான 'கலைக்கிளி' விருது வழங்குவதில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவை பெருமை கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அரச அலுவலர்களுக்கிடையில் நடத்தப்பெற்ற ஆக்கத்திறன் மற்றும் கலைத்திறன் போட்டிகளின் முடிவுகளும் வெற்றிபெற்ற ஆக்கங்களின் தொகுப்புக்களும்

| போட்டி | பெயர் | அலுவலகம் | நிலை |
|---|---|---|---|
| கட்டுரை | திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் | அதிபர் உருத்திரபுரம் ம.வி | 1 ஆம் இடம் |
| | திருமதி.சு நிலாகினி | முகாமைத்துவ உதவியாளர் மாவட்ட செயலகம் கிளிநொச்சி | 2 ஆம் இடம் |
| | செல்வி யோ. அனுசியா | முகாமைத்துவ உதவியாளர் பிரதேச சபை கிளிநொச்சி | 3 ஆம் இடம் |
| கவிதை | திருமதி.சு நிலாகினி | முகாமைத்துவ உதவியாளர் மாவட்ட செயலகம் கிளிநொச்சி | 1 ஆம் இடம் |
| | திரு க.லிங்கராசா | முகாமைத்துவ உதவியாளர் மாவட்ட செயலகம் கிளிநொச்சி | 2 ஆம் இடம் |
| | செல்வி யோ. அனுசியா | முகாமைத்துவ உதவியாளர் பிரதேச சபை கிளிநொச்சி | 3 ஆம் இடம் |
| சிறுகதை | திருமதி அருணாசலம் இரஞ்சிதமலர் | ஆசிரியர் உருத்திரபுரம் ம.வி | 1 ஆம் இடம் |
| | திரு பா.ஜெயதாசன் | கலாச்சார அலுவலர் பிரதேசசெயலகம் பளை | 2 ஆம் இடம் |
| | திருமதி உமாநிதி கணேசானந்தன் | சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனை கிளிநொச்சி | 3 ஆம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கையெழுத்துச் சஞ்சிகை | கிளி அமுதம்<br>திருமதி.சு நிலாகினி | முகாமைத்துவ உதவியாளர் மாவட்ட செயலகம் கிளிநொச்சி | 1 ஆம் இடம் |
| | சுவடுகள்<br>ம.றீற்றா ஜென்சி | முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம் பளை | 2 ஆம் இடம் |
| | தொடுகை<br>திரு பா.ஜெயதாசன் | கலாச்சார அலுவலர்<br>பிரதேச செயலகம் பளை | 3 ஆம் இடம் |
| ஓவியம் | திரு ஆ.தீபன் திலீபன் | ஆசிரியர்<br>பூநகரி ம.வி | 1 ஆம் இடம் |
| | திரு மு.கயோதரன் | புனர்வாழ்வு உதவியாளர்<br>மாவட்ட செயலகம் கிளிநொச்சி | 2 ஆம் இடம் |
| | திரு த.பேரின்பசிவம் | வீதி அபிவிருத்தி அதிகாரசபை<br>கிளிநொச்சி | 3 ஆம் இடம் |
| தனிநடிப்பு | திரு வி.சந்திரமோகன் | ஆசிரியர்<br>முழங்காவில் ம.வி | 1 ஆம் இடம் |
| | திரு இ.சுதர்சன் | அபிவிருத்தி உதவியாளர் பிரதேச சபை கரைச்சி | 2 ஆம் இடம் |
| தனி நடனம் | திரு வி.சந்திரமோகன் | ஆசிரியர்<br>முழங்காவில் ம.வி | 1 ஆம் இடம் |
| பேச்சு | திரு அ.கேதீஸ்வரன் | உதவி திட்டமிடல் பணிப்பாளர்<br>மாவட்ட செயலகம் | 1 ஆம் இடம் |
| | மு.கயோதரன் | புனர்வாழ்வு உதவியாளர்<br>மாவட்ட செயலகம் கிளிநொச்சி | 2 ஆம் இடம் |
| | திரு த.ஜெயக்குமார் | ஆசியர்<br>புனித திரேசா பெண்கள் கல்லூரி | 3 ஆம் இடம் |
| | திருஇ.சுதர்சன் | அபிவிருத்தி உதவியாளர் பிரதேச சபை கரைச்சி | 3 ஆம் இடம் |
| தனிப்பாடல் | திரு ஜெனில் சங்கரநாதன் | ஆசியர்<br>பூநகரி ம.வி | 1 ஆம் இடம் |
| | செல்வி அனுசியா யோகராசா | முகாமைத்துவ உதவியாளர் பிரதேச சபை கரைச்சி | 2 ஆம் இடம் |
| | தருமதி குணாளினி கிருஸ்ணவதனன் | மாவட்ட செயலகம் கிளிநொச்சி | 3 ஆம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கவியரங்கம் | மாவட்ட செயலக அணியினர் | மாவட்ட செயலகம் கிளிநொச்சி | 1 ஆம் இடம் |
| | பிரதேச சபை அணியினர் | பிரதேச சபை கரைச்சி | 2 ஆம் இடம் |
| | புனித திரேசா பெண்கள் கல்லூரி அணியினர் | புனித திரேசா பெண்கள் கல்லூரி | 3 ஆம் இடம் |
| பட்டி மன்றம் | புனித திரேசா பெண்கள் கல்லூரி அணியினர் | புனித திரேசா பெண்கள் கல்லூரி | 1 ஆம் இடம் |
| | மாவட்ட செயலக அணியினர் | மாவட்ட செயலகம் கிளிநொச்சி | 2 ஆம் இடம் |
| | பிரதேச சபை அணியினர் | பிரதேச சபை கரைச்சி | 3 ஆம் இடம் |
| | முழங்காவில் ம.வி அணியினர் | முழங்காவில் ம.வி | 3 ஆம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ஆம் இடம்பெற்ற கட்டுரை

# அபிவிருத்திப் பாதையை நோக்கிய கிளிநொச்சி மாவட்டம்

திருமதி.மீ.இதயசிவதாஸ்
*அதிபர். கிளி/ உருத்திரபுரம் ம.வி*

"மாற்றம்" என்ற சொல்லே இன்றைய உலகில் மாறாத ஒன்றாகவுள்ளது. காலத்தின் தேவைகளும் மக்களின் வாழ்வியலும் நாளுக்கு நாள் புதிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கி வருகின்றதென்றால் மிகையல்ல. கடந்த நான்கு தசாப்தங்களாக தொடர்ந்த உள் நாட்டுப் போர் மேகம் தணிந்து இன்று நின்மதிச் சுவாசத்தை உணரும் இலங்கைத் திருநாட்டின் கடைக்குட்டியாக பிரசவிக்கப்பட்டதே கிளிநொச்சி மாவட்டம். கடந்த பல வருடங்களாக உலகின் கவனத்தை ஈர்த்த மாவட்டமும் இதுவே. இன்று போரின் வடுக்களிலிருந்து மெல்ல மெல்ல தலைநிமிரும் இன்றைய சூழ்நிலையில் அதன் துரிதமான அபிவிருத்தியின் பால் அக்கறையுள்ள அனைத்துத் தரப்பினரும் சிந்திக்கத் தலைப்பட்டிருப்பது நல்லதொரு அபிருத்திச் சிந்தனை எனலாம். அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்பதை.

1. கிளிநொச்சி மாவட்டம்– நோக்கு.(2008 முன் பின்)
2. இன்றைய கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த துறைகள்.
3. கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கான ஆலோசனைகள்

என்ற அடிப்படைக் கருத்துக்களினூடாக நோக்கப்படுகின்றது. "அபிவிருத்தி" என்பது ஒருநாட்டின் சமூக. பொருளாதார அரசியல் மற்றும் கலாசார ரீதியாக அனைத்து விடயங்களிலும் ஏற்படும் முன்னேற்றம் எனலாம். கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரையில் 30 ஆண்டுகளாக யுத்தமும் அவ்வப்போது ஏற்பட்ட உள்நாட்டு இடப்பெயர்வு ஒப்பீட்டுரீதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பது வருட அபிவிருத்தியைப் பின்தள்ளி உள்ளது. இத்தகைய மாவட்ட ரீதியான அபிருத்திப் பின்னடைவானது. ஒட்டுமொத்த நாட்டின் அபிவிருத்தியைப் பின்தள்ளும் என்பது யதார்த்தமே. "வன்னிப் பெருநிலப்பரப்பின் பிரதான தளமாக அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் போருக்கு முன்னான நிலைமையை நோக்குவதன் மூலம் அபிவிருத்திக்கான அவசியத்தை உய்த்தறியலாம்.

1960 ஆம் ஆண்டு முதல் கிளிநொச்சி மாவட்டம் தனித் தேர்தல் மாவட்டமாக உருவாக்கப்பட்டது. முதல் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து கிளிநொச்சியை தனிநிர்வாக மாவட்டமாக மாற்றவேண்டுமென இப்பகுதி மக்களின் வேண்டுகையானது. அவ்வப்போது அரசியல் ரீதியாக செல்வாக்குப் பெற்றதன் விளைவாக. இலங்கைக் குடியரசு யாப்பின் ஏழாவது திருத்தச் சட்டத்தின் கீழ் 1983 செட்டம்பரில் கிளிநொச்சி தனிமாவட்டமாக உருவாக்கப்பட்டு. 1984 பெப்ரவரி முதல் இலங்கையின் இருபத்தைந்தாவது நிர்வாக மாவட்டமாக செயற்படத் தொடங்கியது.

1237 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டமானது. கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி(பளை) என நான்கு பிரதேச செயலாளர் பணிமனைகளையும் 95 கிராம அலுவலர் பிரிவுகளையும் ஏறக்குறைய 91701 மக்கள் தொகையையும் கொண்ட ஒரு பரந்த பிரதேசமாக கிளிநொச்சி மாவட்டம் விளங்குகின்றது.

பெரிய நீர்பாசன திட்டங்களையும் பரந்த காட்டுப் பிரதேசங்களையும் பரந்த தென்னைப் பயிர்ச் செய்கை வாய்ப்புக்களையும் இம் மாவட்டம் கொண்டமைந்தமையே புதிய புதிய குடியேற்ற வசதிகளை உள்வாங்கும் விவசாயப் பிரதேச மாவட்டமாக அடையாளப் படுத்தியுள்ளது. 1946 இல் மேற்கொள்ளப்பட்ட நில அபிவிருத்தி நடவடிக்கைகள் விவசாயச் செய்கைக்கான வாய்ப்பை ஏற்படுத்த மக்கள் தொகையும் படிப்படியாக வளர்ச்சியுறத் தொடங்கியது. 1950களில் இரணைமடுக்குளம், அக்கராயன்குளம், கரியால நாகபடுவான்குளம், வன்னேரிக்குளம், புதுமுறிப்புக்குளம் என பலவகையான நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது. இதன் பயனாக. கிராம விஸ்தரிப்புத் திட்டம். மேட்டுநிலமத்திய வகுப்பினர்திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியியலாளருக்கான குடியேற்றத் திட்டம். என பல்வேறு குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்பட்டது. இக்குடியேற்றத்திட்டங்களில் யாழ்குடாநாட்டிலிருந்து. பல மக்கள் விவசாய நோக்கத்திற்காக இங்கு குடியேறத் தொடங்கினர். இதனால் கிளிநொச்சி மாவட்டம் விவசாயப் பிரதேசமாக எழுச்சி பெறத்தொடங்கியது.

இலங்கையில் 1958 இல் ஏற்பட்ட இனக்கலவரம், 1970 இல் ஏற்பட்ட உணவுப் பஞ்சம், 1977, 1983 களில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் முதலானவை பெருமளவு மக்களை அகதிகளாக்கியது. இந் நிலையில் கையறு மக்களாக வந்த மக்களை உள்வாங்கிய பிரதேசமாக கிளிநொச்சி விளங்கியமையால், கணிசமான இந்திய வம்சாவழி மக்களைக் காத்த கிராமங்களாக அமைதிபுரம். பாரதிபுரம். தருமபுரம். தொண்டமான்புரம், ஜெயபுரம், முதலானவை விளங்குவது. "வாந்தாரை வாழ வைக்கும் வன்னிவளநாடு" என்ற சான்றாதாரமாகவுள்ளது.

நில அபிவிருத்தியும் குடியேற்றத்திட்டமும் அகதிகள் வருகையும் குடிவரவை ஏற்படுத்த கிளிநொச்சி மாவட்டத்தின் கிராம, நகர வளர்ச்சி மேலோங்கத் தொடங்கியது. சிறுசேவைகளை வழங்கும் நிலையமாகவிருந்த கிளிநொச்சி படிப்படியான கிராம, நகரவளர்ச்சியால் மேலோங்கி சிறுகைத்தொழில்துறையும். சேவைத்துறையும் மேலோங்கி பல்வேறு நேரடி மறைமுக வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்திய இதனொரு அம்சமாகும். ஓராளவுக்கு 1981 வரையான காலப்பகுதி வரை வளர்ச்சி கண்ட இத்துறைகள் 1983இற்கு பின்பு சரிவு காணத் தொடங்கியது. இதற்கு உள்நாட்டுப் போர் வலுவடைந்தமையும் உள்நாட்டு வெளிநாட்டு இராணுவத்தினரின் வருகையும் பிரதான காரணமெனலாம்.

உள்நாட்டு யுத்தம் நிலவியபோது 1990-1995 களிலிருந்து கிளிநொச்சி நகரத்தினது வளர்ச்சி மேம்பாடான நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. 1995 இல் ஏற்பட்ட யாழ்மாவட்ட இடப்பெயர்வின் கணிசமான மக்கள் தொகையை கிளநொச்சி மாவட்டம் தாங்கியது. குறுகிய காலத்தில் துரித வளர்ச்சியைக் காட்டி நின்ற போதும். துரதிஷ்டவசமாக 1996 இல் ஏற்பட்ட கிளிநொச்சி மாவட்ட இடப்பெயர்வு இரு மாவட்ட மக்களையும் இணைத்து A9 வீதிக்கு கிழக்கு மேற்கு எனத் துண்டாடி மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியலையும் நிர்வாக அலகுகளையும் சிதறடித்தது. இது கிராம, நகர வளர்ச்சியினை சின்னாபின்னப்படுத்தி வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

2002 இல் ஏற்பட்ட சமாதான ஒப்பந்தம் காரணமாக போக்குவரத்து மீதான தளர்வுகள் ஓரளவுக்கு கிளிநொச்சி மாவட்டத்தை துரித வளர்ச்சி காணும் போக்குடன் செயற்படத் தூண்டியது. காலத்திற்கு காலம் ஏற்பட்ட சாதகமான ஏற்றமும் பாதகமான இறக்கமும் கிளிநொச்சி மாவட்டத்தை அவ்வப்போது தளம்பல் நிலையில் வைத்திருந்தாலும் நிலவளமும் நீர்வளமும் மக்களை மீண்டெள வைத்தது என்பதை மறுப்பதற்கில்லை. அடுத்து 2007 இல் படிப்படியாக ஏற்பட்ட ஒட்டுமொத்தமான இடப்பெயர்வு மக்களின் அனைத்து வாழ்வியலையும் ஒட்டுமொத்தமாக கேள்விக்குறியாக்கி அடியோடு சரித்து விட்டது. ஒரு நூற்றாண்டுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட இம் மாவட்டத்தின் உழைப்பையும். அபிவிருத்தியையும் அழித்தொழித்து ஏதுமற்றவர்களாக வாழ்க்கையின் புதிய. புதிய சவால்களை எதிர்கொள்ளும் மக்களாக இம்மாவட்டத்தில் எஞ்சிய மக்கள் இனி என்ன செய்வதென்று அறியாத நிலையில் மீண்டு வந்திருக்கின்றார்கள். இவர்களின் சொத்துக்கள் மட்டுமன்றி மனங்களும் உடல்களும் நைந்து நொந்துள்ளது.கிட்டத்தட்ட பூச்சியத்திலிருந்து அல்லது தர மட்டத்திலிருந்து தமது வாழ்க்கையைத் தொடங்க வேண்டிய கட்டாய நிலையிலுள்ளனர். இவற்றை சீராக்கும் வகையில் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டியது அனைத்து தரப்பினரதும் தார் மீகக் கடமையென்பதும் மனங்கொள்ள வேண்டும்

தரைமட்டமாக்கப்பட்டுள்ள தம் வாழ்க்கையை மீண்டும் பெற்றுக் கொள்ளத்துடிக்கும் மக்களின் அபிவருத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளே பிரதானமானது. கிளிநொச்சி மாவட்டத்தை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கும் அதிலிருந்து மேலான நிலைக்கு கொண்டு வரும் வகையில் புதிய புதிய அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட் டிருப்பது. துரித அபிவிருத்திக்கான சாட்சியமாக கருதமுடிகின்றது. 2010 இல் மீளக் குடியமர்ந்த மக்கள் தாம் விட்டுச்சென்ற களனிகளையும் கங்கைகளையும் நம்பி மீண்டும் விவசாயச் செய்கையை மேம்படுத்துவதில் முனைப்போடு செயல்படுகின்றனர். கடந்த இருவருடங்களில் நெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி கணிசமான அபிவிருத்தியைக் காட்டியுள்ளது. இதற்கு அரசின் உற்பத்தி உள்ளீடுகளின் மானிய ஊக்குவிப்புக்கள் தனியார் வங்கிகளின் கடன் வசதிகள். பக்கபலமாக இருந்துள்ளன.

கல்மடுக்குளம் குறுகிய காலத்தில் புனரமைத்துக் கட்டியமை சிதைவடைந்த வீதிகள் புனரமைப்பு, மின்சார வசதிகள், நீர்ப்பாசன அபிவிருத்தி மீளுருவாக்கம், சேதமடைந்த அரச கட்டட புனரமைப்புக்கள் இவ்வாறு தினசரி ஒரு மாற்றத்தைக் காட்டி நிற்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் மக்கள் எந்நேரமும் ஒய்வில்லாத உழைப்பாளிகள் என்பதற்கு சான்றானது. இத்தகைய மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காக அபிவிருத்திப் பாதையில் கிளிநொச்சி மாவட்டம் பயணிக்க வேண்டியது அவசியம்.

கிளிநொச்சி மாவட்டம் என்பது பரந்த பிரதேசமாகும். வடக்கே பளையையும் தெற்கே முறுகண்டியையும் கிழக்கே பிரமந்தனாறையும் மேற்கே நாச்சிக்குடா என நீண்டு விரிந்த எல்லையுடைய பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது ஒட்டுமொத்தமாக ஏற்படுத்தப்பட வேண்டியதாகும். இது சாதாரன முயற்சி ஒன்றினூடாக அபிவிருத்தி அடைந்த ஒன்றல்ல. அசாதாரன முயற்சியினூடாக கிளிநொச்சி மாவட்டம் அபிவிருத்தி காணவேண்டியதன் அவசியத்ததை நோக்குவோம்.

பிரதேச ரீதியாக வேறுபாடான புவியியல் பின்னணிகளையும் பண்பு களையும் அபிவிருத்திப் பிரச்சினைகளையும் கொண்டுள்ளது. அபிவிருத்தி கண்டுவரும் கிளிநொச்சி மாவட்டம் இப்பொழுது கொண்டுள்ள குடித்தொகையிலும் அதிகளவான குடித்தொகையை உள்வாங்கக்கூடிய இயற்கை வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் பொருளாதார வளர்ச்சியானது பெருமளவிற்கு விவசாயத்திலேயே தங்கியிருப்பதால் நீர் வளங்களை விரிவுபடுத்தி விவசாயச் செய்கையை பன்முகப்படுத்தும் வகையில் உப உணவுப் பயிர்ச் செய்கை தென்னைச் செய்கை. விலங்கு வேளாண்மை. கரும்புச் செய்கை போன்றவற்றை மேற்கொள்வதற்கான வழிவகைகளை முன்னெடுப்பதன் மூலம் விவசாயத்துறை மீதான உற்பத்தியை அதிகரிக்க முடியும். இதன் அதிகரிப்புத் தேவையே கிளிநொச்சி மாவட்டத்தின் நிலையான அபிவிருத்திக்கு உதவக் கூடியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்வளப்பயன்பாடு என்பது திட்டமிட்ட அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்படாதிருப்பதும் இங்கு கணிக்கத்தக்கது நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பையும் அபிவிருத்தி அதிகரிப்பையும் தூண்டும் உதாரணம் குளஅமைப்பு கால்வாய் அமைப்புக்கள் நீரேந்து பிரதேசங்கள் கழிவு நீரைச் சேமிப்பதற்கான திட்டங்கள் இல்லாமையால் பெருமளவு நீர் விரயமாகின்றது. எனவே இத்துறையிலும் அபிவிருத்தி பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.நெற்செய்கையின் போது கழிவுநீராக வெளியேறும் நீரைக் கொண்டு சிறுதானியச் செய்கை அல்லது கால்நடைகளுக்கான புற்களை உற்பத்தி செய்வதன் மூலம் நீர் விரயத்தைப் பயனுடையதாக்க முடியும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் உணவு உற்பத்தியில் கணிசமான மக்களின் உணவுத் தேவையாக கடலுணவு காணப்படுவதால் இத்துறைசார் அபிவிருத்தி யையும் கட்டியெழுப்ப வேண்டும். பாரம்பரிய மீன் பிடிக் கிராமங்கள் இப் பிரதேசத்தில் இருக்கின்றன. எனினும் மன்னார் கடல் நீரேரி யாழ்குடா கடல்நீரேரிசார்ந்த மீன் பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதன் மூலம் கணிசமான மக்களை அத்தொழிலின் பால் ஈர்க்க முடியும். வடமராட்சி கிழக்குப்பகுதி சார்ந்த மக்களின் கடலுணவுச் சந்தையாக பெருமளவு கிளிநொச்சி கொண்டிருப்பதால் கிளிநொச்சி மாவட்ட வேலையாட்களை ஊக்குவிப்பதில் இன்னும் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டங்களை ஊக்குவிப்பதும் இத்துறை சார்ந்த அபிவிருத்திக்கு உதவவல்லது நன்னீர் வளர்ப்பு மீன்பிடி

கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவு உற்பத்திகள் பிற மாவட்டங்களில் வாழுகின்ற மக்களின் நுகர்வு வாய்ப்பை பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது. அதே நேரம் கிளி மாவட்ட முதலீட்டுக்காகவோ பிற பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதும் இங்கு அபிவிருத்திக்கான தளர்வையே ஏற்படுத்தும் இவ் உற்பத்திப் பொருட்களை இம் மாவட்டத்திலேயே முதலீடு செய்து நுகர்வுக்குரியதாக மாற்றும் போது பல உற்பத்தித் தொழிற்சாலைகள் உருவாகும். இதனால் பலருக்கு வேலைவாய்ப்பும் பல முதலீட்டாளர்களை உள்வாங்கவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் உற்பத்தித் துறைகளாக பலருக்கு வேலை வாய்ப்பைத் தந்த ஆனையிறவு உப்புத் தொழிற்சாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை கண்டாவளை ஓட்டுத்தொழிற்சாலை, ஸ்கந்தபுரம் கரும்புத்தொழிற்சாலை என்பவை இன்று செயலிழந்துள்ளன. இவற்றை மீள உற்பத்திக்காக கட்டியெழுப்புவதன் மூலம் இப் பகுதியின் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்பை வழங்க முடியும். அதுமட்டுமன்றி சேவைத்துறையின் வளர்ச்சியையும் வாய்ப்பு ஏற்படும். இன்னும் முதலீடுகளை தனியார் வசியப்படுத்தும் போது போட்டிச் சந்தையொன்று உருவாகி தரமான உற்பத்திப் பெருக்கமும் ஏற்பட வாய்ப்புண்டு.

இதனூடாக எதிர்பார்க்கப்படுவது முடிவுப் பொருள் சந்தை விருத்தி மட்டுமன்றி மூலப் பொருளுக்கான சந்தை விருத்தியும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். கிளிநொச்சி மாவட்டத்தின் பூர்வீகக் குடிகளைக் கொண்ட பூநகரிப் பிரதேசத்தின் வடக்கு தெற்குப் பகுதிகளுக்கிடையிலேயே அபிவிருத்தியில் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது. எனவே இப் பிரதேசத்து நீர், நில வளப் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும். மக்கள் நகர மயப்படுத்தப்பட்டு பிரதேசத்திற்குள்ளேயே அபிவிருத்தியடைந்த பகுதிகளை நோக்கி நகர்ந்த வண்ணமுள்ளனர். இதனைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் பிரதேச வேறுபாடின்றி சகல பிரிவுகளையும் அபிவிருத்தி செய்வது கட்டாயமாகும். மகாதேவாம்போதி (கேரதீவு சங்குப்பிட்டிப் பாலம்) அமைத்தது மாவட்ட வளர்ச்சிக்கான சிறந்த அடையாளம். கிளிநொச்சி மாவட்டத்தின் துரித வளர்ச்சிக்கான அபிவிருத்திக்கான ஆலோசனைகள் பற்றி நோக்குமிடத்து அண்மைய யுத்த அனர்த்தத்தினால் அனைத்தையும் இழந்துள்ள கிளிநொச்சி மாவட்டம் நிலவளத்தையும் நீர்வளத்தையும் கொண்டிருப்பது இங்குள்ள மக்கள் விரைவில் அபிவிருத்தி நோக்கி மீண்டெழுவர்கள். என்பதற்கு மீளக்குடியமர்ந்த இப் பிரதேச மக்கள் கடந்த இரு வருடங்களின் விவசாய உற்பத்தி மேம்பாடு கட்டியம் கூறி நிற்கின்றது. இலங்கை வாழ் தமிழர்களின் கணிசமான பகுதியினர் ஏதோ ஒரு வகையில் இழப்புக்களை சந்தித்தவர்களாகவும் மீண்டும் புதிய வாழ்க்கையை அமைப்பதற்காக போராடுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இத்தகையோருக்கு வாழ்வில் நம்பிக்கையூட்டி புது வாழ்வைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தின் துரித அபிவிருத்தி நோக்கி பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

அபிவிருத்தி குறிகாட்டிகளின் கல்வி. சுகாதாரம். மக்களின் வாழ்க்கைதரம் என்பன உயர்வான நிலையிலிருக்க வேண்டும். இந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலமை தேசிய ரீதியில் நடைபெற்று முடிந்த 2011 இன் க.பொ.த(சா/த) பரீட்சை முடிவுகள் இறுதி மாவட்டமாக கிளிநொச்சியை பின்தள்ளியுள்ளது. அண்மைக் காலத்தில் முற்றுமுழுதாக சிதைவுற்ற ஒரு மாவட்டத்தை ஏனைய மாவட்டப் பெறுபேற்றுடன் ஒப்பிட்டு விமர்சிப்பவர்கள் அதனை விடுத்து மீண்டும் எழும் வழிகளைக் கண்டறிய வேண்டும். போர் நிகழ்ந்த காலங்களில் கல்வி என்பது கட்டுக்கோப்பான பாதையில் சென்றமையை யாரும் மறுப்பதற்கில்லை போக்குவரத்து தளர்வு நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி அல்லது பாவனை பெற்றோரின் பிள்ளைகள் மீதான கட்டுப்பாடற்ற தன்மைகள் பாடசாலைகளின் பௌதீக வளப் பற்றாக்குறை ஆசிரியர் வளப் பற்றாக்குறை அல்லது பொருத்தமான ஆசிரியரின்மை வீடுகளின் அடிப்படை வசதிகளற்ற தன்மை இப்படியே பல்வேறு காரணங்களை கல்வி பின்சென்றமைக்காக நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் இவை யதார்த்தமாயினும் இவற்றிற்கான தீர்வினை உடனடியாக நாம் கண்டேயாக வேண்டும்.

கிளிநொச்சி தனி மாவட்டமாகி ஏறக்குறைய இருபத்தி எட்டு வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னமும் இப்பிரதேசத்திற்குரிய கல்வியைத் தீர்மானிப்பதில் யாழ் மாவட்ட ஆளணியே ஆதிக்கம் செலுத்துகின்றது. பிரதான பாடங்களைப் பொறுத்த வரையில் (கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு) ஆசிரியர் வளமென்பது பற்றாக்குறையாகவேயுள்ளது. A9 வீதிக்கு கிழக்கே. மேற்காக தூரம் பரந்து செல்லச் செல்ல மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பதிலாக அவர்களின் நேர அட்டவணையில் X, Y, Z எனவே இத்தகைய பாட ஆசிரியர்களைக் காண்கின்றனர். எனவே மாவட்டத்தின் பிரதேச ரீதியான கல்வி அபிவிருத்தி பற்றி அனைவரும் சிந்தித்து செயற்பட வேண்டும். இத்தகைய குறைபாட்டைத் தீர்க்கும் வகையில் உள்ளூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளணியை உருவாக்க வேண்டும். நவீன கற்பித்தல் முறைமைக்கு அமைய ஆய்வுகூடம் வகுப்பறைச் சூழல்கள் எல்லா மாணவர்களுக்கும் கிடைப்பதை உயரதிகாரிகள் உறுதிப்படுத்துவது அவசியம். இடமாற்றமாயினும் சரி புதிய நியமனம் ஆயினும் சரி A to Z வரை மேலதிகாரிகளின் சிபாரிசுக் கடிதங்களுடன் A9 வீதிப்பாடசாலைகளை தேவைக்கதிகமாக அலங்கரித்துக் கொள்ளும் போது ஒட்டுமொத்தமான மாவட்டக் கல்வியில் எவ்விதம் அபிவிருத்தியைக் காண முடியும்?

கல்வி என்பதனூடாக அடிப்படை எழுத்தறிவு தம்மைத் தாமே அபிவிருத்தி செய்து கொள்ளக் கூடிய சிந்தனை ஆற்றல் என்பவற்றை வளர்த்தெடுக்க வேண்டும். அரசியல் தலையீடுகள், உயரதிகாரிகளது அனுசரணை முதலானவை இன்றைய கல்வியை பின்தள்ளி வருகின்றது. நகர்ப்புறம் சார்ந்த பாடசாலைகளில் ஆளணி மேலதிகமாக காணப்பட கிராமப் பாடசாலைகள் பற்றாக்குறையாகவே இருந்து கொண்டிருக்கின்றது. ஆளணிக்கான ஊக்கவிப்புக்களை வழங்கியேனும் கல்வியில் சமவாய்ப்பை மாவட்டப் பிள்ளைகள் அனைவரும் பெறுவதன் மூலமே கல்வியில் வளர்ச்சியை காணமுடியும். பக்கசார்பான பிரதேசம் சார் அபிவிருத்தியை விடுத்து ஒட்டுமொத்த மாவட்டம் சார்ந்த அபிவிருத்திக்கு அத்திவாரம் இடவேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி நோக்கிய படிக்கல்லுக்கு இங்கு அமைய உள்ள விவசாய பீடமும் பொருளியல் பீடமும் கட்டியம் கூறி நிற்கின்றது. இப்பீடங்கள் இங்கு அமைவதில் இன்று கிளிநொச்சி மாவட்ட ஆளணியிலும் யாழ்மாவட்ட ஆளணியே இதற்கான காலங்களை பின்னகர்த்துவதிலிருந்து நாம் எவ்வளவு துரிதமாக இத் துறை சார்ந்தவர்களை உருவாக்க வேண்டிய தேவையெழுந்துள்ளமையை அனைத்து கல்வியியலாளர்களும் உணர்ந்துள்ளனர். இப் பீடங்களின் வருகையை கிளிநொச்சி மாவட்டத்திற்கு கொண்டு வருவதற்கு நேர் மனப்பாங்குடன் உழைக்கும் நல்ல மனிதர்களும் இங்கு உள்ளனர் என்பது மகத்தானதே.

சுகாதார மருத்துவ நிலைமைகளை பொறுத்தவரை பாலியல் துஸ்பிரயோகம் சிசுக்களின் கொலை. கட்டாயக் கருக்கலைப்பு வன்முறை துன்புறுத்தல்கள் என நிதமும் எமது மாவட்டத்தின் துயரம் நீண்டு செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட ரீதியான ஆளணிப் பற்றாக்குறைவினால் கிராமப்புற வைத்தியசாலைகள் இன்று மூடுவிழாக்காணும் கட்டடங்களாகவேயுள்ளன. உடனடி வைத்திய வசதிக்காக பல மைல்கள் மக்கள் செல்ல வேண்டிய நிலமை. குடியேற்றத்தின் போது மக்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய அமைவிடங்கள் இன்மையால் பலரும் பலவித உயிராபத்து அச்சுறுத்தலுடன் வாழ்கின்றனர். இந்நிலமையை தவிர்க்கும் வகையில் கிராம சேவகர் பிரிவு தோறும் சுகாதார குழுக்களை அமைத்து பொருத்தமான ஆளணியை நியமித்து அர்ப்பணிப்புள்ள இயங்கு நிலைக்குக் கொண்டு வந்து கிராமங்களை விழிப்புணர்வு ஊட்ட வேண்டும்.

சகோதர மொழி மருத்துவர்கள் தாமாக விரும்பி வந்து கடமை ஆற்றும் போது, இம்மாவட்டத்தைப் சொந்த மாவட்டமாக கொண்டு பல்வேறு வளப்பற்றாக்குறைக்குள்ளும். போராடி கல்வி கற்ற வைத்தியர்கள் பலர் வசதியான மாவட்டத்தில் தமது தொழிலைத் தக்கவைத்துக் கொள்ளப்பாடுபடுகின்றார்கள். இந் நிலமை உடனடியாக மாற்றப்பட்டு இவர்கள் ஏனையவர்களுக்கும் முன்மாதிரியாகத்திகழும் வகையில் தமது சொந்த மாவட்டத்தில் கடமையாற்ற முன்வரவேண்டும். இதன் போது மேன்மக்களாக மதித்து சமூகச் சீரழிவிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்கும் காட்டுப்பாடு உருவாகும்.இதற்கு அரச உயரதிகாரிகளே நடவடிக்கையெடுக்க வேண்டும்.

மக்களின் வாழ்க்கைத்தரத்தைப் பொறுத்தவரையில் நடுத்தர மக்களோடு ஒப்பிடுமிடத்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் தொகையே இங்கு அதிகம். இவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் சுய தொழில் வேலைவாய்ப்புக்களை வழங்கவேண்டும். நிறுவனங்களையும் உதவு தொகைகளையும் நம்பி வாழும் மனநிலையை மாற்றி சொந்தக்காலில் நின்று உழைத்து முன்னேறும் மனப்பாங்கை உருவாக்க வேண்டும் விதவைகள் ஊனமுற்றவர்களது வாழ்வாதரத்தை மேம்படுத்தும் வகையில் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இடம்பெயர்வினால் வீடுகளை இழந்தவர்களுக்கான வீட்டுக் கடன்திட்டங்களைப் பெற்ற மாவட்டங்களில் அக் கடன்களை மீளச் செலுத்தியதில் கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம் முதல் நிலையிலிருப்பதாக அரச செயலக செய்திகள் கோடிட்டுக்காட்டியிருப்பது மக்களின் வாழ்வாதார மேம்பாட்டை காட்டி நிற்கின்றது.யுத்தத்தின் முன்பிருந்த நிலைமைக்கு ஏற்ப அனைத்து மக்களுக்கும் பாரபட்சமின்றி வாழ்வாதார திட்டங்களை வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.

மேலும் கிளிநொச்சி மாவட்டடத்தின் வளர்ச்சிக்கு இடம் சார்ந்த அபிவிருத்திப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். போக்குவரத்து ஒழுங்கமைவு குடியிருப்பு அமைவிடம் கைத்தொழில் இடஅமைவு சேவை வழங்கும் நிலையங்களின் இடஅமைவு நகராக்கம் முதலானவை ஒழுங்கமைக்கப்பட்ட தன்மையில் காணப்படாதிருப்பதும் சிறப்பானதன்று. A9 வீதியின் வடக்கே தெற்காக ஏறக்குறைய ஐந்து அல்லது ஆறு கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டதாக நகராக்கம் காணப்படுவது பல அசௌகரியங்களை மக்களுக்கு வழங்குகின்றன. சேவைநிலையங்கள் போக்குவரத்து வசதிக்கு ஏற்ப ஒழுங்கமைக்கப் படுவதும் அவசியமாகின்றது.

நகர வளாச்சிக்கு சமூக அந்தஸ்து என்பது பிரதானமானது. இங்கு தொழில்பார்க்கும் ஒவ்வொருவரும் தமது குடும்பங்களை யாழ்ப்பாணத்திலோ அல்லது வவுனியாவிலோ தங்கவைத்துள்ளனர். இது ஒரு அபிவிருத்திசார் பண்பாகக் கொள்ள முடியாது. எனவே சமூக அந்தஸ்த்தை மேம்படுத்தும் வகையில் குடியிருப்பு வசதிகளையும் உடகட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும். மத்திய தர வகுப்பினர் குறைவாக வாழும்மிடத்து கல்வி. சுகாதாரம் வளர்ச்சியடையாது. எனவே நகரத்தை அண்மித்த பிரதேசஙங்களில் மத்தியதர வகுப்பினருக்கான குடியிருப்புத்திட்டங்ககளை அமைக்க வேண்டும்.

பூநகரி, அக்காரயன், பளை, முதலானவற்றை சிறு நகரங்களாக அவிருத்தி செய்ய வேண்டும். வன்னிப் பெருநிலப்பரப்பின் தலைமை நிலையமாக விளங்கும் கிளிநொச்சி மாவட்டத்தை வட்ட வடிவிலான நகர ஒழுங்கமைப்பிற்கு உட்படுத்தி சிறு சேவை நிலையங்களை ஒருமுகப்படுத்த வேண்டும். சிறுகைத்தொழில்களை விரிவுபடுத்த வேண்டும். தென்னை கைத்தொழில்களாகக் கொள்ளக் கூடிய பளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டக்கச்சி, கோணாவில் போன்ற பிரதேசங்களில் இத் தொழிற் துறையை ஊக்கப்படுத்த வேண்டும்.

அபிவிருத்தித் தடையாக இருப்பதில் பிரதானமான காரணியாக நிரந்தர வீதிகள் அமைக்கப்படாமல் இருப்பதும் கவனிக்கத்தக்கது. கிரவல் வீதிகளை அமைப்பதால் மண் அகழ்வால் இயற்கை சமனிலை பாதிப்பு ஒரு புறம் மக்களின் சுகாதாரத்திற்கு கெடுதி மறுபுறம் இன்னும் காடழிப்பு, மண்ணகழ்வும், இம்மாவட்டத்தின் வளங்களை பிற மாவட்டத்தினர் அபகரிப்பது இல்லாதொழிக்க வேண்டும். காடுகளில் உள்ள பாலை மரங்களை வகை தொகை இன்றி அழித்தமையால், இன்று பாலைப் பழக் காலங்களில் சுயதொழிலாகக் கொண்ட பாலைப்பழ வியாபாரிகளும் காணி உற்பத்தியாளர்களும் இன்று தொழில் இழந்தவர்களாக காணப்படுகின்றனர்.

இன்னும் முயற்சியுள்ளவனிடம் நிலமென்பது இல்லாதுள்ளது. முதலுள்ளவர்கள் நிலங்களைக் கொள்வனவு செய்து நிலச் சொந்தக்காரர்கள் என்ற அந்தஸ்த்தோடு வெளிமாவட்டங்களிலேயும் நாட்டிற்கு வெளியேயும் வாழுகின்றார்கள். இத்தகையோரது நிலங்கள் பயன்பாடின்றி தரையாகக் கிடக்கின்றன. இதனால் பாதுகாப்பற்ற சூழலும் சமூக விரோதச் செயல்களும் (கசிப்புக் காய்ச்சுதல், பிறழ்வான நடத்தை, கால்நடைகளை வெட்டுதல்) நிகழ்வதற்கு வாய்ப்பாகவுள்ளது. இவை பற்றியும் கவனஞ்செலுத்த வேண்டும். இடம்பெயர்ந்து மீளக் குடியமராது இப்பிரதேசத்திற்கு இன்னும் வராதிருக்கும் மக்கள் குடியேற உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தியில் உட்கட்டுமான அபிவிருத்தியாக வீதி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி, மின்சாரம், தொலைத் தொடர்பு, சுகாதாரம், கல்வி, சமூகப்பாதுகாப்பு முதலானவற்றின் மீது கவனம் செலுத்துகையில் தனியார் முதலீடு, அரச முதலீடு கூட்டுத்தாபனங்களின் முதலீடு என்பவை மாவட்டத்திற்குள் உள்வர வாய்ப்பு ஏற்படும்.

எனவே தொகுத்து நோக்குமிடத்து கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி நோக்கிய பாதையில் இப்பிரதேசத்துப் புவியியல் பின்னணியில் மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்களாக உள்ள நெற் செய்கை, சிறுகைத்தொழில் இயங்காதிருக்கும் தொழிற்சாலைகளின் உற்பத்தி உருவாக்கம் என்பன கவனிக்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டம் விவசாய உற்பத்திப் பொருட்களை கொண்டிருப்பதால் நெகிழ்ச்சி குறைந்த தன்மை சந்தையில் அடிக்கடி ஏற்பட வாய்ப்பு உண்டு. இந்நிலையில் உற்பத்தியாளனை பாதிப்புறாத வகையில் பாதுகாக்க வேண்டும். பதனிடல் தொழில் ஊக்குவிக்கப்பட வேண்டும்.தரமான கடல் உணவுகள் இம்மாவட்ட மக்களால் நுகரப்படாது இடம்பெயர்வதையும் தடுக்க வேண்டும்.

04939

பனை, தென்னை காட்டுத் தொழில் கட்டுமானப் பணியாளர்கள் உருவாகும் வகையில் தொழில் சார் கல்வி வளர்க்கப்பட வேண்டும் ஏற்று நீர்ப்பாசன முறைமை நடைமுறையில் இருந்த அக்கராயன் திருவையாறு முதலான பிரதேசங்களோடு ஏற்ற வேறு பிரதேசங்களையும் இனம் கண்டு அபிவிருத்தி செய்ய வேண்டும்.

விலங்கு வேளாண்மை உற்பத்தி இங்கு உள்ள போதும் முறையான மேய்ச்சல் தரை இல்லாதிருப்பதும் ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள் குடியேற்றத்திட்டங்களாக மாறியுள்ளமை இவ் உற்பத்தியை பின்தள்ளியுள்ளது. சட்ட விரோதமான காடழிப்பு, முறையான பாதுகாப்பு இன்மையால் விரைவில் எரிபொருள் மீதான தட்டுப்பாடும் ஏற்படும் வாய்ப்புள்ளது. உள்நாட்டு வங்கிக் கடன்கள் எல்லோருக்கும் ஆசை காட்டி வாகனங்களை கொள்வனவு செய்ய தூண்டியுள்ளது. மிக குறுகிய காலத்தில் பணம் சம்பாதித்து நிமிர நினைக்கும் இளைஞர்கள் தமது நீண்ட காலத்தை சிந்திப்பதில்லை. இதனால் அவர்களது குடும்ப அமைதி, சந்தோசம் சீரழிந்து தற்கொலை வரை கொண்டு செல்கின்றது. இவை பற்றிய விழிப்புணர்வோடு நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் சாதக பாதக விளைவுகள் பற்றியும் சிந்திக்க வழிப்படுத்த வேண்டும்.

விவசாயம், மீன்பிடித்தொழில், சிறுகைத்தொழில்துறைகள் இயங்காதிருக்கும் தொழிற்சாலைகளின் மீளுருவாக்கம் என்பது கவனிக்கப்படவேண்டியனவாக உள்ளமை இக்கட்டுரையூடாக கண்டறியப் பட்டுள்ளது. அதேபோல துரித வளர்ச்சிக்கான ஆளணி, ஆற்றல், மேம்பாடுகள், கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் என்பவற்றின் மீதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக கவனம் பற்றியும் எடுத்தாராயப்பட்டுள்ளது. ஆளணிக்கான வசதி வாய்ப்புக்கள், தேவைகள் ஊக்குவிப்புக்கள் மூலம் வினைத்திறனான செயற்பாடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இன மத அரசியல் பேதமின்றி எல்லோரும் கை கோர்த்தால்தான் துரித அபிவிருத்திப்பாதையை நோக்கி கிளிநொச்சி மாவட்டத்தை கொண்டு செல்லலாம் என்பது வெளிப்படையான ஒன்று. அபிவிருத்தி பற்றி பேசும் பலர் விரும்பியோ விரும்பாமலோ கிளிநொச்சி வாழ் மக்களை கூலித் தொழிலாளர் சந்தையாகவோ, அல்லது பரிசோதனைக் களமாகவோ பார்க்காது ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

"உலகத் தண்ணீர்த்தொட்டிக்குள் சிறு உருண்டையாகத் தெரியும் இலங்கை" இன்று உலகின்பால் கவனத்தை ஈர்த்திருப்பது போல, இன்று கிளிநொச்சி மாவட்டமும் தனது துரித அபிவிருத்தியால் நாளொரு வண்ணம் பொழுதொரு வண்ணமாக மாற்றங்களைக் காட்டி வரவேண்டும். இம் மாற்றங்கள் புதிய தீந்தைப்பூச்சுக்களால் புனரமைக்கப்படும் கட்டிடங்களாக அன்றி நிலை பேறுடைய அபிவிருத்தியாக வேண்டும். இம் மாற்றங்கள் நிச்சயம் எம்மக்களின் வாழ்வாதாரத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தி நிரந்தரமான அபிவிருத்தியை குறுகிய காலத்தினுள் தன்னகத்தே கொண்ட ஒரு மாவட்டமாகத் திகழும் என்பது நம்பிக்கை ஒளிக்கீற்றுடன் பயணிப்போம் அபிவிருத்திப் பாதையை நோக்கி என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் இடம்பெற்ற கட்டுரை

# கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதன் சாதக பாதக விளைவுகள்

திருமதி. சுரேஸ்குமார் நிலாகினி
*முகாமைத்துவ உதவியாளர்,*
*மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.*

கைத்தொலைபேசி என்பது இன்றைய காலத்தில் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த ஒரு அத்தியாவசிய பொருளாக மாறிவிட்டது. உண்பது உறங்குவது போல் மக்கள் வாழ்வியலோடு மிக மிக நெருங்கிவிட்டது.

முதன் முதலாக 1946ம் ஆண்டு கையடக்க தொலைபேசி அறிமுகம் செய்யப்பட்டிருப்பினும், 1973.04.03 ம் திகதி ஆர். மாட்டீன் கூப்பர் என்பவராலேயே செயற்படுதிறன் கொண்ட கைத்தொலைபேசி கண்டு பிடிக்கப்பட்டது. மாட்டீன் கூப்பர் நியூயோர்க் நகர வீதியில் இம் "மோட்டரோலா" வகைக் கைத்தொலைபேசியை பயன்படுத்திக்கொண்டு செல்ல மக்கள் வெள்ளம் திரண்டு வந்து வேடிக்கை பார்த்ததாக பழைய விஞ்ஞான நூல்கள் செப்புகின்றன. இன்று கைத்தொலைபேசியற்று வீதியில் செல்வோரைத்தான் வேடிக்கை பார்க்கும் அளவிற்கு மக்கள் வாழ்வோடு இணைந்த பொருளாக இக்கைத்தொலைபேசி அமைந்துள்ளது.

இவ்வாறு மக்கள் வாழ்வுடன் பின்னிப்பிணைந்த கையடக்க தொலைபேசிப் பாவனையால் பல்வேறு நன்மைகள் விளையும் அதே வேளை பாரிய அளவில் தீங்கு பயக்கக்கூடிய விளைவுகளும் ஏற்படுகின்றன.

**முதலில் கைத்தொலை பேசி மூலம் ஏற்படும் நன்மைகள் பற்றி எடுத்து நோக்குவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொலைபேசியானது எந்நேரமும் எம்கையிலோ அல்லது அருகிலோ காணப்படுவதால் எங்கிருந்தாலும் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அதனூடாக தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடிகிறது. அத்துடன் ஒவ்வொருவருக்கும் அவரவர் தொழிலிற்கு ஏற்றவாறு பக்கபலம் சேர்க்கின்றது. உதாரணமாக வியாபாரத் துறையில் மற்றைய நிறுவனங்கள், பங்குதாரர்களுடன் தொடர்புகொள்ளுதல், தொழிலாளர்களுடன் தொடர்புகொள்ளுதல், வங்கி நடவடிக்கைகள் மற்றும் நுகர்வோர் தொடர்புகள் என பல்வேறு வழிகளில் உறுதுணையாக அமைகின்றது. அலுவலக ரீதியில் அவசரமானதொரு கலந்துரையாடலின் நிமித்தம் அலுவலரொருவரை அழைக்கவோ, தெரிவிக்கப்பட்டதோர் அழைப்பை இரத்துச் செய்யவோ அல்லது மிக முக்கியமானதோர் தரவு வேண்டுகையின் நிமித்தமோ குறிப்பிட்ட நபர் அலுவலகத்தில் இல்லாத சந்தர்ப்பத்தில் அவரைத் தொடர்புகொள்ள இக்கைத்தொலைபேசியே உதவி புரிகின்றது. கையிற்கு அடக்கமான சிறிய பொருளாக இருப்பதால் எந்நேரமும் எம்முடன் எடுத்துச் செல்வதில் சிரமம் தோன்றுவதில்லை இதனால் கிடைக்கின்ற அழைப்புக்களைத் தவறவிடாது அனைத்திற்கும் விடையளிக்கக்கூடிய சந்தர்ப்பங்களே பெரும்பாலும் அமைகின்றன.

தற்பொழுது பாவனைக்கு வருகின்ற கைத்தொலைபேசிகள் உரையாடுதல் மற்றும் குறுஞ்செய்தி அனுப்புதல் தவிர்ந்த பல்வேறுபட்ட தொழிநுட்ப சேவைகளைத் தம்மகத்தே கொண்டதாக இருக்கின்றன. கீழ்வரும் சேவைகளை இதற்கு உதாரணங்களாகக் கொள்ளமுடியும்.

- புகைப்படம் எடுத்தல் (Camera)
- காணொளியாக்கம் (Vidio)
- வானொலி (Radio)
- கணிப்பான் (Calculator)
- நினைவூட்டற் கடிகாரம் (Alarm Clock)
- மீள்நினைவூட்டி ( Reminder)
- இணைய வலையமைப்பு வசதிகள் ( Internet )
- பதிவு செய்தல் ( Voice Recording)
- விளையாட்டுக்கள் (Games)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒளிபாய்ச்சு வசதிகள் ( Phone Light)

அரிதாகக் கிடைக்கக்கூடியதான ஒரு காட்சியைத் தற்செயலாக காணநேரும்பொழுது புகைப்படக் கருவிக்காக அலையவேண்டிய தேவை யில்லை. இவ்வசதியைக்கொண்ட கைத்தொலைபேசியினாலேயே உடனடி யாக அக்காட்சியைத் தெளிவாகப் படம்பிடித்துக்கொள்ள முடிகின்றது. இதே போன்றே காணொளியாக்கத்தின் தேவையும் செயற்பாடும் அமைகின்றது.

"ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது" என்று எம் முன்னோர் சொல்லியிருக்கின்றார்கள். கைத்தொலைபேசியின் சேமிப்பு மென்பொருளில் மனதிற்குப் பிடித்த பாடல்களையும் காணொளிகளையும் சேமித்து வைப்பதன் மூலம் களைப்புடன் வேலை செய்கின்ற சந்தர்ப்பத்திலும் நீண்ட தூரம் துவிச்சக்கர வண்டியில் பயணஞ்செய்கின்ற சந்தர்ப்பத்திலும் மனஇறுக்கம் உண்டாகின்ற பொழுதும் மனதை இலகுவாக்கும் நிமித்தம் அவற்றைக் கேட்டும் கண்டும் மகிழக்கூடியதாக இருக்கும். அத்துடன் இதே போன்றே மனதை இலேசாக்கும் தொழிற்பாட்டை மேற்கொண்டு உற்சாகமாகப் பொழுதைக் கழிப்பதற்கு வசதியாக பல விளையாட்டுக்களும் கைத்தொலைபேசியில் சேமிக்கப்பட்டுள்ளன.

கைத்தொலைபேசிகள் எந்நேரமும் எமது கையிலேயே இருப்பதனால் விபத்து, சுகயீனம் போன்ற அவசர மற்றும் ஆபத்து வேளைகளில் நோயாளர் காவு வண்டி, தீயணைப்புப் படை, காவல் துறையினர் மற்றும் உறவினர் போன்றோரிற்குத் தகவலளிக்க முடிகின்றது.

கைத்தொலைபேசிகளில் நினைவூட்டி வசதி காணப்படுவதால் முக்கியமான கூட்டங்கள், முக்கிய நிகழ்வுகள், பிறந்த நாட்கள் மற்றும் நினைவுபடுத்த வேண்டிய முக்கிய நாட்கள் என்பவற்றை நினைவூட்டியில் சேமித்து வைப்பதன் மூலம் மறப்பதனால் ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

கைத்தொலைபேசிகளில் இணைய இணைப்பினை ஏற்படுத்தும் வசதிகள் காணப்படுவதால் கணணி இல்லையே என்ற பிரச்சினைக்கு இடமற்றுப்போகின்றது.பாடசாலை மாணவர்களும் வேறு கற்கை நெறிகளில் ஈடுபட்டிருப்போரும் தத்தம் துறைசார் கல்விக்கான மேலதிக தகவல்களைத் தேடிப்பெற்றுக்கொள்வதன் நிமித்தம் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். அத்துடன் இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள புதிய செய்திகளையும் கைத்தொலைபேசியூடாகவே படித்து அறிந்துகொள்ள முடியும். அத்துடன் இலத்திரன் தபால் (e-mail) அனுப்புதல் பெற்றுக்கொள்ளல் போன்ற செயற்பாடுகளிற்காக இணைய சேவை நிலையங்களிற்கு செல்ல வேண்டிய தேவையும் குறைக்கப்படுகின்றது.

இணையப்பாவனை வசதி கைத்தொலைபேசியுடன் இணைக்கப் பட்டமை காரணமாக தற்பொழுது இலங்கைமுழுவதும் கல்வி, உயர்கல்வி தொடர்பான பெறுபேறுகள் வெளியாகின்றபோது பெறுபேறுகள் பாடசாலைக்கு வருவதற்கு முன்னரே இணையப்பாவனைக் கணணிகளை நாடவேண்டிய அவசியமின்றி வீட்டிலிருந்தபடியே தொலைபேசி எண் அட்டை (Sim card) நிறுவனக்குழுமம் அறிவிக்கின்ற இலக்கத்திற்கு குறுஞ்செய்தி அனுப்பி தத்தம் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடிகின்றது.

கைத்தொலைபேசியில் இணையப்பாவனை வசதி ஏற்படுத்தப்பட் டுள்ளதால் நன்மை தீமை இரண்டுமே விளைகின்றது. தகவல் திரட்டுதல் நன்மையாகின்ற அதேவேளை வேண்டாத காட்சிகள் காணொளிகளைப் பார்த்தல் தீமையாக அமைகின்றது. இது பற்றி ஏலவே நோக்கியுள்ளோம். மேற்படி விளைவுகள் இணையப்பதிவிறக்கத்தின மூலம் உண்டாகும் அதேவேளை, கைத்தொலைபேசியூடாக இணையப்பதிவேற்றம் செய்வதாலும் மேற்படி இரண்டு விளைவுகளும் ஏற்படுகின்றன. வீதியிலோ அல்லது வேறு பொது இடங்களிலோ பொதுமக்கள் விரோதச் செயலோ, அன்றேல் கலாச்சார சீரழிவைத்தூண்டுகின்ற செயலோ எதுவாயினும் இடம்பெறுகின்ற போது கையடக்கத்தொலைபேசி மூலம் பிரச்சினைக்குரிய வர்களிற்குத் தெரியாமலே படம்பிடித்து விடுகின்றார்கள். வீதிச்சண்டைகள், மதுபானச்சாலைச் சச்சரவுகள், பேரூந்துகளில் ஓட்டுனர் நடத்துனர், பயணிகளிற்கிடையான முரண்பாடுகள், பெண்களிற்கெதிரான துஷ்பிரயோக எத்தனிப்புக்கள் மற்றும் இவற்றையொத்த செயற்பாடுகளை உதாரணமாகக் கொள்ளலாம். இவற்றைப் படம்பிடித்த பின்னர் அன்றையதினமோ அல்லது அதற்கடுத்த நாளோ உள்ளூர் இணையத்தளங்களில் பெயர் விபரங்களுடன் பதிவேற்றி விடுகின்றார்கள். இச்செயற்பாட்டால் மேற்படி சமூகவிரோதிகள் வெளியே முகங்காட்ட முடிவதில்லை. இதனால் சமூக விரோதச் செயற்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் கலாச்சார சீரழிவைத் தூண்டும் செயற்பாடுகளும் ஓரளவேனும் கட்டுப்படுத்தப்படுகின்றது. எங்கே நின்று யார் படம் பிடிக்கிறார்களோ என்ற சிந்தனையே இத்தகையோரிற்கு இப்பொது ஏற்படுகின்றது. அனைவரும் கைத்தொலைபேசியுடனே செல்வதால் எந்தப்புற்றில் பாம்பென அறியாத சமூக விரோதிகள் சற்றேனும் பயந்து நடப்பார்கள் என்பது உண்மை. இருப்பினும் இதே ஆயுதத்தை கையிலெடுக்கக்கூடிய சமூக விரோதிகள் இணையத்தில் உலவவிடக்கூடாத காணொளிகளைப் படம் பிடித்து சமூகவிரோத இணையத்தளங்களில் உலவவிடமாட்டார்கள் என்பதில் என்னதான் நிச்சயம்? எனவே எதிர்காலம் நோக்கிய வகையில் இதனை தீங்கெனக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளன.

தற்பொழுது கைத்தொலைபேசி மூலம் வீட்டிலிருந்தபடியே விமானச் சீட்டுக்களிற்கான பதிவுகளை மேற்கொள்ள முடிகின்றது. அத்துடன் இலகு கட்டண முறைமூலம் (Pay Easy) காப்புறுதி மற்றும் இதர தவணைப் பணங்களை செலுத்திக்கொள்ள முடிகின்றது. இதன்மூலம் தேவையற்ற பயணங்கள் தவிர்த்துக்கொள்ளப்படுவதுடன் இலகுவாழ்க்கைமுறை ஏற்படுத்தப்படுகின்றது.

மேலும் கைத்தொலைபேசியின் குறுஞ்செய்தி சேமிப்பகத்தில் மிக முக்கியமான முகவரிகள், குடும்ப அங்கத்தவர்களது தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் , பிறப்பு, திருமண சான்றுப்பத்திர இலக்கங்கள் போன்ற முக்கிய இலக்கங்களைச் சேமித்து வைக்கக்கூடிய வசதி காணப்படுகின்றது. இதனால் இவ்விலக்கங்கள் அவசரமாகத் தேவைப்படுகின்ற தருணங்களில் பதட்டப்படாது கருமமியற்ற முடியும்.

பணக்கொடுக்கல் வாங்கல் நம்பிக்கை, மோசடி, மற்றும் உறுதிப் பத்திரங்கள் தொடர்பான ஏமாற்ற வேலை தொடர்பில் சம்பந்தப்பட்ட நபருடன் உரையாடும்போது மோசடி செய்தவரை தூண்டி விட்டு அவர் வாயினாலே உண்மைகள் வெளிவருகின்றபோது அவர் சொல்பவை யாவற்றையும் அப்படியே பதிவு செய்யக்கூடிய வசதி கைத்தொலைபேசியில் காணப்படுவ தால், சட்டரீதியாக பிரச்சினைகளிற்குத் தீர்வுகாணவிளையும்போது நிரூபிக்கத்தகு சாட்சிகளை சமர்ப்பிக்க முடிகின்றது.

இரவு நேரங்களில் பயணம் செய்வோர் தம்முடன் கைத்தொலை பேசியை வைத்திருப்பதால் பாதுகாப்பின் பொருட்டு ஒளிபாய்ச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியாக ஒளிபாய்ச்சு கருவி இணைக்கப்பட்டுள்ளது. இவ்வசதி இணைக்கப்படா துள்ள கைத்தொலைபேசிகளில் அவற்றின் திரை வெளிச்சத்தின் உதவியுடனேயே நடமாட முடிகின்றது. பாதசாரிகளிற்கு மட்டுமன்றி வாகனங்களில் செல்வொருக்கும் கைத்தொலைபேசி வெளிச்சம் உறுதுணை புரிகின்றது. வாகனத்தில் ஏதாவது சிக்கல் ஏற்படுகின்ற போது கீழிறங்கி அதனைச் சீர்செய்வதற்கு வேறு ஒளிபாய்ச்சு கருவிகளை எடுத்துவராத சந்தர்ப்பத்தில் கைத்தொலை பேசியே கைகொடுத்து உதவுகின்றது.

குடும்ப ரீதியாகவோ அல்லது அலுவலக ரீதியாகவோ குறிப்பிட்ட ஒரு கருமத்திற்காக செல்லவேண்டிய நேரத்திற்குச் செல்ல முடியாது எதிர்பார்க்காத வகையிலான தாமதங்கள் ஏற்படும் பட்சத்தில் சூழ்நிலையினை உடன் உரியவர்களிற்குத் தெரியப்படுத்திக்கொள்ள முடிகின்றது அதன் மூலம் தாமதத்தினால் ஏற்படும் மனமுறிவுகளை தவிர்த்துக்கொள்ள முடியும். உதாரணமாக பயணிக்கும் வாகனம் வீதியில் பழுதடையின் கைத் தொலைபெசி மூலம் உரிய இடத்திற்கு அறிவித்தல் செய்ய முடியும்.

ஒருவர் எமது கைத்தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தும் சமயத்தில் அதற்கு விடையளிக்க முடியாதவாறு நாம் ஏதாவது வகுப்பில் அல்லது கலந்துரையாடலில் பங்குபற்றிக்கொண்டிருப்பின் அழைப்பின் காரணத்தை குறுஞ்செய்தியூடாகப் பகிர்ந்து கொள்ள முடிகின்றது. அதனால் உடன் தெரியப்படுத்த வேண்டிய விடயங்கள் அனைத்தும் தாமதமின்றி தெரியப்படுத்தப்பட்டுவிடுகின்றன.

இவ்வாறான நன்மைகள் விளையும் அதேவேளை பாரிய தீங்குகளும் இதன்மூலம் ஏற்படுகின்றது. இவைபற்றி எடுத்துநோக்குவோம்.

கைத்தொலை பேசியை பயன்படுத்தும் போது உண்டாகும் வெப்பத்தின் மூலம் கதிர வீச்சு ஏற்படுத்தப்படுகின்றது. இக் கதிர் வீச்சின் காரணமாக புற்று நோய் தாக்கம் ஏற்படுகின்றது என்பதை சுதந்திர ஆரோக்கிய கல்வியமைப்பை சேர்ந்த விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர். வெப்ப கதிர் வீச்சு காரணமாக குருதிச் சுற்றோட்டத்தில் தடை ஏற்பட்டு அதன் மூலம் மூளைக்குள் அல்புமின் கசிவு ஏற்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பத்தின் அளவை அளவிடுவதற்கு அண்ணளவாக பத்து மணித்தியாலங்கள் தொடர்ந்து இதனைப் பயன்படுத்தும் போது அதில் இருந்து பிறப்பிக்கப்படும் வெப்பத்தால் ஒரு முட்டையினை அவிக்க முடிந்ததெனும் உதாரணம் போதுமானதாக அமையும். ஒலி பெருக்கு வசதியை பயன்படுத்தி கையடக்க தொலை பேசியை உபயோகப்படுத்துவதால் மேற் குறித்த பிரச்சினைக்கு சிறிதளவேனும் தீர்வு கிட்டும்.

"புளூரூத்" எனப்படும் நுட்பத்தை கையடக்க தொலை பேசியில் பயன்படுத்தும் போது அதை பயன்படுத்தும் நபர்களது சக்தி குறை வடைந்து செல்கின்றது. வினைத்திறமை உடைய எச்செயலையும் செய்யமுடியாத சூழ்நிலை உருவாகின்றது. அதாவது இன்நுட்பத்தை பயன்படுத்துவோரது செயல் திறன் மந்தமடைந்து செல்லும் என்பது ஆய்வுகளின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கைத்தொலைபேசி பாவனையால் நேரம் விரையம் ஆவது பெருமளவு அதிகரித்துள்ளது. நண்பர்கள் உறவினர்களுடன் உரையாடுவதற்கு என அழைப்பை ஏற்படுத்தி " நேரம் பொன்னானது" என்ற முது மொழியும் மறந்து நேரம் பற்றி எண்ணாது நீண்ட நேரம் உரையாடிக்கொண்டிருப்பதால் அத்தியாவசியமாக நிறைவேற்ற வேண்டிய எத்தனையோ வேலைகளை செய்யமுடியாத சூழ்நிலை ஏற்படும். இதே போன்றே கைத்தொலைபேசி ஊடாக குறுஞ்செய்தி அனுப்புவதும் நேரவிரையத்தின் தூண்டியாக செயற்படுகின்றது. குறுஞ்செய்தியை உருவாக்குதலே நேரத்தை உறுஞ்சுகின்ற காரணியாக தொழிற்படுகின்றது.

அத்துடன் தொடர்ச்சியாக முப்பது நிமிடங்களுக்கு மேல் கைத்தொலைபேசியை பாவிப்பதனால் மூளைக்கான இரத்தோட்டத்தில் தடைப்பாடுகள் ஏற்படுகின்றது. இதனால் மூளை கல இறப்பு நோய் (Brain tumor) ஏற்படுகின்றது. வளர்ந்தவர்களிலும் பார்க்க சிறுவர்களுக்கே இத்தாக்கம் மிகுந்த அளவில் ஏற்படுவதாக உயர்நிலை விஞ்ஞான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது மட்டுமன்றி இச்செயற்பாட்டால் எம் செவிப்புலன் செயற்பாடுகளும் பாதிப்படைகின்றது. வெப்பக் கதிர்வீச்சு, மற்றும் ஒலி அதிர்வு காரணமாக செவிப்புல நரம்பு மண்டலங்கள் பாதிக்கபட்டு கேள்திறனும் பாதிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரீகம் வளர்ந்து கவர்ச்சிகரமான வாழ்வுக்கு மக்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ள இன்றைய காலத்தில் நவீன வகை கையடக்க தொலை பேசிகளை கொள்வனவு செய்வதற்கு பெரும் பணம் விரையம் ஆக்கப்படுகின்றது. விதம் விதமான வகைகளில் விதம் விதமான வடிவமைப்புக்களில் பல்வேறு வசதிகளின் கூடிய கையடக்க தொலை பேசிகள் இன்று விற்பனையாகிக்கொண்டு இருக்கின்றன. இத்தகைய தொலைபேசிகளை கொள்வனவு செய்வதற்கும் அதற்குரிய அழைப்புக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் என பெரும் தொகைப்பணம் விரையம் ஆகின்றது. ஒவ்வொரு தடவையும் மீள்நிரப்பும் போதும் அதன் தொகை தெரிவதில்லை. ஆனால், ஒவ்வொரு மீள்நிரப்பலையும் நினைவு படுத்திக்கொண்டு ஆண்டிறுதியில் கணக்கிட்டு பார்க்கும் போதே அதன் தொகை தெளிவாகின்றது. அத்துடன் இணைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள கையடக்க தொலைபேசிகளால் அவ்வசதி காரணமாக மேலதிக பணம் விரையமாவதோடு தரக்குறைவான ஆபாசமான புகைப்படங்கள், காணொளிகள் என்பவற்றை தரவிறக்கம் செய்து பார்ப்பதோடு மற்றையவர்களுக்கு காண்பிப்பதால் கலாச்சார சீரழிவு நடவடிக்கைக்கும் கைத்தொலைபேசி காரணமாக அமைகின்றது.

கையடக்கத்தொலைபேசிகளில் அவசரமற்ற விடயங்களிற்காக நேரம் பற்றிச்சிந்திக்காது அழைப்பினை ஏற்படுத்துவதால் கோபம் , வெறுப்பு போன்ற உணர்வுகளே தூண்டப்படுகின்றன. உதாரணமாக காலையில் அலுவலகத்திற்கு ஆயத்தமாவதற்காக வேலைகளை விரைவுபடுத்திச் செய்து கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் யாராவது கைத்தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தின், உரையாடுவதில் கவனஞ்செல்வதில்லை. இவ்வழைப்பினை எவ்வாறு முடிவுறுத்தவது என்றே சிந்தனை செல்லும். இதனால் கோபப்பட்டுப் பேசுகின்ற நிலைமைகள் ஏற்பட்டு மனக்கசப்புக்களிற்கு வழிகோலியாக கையடக்கத் தொலைபேசி அமைகின்றது.

*"யாகாவார் ஆயினும் நாகாக்க –காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு"*

இது வள்ளுவப்பெருந்தகையின் கூற்று. நாம் எமது நாவை அடக்கி வாழப்பழகிக்கொள்ளவேண்டும். கேலிப்பேச்சாயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைப் பேச்சாயினும் வரம்பை மீறி எமது நாவை உபயோகப்படுத்தக் கூடாது. தற்போது பல இளைஞர்களும் யுவதிகளும் தத்தம் கையடக்கத் தொலைபேசி மூலம் தம்மால் இரகசியமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டி ருக்கும் மாற்று இலக்கத்தின் மூலம் எழுந்தமானமாகத் தெரிவுசெய்யப்படும் இலக்கங்களிற்கு அழைப்பை ஏற்படுத்துகின்றனர். எதிர்முனையில் அழைப்பிற்கு விடையளிப்பவர் ஒத்த வயதுடைய அதே மொழியினைப் பேசுகின்றவராகவும், எதிர்ப்பாலாராகவும் இருக்கும் பட்சத்தில் இவ்வாறு கிடைக்கப்பெற்ற அழைப்பின் உரையாடல் பலநாட்கள் தொடர்ந்து கொண்டிருக்கும். இவ்வழியில் தேவையற்ற அன்புகளும் தேவையற்ற பிணக்குகளுமே விளைகின்றன. பிணக்குகளிற்கப்பால் முகமறியாது வளரும் இத்தகைய அன்புகளால் ஈற்றில் ஒருவரையொருவர் சந்திக்கின்ற சந்தர்ப்பத்தில் ஏமாற்றமும் அதிர்ச்சியுமே எச்சமாகிப்போவதால், விளைவு துன்பம் என்றாகின்றது. அத்துன்பத்தின் மூலகாரணம் கைத்தொலைபேசியும் தற்காத்துக்கொள்ளாத நாவுமே என்பது தெளிவு.

மற்றவர்களது கைத்தொலைபேசியினை எடுத்து அதில் சேமிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி மிகவேகமாகவும் தாகாத வார்த்தைகளாலும் அவர்களைப் பேசிவிட்டு உடனடியாக அழைப்பைத் துண்டிக்கும் செயற்பாட்டைக் கேலியாக மேற்கொள்ளும் பல நபர்கள் இன்று காணப்படுகின்றார்கள். இத்தகைய நபர்களது கையில் அகப்பட்ட கைத்தொலைபேசிக்குரியவரும் அழைக்கப்பட்ட இலக்கத்திற்குரியவரும் உண்மையினை அறிந்திராத போது வீணாண மனமுறிவுகளே ஏற்படுகின்றன. மேற்படி அழைப்பினை ஏற்படுத்துகின்ற சந்தர்ப்பத்தில் கைத்தொலைபேசி உரிமையாளரன்றி அவரது உறவினர் யாராவது விடையளிக்கின் இவ்வழைப்பின் நிமித்தம் திரிபுபடுத்தப்பட்ட கதைகளிற்கு முகம்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய சூழல் கைத்தொலைபேசி உரிமையாளரிற்கு ஏற்படும். காரணமறியாது ஒருவரையொருவர் வாழ்நாள் முழுவதும் பகைபாராட்டும் நிலைமையும் ஏற்படும். இது புனைந்தெழுதப்பட்டதொரு சம்பவமல்ல முற்றிலும் உண்மைக்கருவை மையமாக்கியதொரு சம்பவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொலைபேசி நபர்களை பொய்சொல்லத் தூண்டும் காரணி யாகவும் தொழிற்படுகின்றது. அலுவலகத்திலிருந்தோ அல்லது உறவினரிட மிருந்தோ அழைப்புக்கிடைத்து நீங்கள் எங்கிருக்கின்றீர்கள்? என வினவும் போது சந்தர்ப்பத்திற்கேற்றவாறும் அழைப்பவரின் தேவையின் நிமித்தமும் தாம் நிற்கின்ற இடம் பற்றி பெரும்பாலானவர்கள் பொய் சொல்கின்றனர். வீட்டில் இருந்தபடியே வெளியில் நிற்பதாகவம் அல்லது வந்து கொண்டிருப்பதாகவும் அலுவவலகத்தில் இருந்தபடியே வெளியில் நிற்பதாகவும் பொய்சொல்கின்றார்கள். தாம் பொய்சொல்வது பற்றி அழைப்பவர் அறிய மாட்டார் எனும் நம்பிக்கையில் அழைப்பவரைத் திருப்திப்படுத்தும் விதமாக பொய்கள் அலங்கரித்துச்சொல்லப்படுகின்றன. நாம் ஒவ்வொருவரும் இதுதொடர்பில் எம்மையே கேள்வி கேட்டுப் பார்க்கின் இவ்வாறான எத்தனை பொய்களை நாம் சொல்கின்றோம் என்ற உண்மை தெளிவாகும்.

*"பொய்மையும் வாய்மையிடத்துப் புரைதீர்ந்த*
*நன்மை பயக்கும் எனில்"*

என்று வள்ளுவரின் வள்ளுவம் சொல்கின்றது. இவ்வாறாக வாய்மையை விட நன்மை பயக்கும் சந்தர்ப்பங்களிலேயே தம்மைத் தற்காத்துக் கொள்ளற்பொருட்டே இவ்வாறான பொய்கள் சொல்லப்படுகின்றன என்ற வாதமும் ஒருபுறம் இருப்பினும் முற்று முழுதாக இவ்வாதத்தால் வெற்றிபெற முடியாது. " ஒரு குடம் பாலிற்கு ஒரு துளி விடம்" என்று சொல்லுவார்கள். அது போன்றே எவ்வளவு தான் நல்ல விடயங்கள் இதன் மூலம் விளையினும் ஒரு துளி விடம் போல சிறு தீங்கொன்றே முற்று முழுதாக இதனைத் தீங்கென்று பகரப் போதுமானதாக அமைந்து விடுகின்றது.

கணவன் அல்லது மனைவி மட்டும் அலுவலகத்திற்கு செல்கின்ற குடும்பங்களில் அவர்கள் வீட்டிலிருக்கின்ற நாட்களில் அல்லது தவறுதலாக கைத்தொலைபேசியினை வீட்டில் விட்டுச்செல்கின்ற நாட்களில் எதிர்ப் பாலாரது பெயர்களிலான அழைப்புக்கள் அலுவலக ரீதியில் அல்லது நட்பு ரீதியில் அவர்களது கைத்தொலைபேசிக்குக் கிடைக்கின்றபோது குடும்பத்தில் மற்றவரது வீணாண சந்தேகத்திற்கு ஆளாவதோடு வாய்த்தர்க்கங்கள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணக்குகள் என்பன உருவாகின்றன. அத்தோடு கணவன் அல்லது மனைவி வேற்றூரில் வசிக்கும் சந்தர்ப்பத்தில் அதில் யாராவது ஒருவர் மற்றவரது கைத்தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்துகின்ற சமயம் மற்றைய கைத்தொலைபேசி அழைப்பிலிருப்பதான அறிவித்தல் எதிர்முனையில் தொடர்ந்து கிடைக்கின்ற போது அதுவும் வீணான வாதங்களிற்கும் மன முறிவுகளிற்குமே வித்திடுகின்றுது.

ஒரு நபர் பற்றியோ அல்லது ஒரு நிறுவனம், அமைப்பு பற்றியோ வதந்தியொன்று உருவாகின்றபோது அதன் வேகமான பரம்பல் காரணியாக கைத்தொலைபேசியே விளங்குகின்றது. நண்பர்கள், உறவினர்களது கைத்தொலைபேசி மூலமாக பல மாவட்டங்கள் தாண்டி இவ் வதந்தியானது கைத்தொலைபேசி மூலம் பரம்பலடைந்து செல்கின்றது.

இக்கால இளைஞர்களும் யுவதிகளும் நகைச்சுவையான குறுஞ்செய்திகளை தமக்கிடையே அனுப்பிக்கொள்வதால் குடும்பத்தில் பெற்றோருக்கும் பிள்ளைகளிற்குமிடையேயான உறவில் விரிசல் ஏற்படுகின்றது. அண்மையில் ஒரு உயர் கல்லூரி மாணவி வேற்றூரில் வதியும் தனது சக கல்லூரித்தோழி ஒருவரிற்கு குறும்பெண்ணத்துடன் தோழி அறியாத புது கைத்தொலைபெசி இலக்கம் ஒன்றினூடாக அனுப்பிய குறுஞ்செய்தியால் விளைந்த விளைவினை உதாரணமாக நோக்குவோம். தோழியைச் சற்றுக் குழப்பத்தில் ஆழ்த்தும் நோக்கில் " இன்று ஓடிப்போகலாமா செல்லம்? " என ஒரு குறுஞ்செய்தியை அனுப்பிவிட்டு பின்னர் அதுபற்றித் தன் தோழிக்கேதும் தெரிவிக்காதிருந்து விட்டார். இச்செய்தி தோழிக்குக் கிடைத்தநேரம் வேறு வேலையாக அவர் வெளியே சென்றிருந்ததால், அவரது கோபக்கார அண்ணனே அச் செய்தியைப் படித்துப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. தன் சகோதரி உண்மையிலேயே இன்று யாருடனேயோ வெளியேறத் திட்டமிட்டுள்ள தாக எண்ணி சகோதரியைக் கடுமையாகக் கண்டித்து நித்தமும் அவரை கண்காணிக்கத் தொடங்கிவிட்டார். என்னதான் விளக்கம் சொல்லியும் அண்ணன் ஏற்றுக்கொள்வதாகவில்லை. இயல்பாக இருந்த குடும்ப உறவை கைத்தொலைபேசி சிதைவடையச் செய்தேவிட்டது. இங்கு குறும்பு இயல்புறவிற்கு வேலியாக மாற கைத்தொலைபேசியே அதன் கதிகால் ஆகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கைத்தொலைபேசி அளவில் சிறியதாக இருப்பதாலும் அதன் விசைப்பலகை இலக்கங்கள் மிகச் சிறியதாக இருப்பதாலும் வயது முதிர்ந்தோர் மற்றும் கண்பார்வை தெளிவற்றோர்களால் உபயோகப் படுத்துவது கடினமாகின்றது. கையாளும் போது இலக்கங்களை மாறுதலாக அழுத்துவதால் தொடர்பாடல் பிணக்குகளிற்கு உள்ளாவதோடு சீரான தொடர்பாடலை மேற்கொள்ள முடியாத நிலைமையும் உருவாகும்.

முக்கியமாக கையடக்க தொலைபேசிகள் கவனக்கலைப்பான்களாகத் தொழிற்படுகின்றன. வாகனம் செலுத்தியவாறு கையடக்கதொலைபேசியில் உரையாடுவதால் உரையாடுவதிலேயே சாரதியின் முழுக்கவனமும் செலுத்தப்படுகின்றது. இதனால் பாதையில் உள்ள கவனம் சிதறடிக்கபட்பட்டு விபத்துக்களுக்கு வழிகோலுகின்றது.வெளிச்செல்லும்போது கைத்தொலை பேசியோடு செல்வது தொடர்பாடலுக்கு இலகுவாக இருப்பினும் வாகனம் செலுத்தும் போது அதன் அழைப்பிற்கு விடையளிக்காது மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு வாகனம் செலுத்தும் சாரதிகள் அரிதாகவே காணப்படுகின்றனர். கைத்தொலை பேசியை வீட்டில் விட்டுச்செல்வதால் ஏற்படும் பிரச்சினைகளை விட அதை கையில் எடுத்து செல்வதாலேயே சாரதிகள் விடயத்தில் ஆபத்து அதிகம்.

பேரூந்துகள் மற்றும் உணவகங்களிலும் பலர் கூடியிருக்கும் இவ்வாறான இடங்களிலும் கைத்தொலைபேசியில் உரையாடுவதால் சூழ இருப்போரது இயல்பு நிலையில் மாற்றம் ஏற்படுகின்றது. அமர்ந்திருக்கும் இடத்திற்கு ஏற்ப கோபம், வெறுப்பு, கேலி போன்ற வெவ்வேறு உணர்வுகள் தோற்றுவிக்கப்படும் இதிலும் நெரிசல் மிகுந்த பேரூந்தில் பயணம் செய்யும் போது இவ்வகை உரையாடலை மேற்கொள்வதால் கோப உணர்வுகள் தூண்டப்பட்டு வாக்கு வாதங்கள் உண்டாகின்றன.

தற்பொழுது ஒவ்வொருவர் கையிலும் கைத்தொலைபேசி காணப்படுவதாலும் அவற்றில் பல்வேறு வசதிகள் காணப்படுவதாலும் நினைவூட்டற் கடிகாரம் போன்ற சில பொருட்களின் பாவனை அருகி வருகின்றது. கைத்தொலைபேசியில் இவ்வசதி காணப்படுகின்ற போது இது எதற்கு என்ற எண்ணமே பெரும்பாலானவர்களிடம் ஏற்படுகின்றது. ஆனால் கைத்தொலைபேசியை படுக்கையறைக்கு எடுத்துச்சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகே வைப்பதால் ஏற்படும் பாதிப்பை அறிந்து கொள்ளின் இத்தகைய நடவடிக்கையினை தவிர்த்துக்கொள்ளமுடியும். நித்திரை செய்கின்ற நேரம் கைத்தொலை பேசி எமக்கு அருகில் இருப்பதால் மெலனின் உற்பத்தி குறைவும் நித்திரை குறைவு நோயும் ஏற்படுவதை ஆய்வுகள் உறுதிசெய்துள்ளன. மேற்படி விளைவுகளால் நினைவாற்றல் பாதிப்பு மற்றும் மன அமைதிக் குறைவு என்பன ஏற்படுகின்றன.

கைத்தொலைபேசிகள் நுட்பம் மிகுந்த இலத்திரனியல் சாதனங்களுடன் தலையீடு செய்யும் தன்மை கொண்டனவாகும். வைத்திய சாலைகளில் பெரும்பாலும் அவசர சிகிச்சைப்பிரிவுகளில் உள்ள சாதனங்களுடன் இத்தகைய விளைவினை இவை காண்பிப்பதால் அங்கு கையடக்க தொலைபேசிப் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை அங்குள்ள அறிவித்தல் சுட்டிகளை வைத்தே நாம் அறிந்து கொள்ளமுடியும். இத்தகைய மின்னிரசாயன சாதனங்களை ஒத்த பல்வேறு நுட்பங்கள் எமது உடலின் நரம்பு மண்டலங்களில் காணப்படுகின்றன. தினமும் கைத்தொலைபேசிகளை பாவிப்பதனால் எமது உடலிலும் மேற்படி விளைவுகள் ஏற்படும் என்பதற்கு இது ஓர் சிறந்த உதாரணம் ஆகும். மெல்லக் கொல்லும் விடம் போல் மெல்ல மெல்லக் கொல்லும் பாதிப்பாக நரம்பு மண்டலங்களை தாக்கி வருகின்றது என்பதனை விஞ்ஞான உலகம் ஆய்வுகள் மூலம் நிரூபித்துள்ளது.

கைத்தொலைபேசியினை பாவிக்கின்ற இளைஞர் யுவதிகளிடையே குறும்பாக ஏற்படுத்தப்படுகின்ற தவறிய அழைப்புக்களால் பாரதூரமான விளைவுகள் பல ஏற்படுகின்றன. எழுந்தமானமாக தெரிவு செய்யப்பட்டு அழைத்து பேசும் எண்களூடாக குடும்ப, கலாச்சார சீரழிவுகளை தூண்டும் கருத்துக்கள் வந்தடைகின்றன. எத்தனையோ முறை தவறிய பாசங்களுக்கு கைத்தொலைபேசியே வித்தாகி நிற்கின்றதென்றால் அது மிகையில்லை.

பாடசாலை மாணவர்கள் கைத்தொலைபேசியினை உபயோகிப்பதால் அவர்களுடைய கற்றல் சூழல் பாதிக்கப்படுவதோடு கற்கும் ஆர்வமும் குன்றுகின்றது. கற்றலில் செல்ல வேண்டிய ஆர்வம் குறைந்து நண்பர்களுடன் உரையாடுதல், குறுஞ்செய்தி அனுப்புதல், பாடல் கேட்டல் காணொளிகளைப் பார்த்தல் , விளையாடுதல் மற்றும் இணையப் பாவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என பல்வேறு திசைகளில் அவர்கள் கவனம் சிதறடிக்கப்படுவதால் கற்றலில் ஈடுபடுகின்ற நேரம் குறுகிச்செல்கின்றது. இதனால் மாணவர்களின் தேர்வு மட்டம் வீழ்ச்சியடைகின்றது.

அதே நேரம் கர்ப்பவதித் தாய்மார்கள் அதிகளவில் கைத்தொலை பேசிகளை பாவிக்கும் போது பிறக்கின்ற குழந்தை நடத்தைப்பிறழ்வுடைய குழந்தையாக (Badly Behaved Child) உருவாகுவதற்கான சந்தர்ப்பம் அதிகளவில் இருப்பதாக குழந்தை மருத்துவ ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

தற்போது எமது பிரதேசத்தைப் பொறுத்த வகையில் எல்லா பகுதிகளிலும் சீரான "கவரேச்" காணப்படுவதில்லை. இதனால் தெளிவான உரையாடலை மேற்கொள்ள முடியாத சந்தரப்பங்கள் அதிகமான ஏற்படுகின்றன. இதன் பிரகாரம் பிழையான கருத்துக்கள் விளங்கிக் கொள்ளப்பட்டு பாரதூரமான எதிர் விளைவுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் பலவற்றை நாம் அறியக்கூடியதாக உள்ளது.

இத்தனை விடயங்களையும் ஆராய்ந்து நன்மைகள் தீமைகள் இரண்டினையும் இருகையிலுமேந்தி சீர்தூக்கிப் பார்க்கும்போது நன்மைகளிலும் பார்க்கக் கூடுதலான அளவு தீங்குகளே காணப்படுகின்றன என்பது முடிவு. இற்றைக்கு நான்கு ஆண்டுகளின் முன் இம்மாவட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலை மட்டுமாக எடுத்து நோக்கின் அப்போது கைத்தொலைபேசிகளைப் பாவிக்கின்ற வாய்ப்புக்கள் இம்மாவட்டத்தில் இருக்கவில்லை. இருப்பினும் ஒரு கைத்தொலைபேசி இருந்திருந்தால் நான் இவ்வாய்ப்பினை இழந்திருக்க மாட்டேன் என எண்ணுமளவிற்கு எதுவித துன்பியல் விளைவுகளும் ஏற்பட்டதில்லை. மக்கள் இயல்பாகவே இருந்தனர். இப்பொழுதும் மக்கள் இயல்பாகத்தான் இருக்கின்றனர். ஆனால் கைத்தொலைபேசியை ஓர்நாள் வீட்டில் தவற விட்டுவிட்டு வந்தாலும் ஒருகையினை வீட்டில் விட்டுவந்த உணர்வுடனேயே நடமாடுகின்றனர். காரணம் கைத்தொலைபேசியுடன் வாழும் புதுப்பழக்கம் கைவந்துவிட்டது. அது இல்லையேல் வாழ்வே கடினம் என்று எண்ணுமளவிற்கு ஆகிவிட்டது.

தற்பொழுது முதுமைக்கு முன் இறப்பவர்களின் எண்ணிக்கையில் அதிகமானோரது இறப்பின் காரணம் புற்று நோயாகவும் இன்னும் பல புதிய நோய்களாகவும் இருக்கின்றது. என்ன இது காலம் என்றும், கலிகாலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதன் விளக்கம் இதுவோ என்றும் கலங்குவதில் அர்த்தம் இல்லை. இந்நோய்களின் காரணம் தேடி அலைய வேண்டிய அவசியமும் இல்லை. கைப்புண்ணிற்கு கண்ணாடி எதற்கு? குழந்தை முதல் குமரன், குமரியும், தாத்தாவோடு பாட்டியுமாய் கதிர்வீச்சுத் தன்மையுள்ள இக் கைத்தொலை பேசிக்கே அடிமைகளாக மாறிவிட்ட காலம் இது. இதனால் இவ்வாறான , இன்னும் புதிய வடிவங்களிலான நோய்களிற்கு இலக்காக வேண்டிய துர்ப்பாக்கியமே உருவாகிக்கொண்டு வருகின்றது. எய்தவர்கள் நாம் இங்கிருக்க நோய்களைக் காரணம் காட்டி இறைவனை நோவதில் பலனேதும் விளையப்போவதில்லை என்பதே உண்மை. இத்தகைய பாரிய நோய்கள் உருவாக காரணியாக இருப்பதாலும் ,வாகன விபத்துக்களிற்கு தூண்டியாகி பெறுமதியான உயிர்கள் இழக்கப்பட வழிவகுப்பதாலும், குடும்பத்திற்குள் குழப்பங்களிற்கு வித்திடுவதாலும், கலாச்சார சீரழிவுகளிற்கு வழிசமைப்பதாலும் நன்மைகளிற்கப்பால் தீங்குகளின் பங்கே உயர்ந்து நிற்கின்றதெனக் கொண்டு, "துஷ்டனைக்கண்டால் தூரவிலகு" என எம் ஆன்றோர் அறிவுறுத்தியிருப்பதன் நிமித்தம் இவன் துஷ்டன் என அடையாளம் கண்டு தூரவிலகுதல் எமக்கும் எம் எதிர்கால சந்ததியின் ஆரோக்கியத்திற்கும் துணையென அமையும் என்பது ஆணித்தரமான உண்மை.

*"பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்"*

**- திருவள்ளுவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ஆம் இடம்பெற்ற கட்டுரை

# கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதன் சாதக பாதக விளைவுளகள்

செல்வி. யோ. அனுசியா
*முகாமைத்துவ உதவியாளர்,*
*பிரதேச சபை, கரைச்சி.*

ஒரு மனித வாழ்வானது கருவறை தொடக்கம் கல்லறை வரைக்கும் பல கடமைகளையும் பொறுப்புக்களையும் தன்னகத்தே கொண்டு இறைவனால் படைக்கப்படுகின்றது. அந்தக் கடமைகளையும் பொறுப்புக்களையும் புறம் தள்ள முடியாத மனிதன் அதனை இலகுவாக்கி கொள்வதற்காக பல இலத்திரனியல் சாதனங்களை பயன்படுத்தி தனது வேலைகளை முன்னெடுத்து செல்கின்றான். இலத்திரனியல் சாதனங்கள் என்பது மனித முன்னேற்றத்தின் தொழிநுட்ப வளர்ச்சிக்கட்டத்தின் ஒரு பிரசவிப்பாகும். அந்தவகையில் தொலைபேசி என்ற கருவியும் தொழிநுட்ப வளர்ச்சியினால் பிரசவிக்கப்பட்ட ஒரு குழந்தையே ஆகும்.

தொலைபேசி என்ற கருவி ஏன் கண்டுபிடிக்கப்பட்டது? ஏன்ற கேள்வி எழுகின்ற இந்த வேளையில் அதற்கான பதிலும் ஆரம்ப காலத்திலேயே முன்வைக்கப்பட்டது. விஞ்ஞானி **கிரஹம் பெல்** என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இக்கருவி முன்பு தந்தியுடன் கூடிய தொடர்பாடல் சாதனமாகக் காணப்பட்டு தற்காலத்தில் தந்தியில்லாக் கம்பியாக மாறி பயன்பட்டு வருகின்றது. கிரகம் பெல் என்ற விஞ்ஞானியால் உருவாக்கப்பட்ட தொலைபேசியின் வடிவம் இன்று பல்வேறு வடிவங்களாக உருமாற்றப்பட்டு பல கோணங்களில் பயன்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

முற்காலத்தில் பெரும் வர்த்தக நிறுவனங்களிடமும் திணைக்களங் களிடமும் பெரும் பிரமுகர்களிடமும் பயன்பாட்டில் காணப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசியானது தனது உருவத்தை சிறிதாக்கி இன்று ஒரு ஏழை மனிதனின் கையிலும் தவழக்கூடிய வகையில் உருமாறியிருப்பதுதான் விந்தையானது. இன்று ஒரு குழந்தையின் கையில் கூட கையடக்கத் தொலைபேசியைக் காணுவதிலிருந்து அது தன்னை உலகெலாம் வியாபித்துக் கொண்டுவிட்டது புரிகிறதல்லவா? இத் தொலைபேசியை கைகளிலே கொண்டு திரிவதனால் தான் இது கைத்தொலைபேசி என்று அழைக்கப்படுகின்றது. இன்றைய உலகில் அதிகாரிகளும் வர்த்தகர்களும் மேசைத் தொலைபேசிகளை கைகளிலே கொண்டு திரிகின்றார்களே! அப்போ அதுவும் கைத்தொலைபேசியா? ஏன்று நீங்கள் கேட்பது புரிகின்றது. இருந்தும் அதனை நாம் கைத்தொலைபேசி என்று அழைப்பதில்லை. கைக்கு அடக்கமாக சிறிதாக உள்ள ஒரு கருவிதான் கைத்தொலைபேசியாகும்.

**"கைகளிலே தவழ்ந்து**
**காதுகளிலே கதைபேசும்"**

இக்கைத்தொலைபேசியானது மனித வாழ்க்கையிலே பல படிமுறைகளிலே பயன்பட்டு வருவதும் நாம் அறிந்ததே. அந்த வகையில் அதன் பயன்கள் பற்றி அறிந்து கொள்வது நியாயமானது.

தொலைபேசியின் பயன்பாடு பற்றி முதலில் ஆராய்வோமானால், தொலைபேசியானது ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு தகவலை எடுத்துச் செல்லும் சாதனமாகத் தொழிற்படுகின்றது. அது வாய் மொழி மூல செய்திகளை மட்டுமன்றி எழுத்து மூல செய்திகளையும் எடுத்துச் சென்று வழங்கும் ஆற்றலுடையது. ஆதி காலத்தில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள பல வழிமுறைகளைக் கையாண்டு பழகிய மனித இனத்திற்கு கைத்தொலைபேசியின் அறிமுகமானது ஒரு வரப்பிரசாதம் என்றும் சொல்லலாம். அதாவது பறையடித்தும், தூது அனுப்பியும் பல மைல் தூரம் ஓடியும் தகவல்களை பரிமாறிக் கொண்டவர்கள் இன்று ஒரு நொடிப் பொழுதில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுமளவிற்கு முன்னேறி யுள்ளார்கள் என்றால் அது தொலைபேசியினால் தான் என்பது மறுக்க முடியாது. பண்டைய காலத்தில் அவசர செய்திகளைக் கூட ஒற்றன் புறா போன்ற தூதுகள் மூலம் அனுப்பி அதற்கான பதிலை எதிர்பார்க்கும் காலம் என்பது வரையறுத்து சொல்ல முடியாது. ஆனால் இன்று தொலைபேசிப்பாவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் இருந்த இடத்தில் இருந்து கொண்டே தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் போது நாம் எதிர்பார்க்கும் தகவலானது உடனடியாக பெற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆவ்வாறு பயன்கொள் சாதனமாக பயன்பட உருவாக்கப்பட்ட கைத்தொலைபேசியினது பயன்களை பட்டியல் படுத்தினால் அது எண்ணில் அடங்காது.

முதலில், உறவுகளை இணைத்து வைப்பதில் பெரும் பங்காற்று கின்றது கைத்தொலைபேசி. தொலைதூர உறவுகளைக் கூட அருகிருந்து பேசவைப்பது போன்ற உண்மையான உணர்வை ஏற்படுத்தி உரையாட வைக்கும் இயல்பினை உடையது. பிரிந்தருந்தும் தனிமை தெரியாது உறவுகள் தங்கள் அன்பை வெளிப்படுத்த கைத்தொலைபேசி ஒரு காரணமாகின்றது. முன்பெல்லாம் பெற்றோரை விட்டு பிரிந்திருக்கும் பிள்ளையும், வெளிநாடு சென்று உழைக்கும் கணவனும் தமது உறவுகளை கடிதம் மூலமே தொடர்பு கொண்டனர். அக்கடிதம் உரியவர்களை சென்றடைய பல நாட்களையும் பல மைல்களையும் எடுத்து கொண்டது. ஆனால், இன்றோ

**"பல நாட்களும் தேவையில்லை.**
**படலையையும் பார்க்கத் தேவையில்லை.**
**தபாற்காரனுக்கும் வேலையில்லை."**

என்ற வகையில் தபாற்காரனுக்கு கூட வேலையைக் குறைத்து விட்டது கைத்தொலைபேசி. ஆம், ஊரிலிருந்து வெளிநாட்டில் இருக்கும் தன் மகனுடன் கதைக்க ஆசைப்படும் தாயார் கைத்தொலைபேசியை கையிலெடுத்தால் போதும். மகன் அங்கிருந்து பேசுவது போல உணர்ந்து கொள்கின்றாள்.

மேலும், பல நாட்கள் நடையாய் நடந்து பல வீட்டு படலைகளையும் தட்டி பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பொருத்தம் பார்க்கும் தரகர்கூட இன்று வீட்டிலிருந்து கொண்டே கலியாணத்தை பேசி முடிக்கும் வகையை பார்த்தால் பயன் புரிகின்றதல்லவா? பிள்ளையை பள்ளிக்கு அனுப்பிவிட்டு அவனுடைய குறைநிறைகளை கூட தாயார் வீட்டிலிருந்து கைத்தொலை பேசியூடாக ஆசிரியரிடம் கேட்டறிந்து வருகின்றாள். மகனை வீட்டிற்கு அழைத்து வரக்கூட வாகன ஒழுங்கை கைத்தொலைபேசியூடாக ஆயத்தப்படுத்துகின்றாள். அலுவலகத்தில் கடமை செய்யும் கணவனிற்கு பிடித்தமானது என்ன? என்று கேட்டு அவனுக்கு சுவையாக சமைக்க கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொலைபேசியைப் பயன்படுத்துகின்றாள். இவ்வாறு சிறுசிறு வேலைகளைக்கூட கைத்தொலைபேசியில் செய்து முடிக்கும் பெண்மணிக்கு கூட கைத்தொலைபேசி பயனுடையதாகின்றது. அந்த வகையில் தான் இன்று **"வீட்டுக்கு ஒரு கைத்தொலைபேசி என்ற காலம் போய் ஆளுக்கொரு கைத்தொலைபேசி"** என்ற காலம் வந்துவிட்டது.

அலுவலக ரீதியில் அதனை நோக்கின் ஊழியர்களுக்கிடையிலான தொடர்பாடல் சாதனமாகவும், நட்புறவை வளர்க்கும் கருவியாகவும் இது தொழிற்படுகின்றது. அதாவது ஒரு கடமை நிமித்தம் வெளிச்செல்லும் உத்தியோகத்தருடன் கலந்துரையாடவும், அவரைக் கண்காணிக்கவும் கைத்தொலைபேசி பயன்படுகின்றது. விடுப்பில் நிற்கும் ஒரு உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு அவரது கடமைகளை செவ்வனே நிறைவேற்றவும் கைத்தொலைபேசி பயன்படுகின்றது. கடிதத்தொடர்பாடல் மூலம் தொடர்பு கொள்ளும் ஒரு விடயத்தினைக்கூட கைத்தொலைபேசி மூலம் இலகுவாக கையாள முடிகின்றது. ஒரு செயலமர்வில் அமர்ந்திருக்கும் பொறுப்பு மிகு உத்தியோகத்தர் ஒருவர் தன் திணைக்களம் அல்லது அலுவலகத்தில் இடம் பெறும் விடயங்களை அச்செயலமர்வில் சமர்ப்பிக்க வேண்டுமாயின் அதற்கு கைத்தொலைபேசியையே பயன்படுத்தி கொள்கின்றார். இவ்வாறு கடமையில்கூட பயன்படும் கைத்தொலைபேசி நேரத்தையும் ஆளணியையும் மீதப்படுத்தி உந்துகோலாய் உதவுகின்றதென்றால் அதன் பயன் சொல்லவும் வேண்டுமா?

உலக மயப்படுத்தலில் இதன் பங்கினை நோக்கினால் பின்வரும் விடயங்களில் அவை தெள்ளத் தெளிவாக தெரிகின்றது. பரந்து விரிந்த இந்த உலகத்திலே பாதாளத்தைகூட ஊடறுத்துப்பாயும் ஆற்றல் வாய்ந்த கைத்தொலைபேசியானது **"உள்ளங்கையில் உலகம்"** என்ற வகையில் உலகத்தை புரட்டிப் போட்டிருக்கிறது. வங்கி, காப்புறுதி, தொடர்பாடல், சந்தைப்படுத்தல் என்று துணைநிலைச் சேவைகளின் வளர்ச்சியின் ஊடாக பல சேவைகளை வழங்கி வருகின்றது. ஒருவங்கியிலிருந்து இன்னொருவங்கிக்கு தகவல்களைக் கொடுத்து விரைவில் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யவும், உலகப் பொருளாதார நிலைமைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் இக்கைத்தொலைபேசி பயன்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. காப்புறுதி வசதியை எடுத்துக் கொண்டால் வாகனத்தில் சென்றுகொண்டிருக்கும் போதே தனக்கும் தன் வாகனத்திற்கும் காப்புறுதி செய்து கொள்ளவும், ஒருவிபத்து ஏற்பட்டுவிட்டால் காப்புறுதியை பெற்றுக்கொள்ளவும் கைத்தொலைபேசியே பயன்படுகின்றது. உலக நாடுகளிடையே சந்தைப்படுத்தல் வசதிகளையும் ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதார வசதிகளையும் மேம்படுத்துவதற்கு வர்த்தகர்களும் பிரமுகர்களும் இக் கைத்தொலைபேசிகளையே பயன்படுத்தி கொள்கின்றனர். ஓரிடத்தில் இருந்து கொண்டு கட்டளைகளைப்பிறப்பித்த வண்ணம் விவசாய வளர்ச்சி எங்கோ சென்றுகொண்டிருக்கின்றது. இக்கட்டளை களை பிறப்பிக்க உதவியது எதுவென்றால் அது கைத்தொலைபேசியே யாகும். இவ்வாறு இதன் பங்கை பல கோணங்களில் ஆராய்ந்து கொண்டே செல்லலாம். அதுமட்டுமா? அபிவிருத்தியடைந்த நாடு களைக்கூட விட்டுவைக்காத இக் கைத்தொலைபேசி அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளின் அந்நியச்செலாவணி வருகைக்கு ஒரு காரணமாக அமைகின்றது. எவ்வாறெனில் புலம்பெயர் மக்களூடாக உழைக்கப்படும் பணமும் வெளிநாட்டு நபர்களின் உள்நாட்டு உல்லாசப் பயண வருகையும் உள்நாட்டு வருவாயில் பெரும்பங்காற்றுகின்றது என்பது நாம் அறிந்தது. அந்த உள்நாட்டு வருவாயில் அரைப்பங்கிற்கு மேல் ஈட்டிக்கொடுப்பதில் கைத்தொலைபேசியின் பாவனை முக்கிய இடம்பிடிப்பதாக ஆய்வுக்கருத்துக்கள் முடிவுகட்டியுள்ளன. இவ்வாறு பல வகையில் பலவித நடவடிக்கைகள் மூலம் கைத்தொலைபேசியின் பாவனை எம்மவர்களிடையே பயன்பட்டுவருகின்றது.

அடுத்து **"தானுண்டு தன் வேலையுண்டு"** என்ற காலம் போய் **"தான் வாழ வேண்டுமென்றால் தன் நாடும் வாழவேண்டும்"** என்ற காலம் தோன்றியிருக்கும் இக்காலகட்டத்தில் உறவைப்பயன்படுத்தி ஐக்கியத்தை தோற்றுவிப்பதிலும் இக்கைத்தொலைபேசி பயன்படுகின்றது. சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுத்துநிறுத்தவும், அரசியல் ரீதியான பயன்படுத்தலில் நாட்டின் இறைமையைப் பாதுகாக்கவும், குடும்ப பின்னணியிலிருந்து நாட்டின் வளர்ச்சிக்கு உதவவும் நாட்டு மக்களும் நாட்டைப் பாதுகாக்கும் பிரிவினரும் பயன்படுத்துவதால் ஒரு ஒற்றுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பப்பட்டு நாடு பாதுகாக்கப்படுகின்றது. அத்துடன் நவீன கண்டுபிடிப்புக்களுடன் கூடிய கைத்தொலைபேசிகளின் அறிமுகத்தினால் பல வகையான நன்மைகளை இன்றைய சமுதாயம் அனுபவித்து வருகின்றது என்பதும் கண்கூடாகும். இணைய வசதிகளைப் பெற்றுக்கொள்ளவும், குறுந்தகவல்களையும் படங்களையும் அனுப்பவும் பயன்படும் இக்கைத்தொலைபேசி பொழுதுபோக்கு சாதனமாகவும் பயன்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**"சிறகொன்று பிறக்க முன்பே**
**பறக்க நினைக்கின்றது உள்ளம்"**

என்று துள்ளித்திரியும் வாலிப வயசுடைய மனிதர்களிற்கு பாடல்கள் கேட்கவும், படம் பார்க்கவும் இக்கைத்தொலைபேசி பயன்படுகின்றது. சிறுவிடயங்களிற்குகூட பயன்பட்டுவரும் கைத்தொலை பேசியானது இனிமைகளையும் இன்பங்களையும் மட்டும் தரும் சாதனம் என்று கருதிவிட முடியாது. ஏனென்றால், நன்மையை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் தீமையையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் ஏன்பது உலக நியதி. அதுபோன்று பல நன்மைகளைப் பட்டியற்படுத்தி தரும் கைத்தொலைபேசியானது மறுபக்கத்தில் தீமைகளையும் பட்டியற்படுத்தி வைத்திருப்பதை நாம் அறியவேண்டும்.

**" ஒரு நாணயத்திற்கு இரு பங்கங்கள் உண்டு"**

என்பது போல நன்மையான பக்கத்தை ஆராய்ந்த நாம் இனி தீமையான பக்கங்களையும் புரட்டிப்பார்க்க முற்படுவோம். முதலில் இன்றைய இளைய சமுதாயத்தின் மத்தியில் இக்கைத்தொலைபேசியின் உபயோகமானது காணப்பட்டு வருவதனால் பல தீய விளைவுகளில் சிக்கி சீரழிவதற்கு வழிகோலப்படுகின்றது. பருவம் எய்தாத பள்ளிக் காதல் கைத்தொலைபேசியூடாக வளர்க்கப்பட்டு பல மாணவர்களின் வாழ்க்கை தொலைக்கப்படுவதற்கு காரணமாகின்றது.

**"புத்தகம் கைக்கொண்டு பட்டாம் பூச்சியாய் வலம் வரவேண்டிய இளஞ்சிட்டுக்கள் வண்ணமொட்டுக்கள்"** இன்று **"புத்தகமும் கையிலில்லை புத்தியையும் தீட்டவில்லை'** என்று பச்சைப்பாலகனைக் கையிலேந்திக் கொண்டு திரிகின்றார்கள். மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் யுவதிகளிடையே பண்பாட்டுச் சீரழிவினைக் கொண்டுவருவதிலும் கைத்தொலைபேசியின் பாவனை முக்கிய பங்காற்றுகின்றது.

**"முகம் தெரியா நபர்களை**
**முகவரியின்றியே பழகவிடும்**
**சக்தி வாய்ந்தது கைத்தொலைபேசி"**

அதாவது புதிய எண்களிலிருந்தும் அறிமுகம் அற்றவர்களிடமிருந்தும் அழைப்பு வருவதும், அது இடைநிறுத்தப்படாது தொடர்வதும் பின் காதலில் விழுவதும் தற்காலத்தில் கண்கூடாகக் காணக்கூடிய விடயமாகவுள்ளது. பல நாட்கள், பலமாதங்கள், பலஆண்டுகள் என முகம் தெரியாமலே பழகி பின்பு சந்திக்க ஆசைப்பட்டு யுவதி இளைஞரைத் தேடிச் செல்வதும் அங்கு ஒரு கலாசார சீர்கேடு அரங்கேறுவதையும் இன்று நாம் காண்கின்றோம். இங்கு பாதிக்கப்படுவது இருவராக இருந்தாலும் சமூகத்தினால் ஒதுக்கப்படுவது பெண்ணாகவே காணப்படுகின்றாள். இதனால் அந்தப் பெண் கெட்டது மட்டுமன்றி தனக்கு தன் குடும்பத்திற்கு தன்வருங்கால சந்ததிக்கென ஒரு இழிவான வார்த்தையை தேடிக் கொடுக்கிறாள். அத்துடன் மாணவர்களிடையே கல்வி நடவடிக்கை வெகுவாக பாதிக்கப்பட்டு வருவதும் இன்றைய ஆய்வுகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. அதாவது கல்விச்சாலைகளில் பாடங்களில் கவனத்தை செலுத்தாது கைத்தொலைபேசிகளை கைகளிலே ஏந்திக்கொண்டு குறுந்தகவல் அனுப்புவதும், படம் பார்ப்பதுவும் பாடல் கேட்பதுவுமாக நேரத்தைக் கழிப்பதனால் தான் கெட்டது மட்டுமன்றி ஏனைய மாணவர்களையும் கெடுத்து தம் நிலையினின்று கீழிறங்கி செல்கின்றார்கள். இவ்வாறு செயற்படுவதனால் கல்வியில் முன்னேற்றம் குறைந்து அது எதிர்கால நாட்டின் வளர்ச்சியையே பாதிப்படையச் செய்கின்றது. ஏனெனில்,

**"ஒரு நாட்டினைக் கட்டியெழுப்பும் எதிர்கால சிற்பிகள் தான் இந்த சிறுவர்கள்"**

அவர்களின் கல்வி நடவடிக்கை பாதிப்படைவதனால் நாட்டின் எதிர்கால முன்னேற்றம் தடைப்பட்டு போகின்றது. எனவே மாணவர்களின் கல்வி சீரழிவதிலும் கைத்தொலைபேசியின் பாதகத் தன்மை காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சட்டவிரோத நடவடிக்கைகளான கஞ்சாக்கடத்தல், விபச்சார நடவடிக்கை, சிறுவர் பெண்கள் துஸ்பிரயோகங்கள், ஆட்கடத்தல் போன்ற நடவடிக்கைகளிற்கும் கைத்தொலைபேசி முக்கிய பணியாற்றுகின்றது. ஓரிடத்தில் இருந்து கொண்டு கட்டளைகளைப் பிறப்பித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அல்லது ஒரு குழுவாக இயங்கி சட்டவிரோத செயல்களில் ஈடுபடவும் ஒரு தொடர்பாடல் சாதனமாக இக்கைத்தொலைபேசியே பயன்படு கின்றது. நாளுக்கு நாள் பத்திரிகைகளிலும் ஊடக சாதனங்களிலும் பார்க்க கூடிய செய்திகளாக மேற்கூறப்பட்டவையே காணப்படுகின்றது. சில வேளை களில் தடயங்களாக பொலிசாரினால் கைத்தொலைபேசிகளே கைப்பற்றப் படுகின்றன. இதிலிருந்து கைத்தொலைபேசி ஒரு சட்டவிரோத நடவடிக்கை யினை மேற்கொள்வதற்கு எவ்விதம் உதவுகின்றது என்பது புரிகின்றதல்லவா?

அடுத்து கொலை, களவு, சூது, ஆட்கடத்தல் போன்ற வழிகளில் செயற்படும் பாதாள உலகக் கும்பலின் வழிகாட்டி இக்கைத்தொலைபேசிதான். இப்பாதாள உலகக்கும்பலின் ஊடுருவல் தாக்கங்கள் சிலவேளைகளில் ஒரு நாட்டின் இறைமையைக்கூடப் பாதிக்கின்றது என்பதும் நாம் அறிந்ததே. ஒரு **"ஒசாமா பின்லேடன்"** பல நாடுகளின் எதிரியாய் தொழிற்பட்டது போன்று ஒரு கைத்தொலைபேசி ஒரு நாட்டின் இறைமைக்கு எதிரியாய் இருந்தால் போதும். அந்நாடே அழிந்துவிடும். பல உளவாளிகள் இக்கைத்தொலை பேசியை பயன்படுத்தித்தானே எத்தனையோ போர்களையே தோற்று வித்திருக்கிறார்கள். ஒரு நாடு ஒரு போரை எதிர்கொண்டால் எவற்றை யெல்லாம் இழக்கக்கூடாதோ அவற்றையெல்லாம் இழந்து நிர்க்கதியாகின்றது. எனவே ஒரு நாட்டின் இறைமைக்கும் அரசியல் ரீதியான அதன் ஈடாட்டத்திற்கும் ஒரு காரணகர்த்தாவாக கைத்தொலைபேசியும் தொழிற்படுகின்றது என்பது வெள்ளிடைமலை.

அடுத்து முக்கியமாக குறிப்பிடவேண்டிய பாதக விளைவு என்னவென்றால் குடும்பத் தகராறு. அதாவது ஒரு வீட்டினை எடுத்துக் கொண்டால் இன்று ஆளுக்கொரு கைத்தொலைபேசியை வைத்துக்கொண்டு அவர்கள் தொடர்பாடலினை மேற்கொள்கின்றார்கள். இங்கு தொழிலுக்கு செல்லும் கணவன் மனைவியாக அல்லது பிள்ளைகளாக இருப்பின் அவர்கள் பலருடன் உறவினைப் பேணுகின்றார்கள். அல்லது பேணிக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிடுகின்றது. இதனால் வீட்டிற்கு வந்த பின்பும் தொலைபேசி அழைப்பு வருவதும் அடிக்கடி தொல்லை கொடுப்பதும் வழக்கமாகின்றது. இதனால் குடும்பங்களிடையே வாக்குவாதங்கள் ஏற்படுகின்றது. இதன் மூலம் சில குடும்பங்களில் பிரிவுகளும் சிலவேளைகளில் மரணங்களும் சம்பவிக்கின்றன. ஆகவே, கைத்தொலைபேசி குடும்பங்களிற்கிடையில் தகராறுகள் உண்டுபண்ணுவதிலும் தன் செல்வாக்கை செலுத்துவது தெரிகின்றதல்லவா?

மேலும் தன் வயதை ஒத்த ஒரு பையன் கைத்தொலைபேசியை வைத்திருக்கின்றான், தன்னிடம் அது இல்லையே என ஏங்குவதும் அதற்காக குடும்பத்தின் நிலை புரியாது வீட்டிற்கு சென்று அதனை வாங்கித் தரும்படி தகராறு செய்வதும் அது நிறைவேறாத பட்சத்தில் தற்கொலை செய்வதும் இன்று நிகழ்வாகிக் கொண்டிருக்கின்றது. இது எல்லாம் எதனால் ஏற்பட்டது. ஏன ஆராயப்போனால் கைத்தொலைபேசிதான் விடையாக வந்து நிற்கின்றது. எனவே,கைத்தொலைபேசியின் பாதகத் தன்மையில் மேற்கூறப்பட்ட சம்பவமும் பதியப்படுகின்றதல்லவா?

மற்றும் கைத்தொலைபேசிகளை அடிக்கடி எடுத்து கதைத்துக் கொண்டிருப்பதனால் எமது செவிப்பறை பாதிப்படைவதுடன், அன்றாட செயன்முறைகளும் பாதிப்படைகின்றது. ஒரு செயற்பாட்டைச் செய்வதற்கென திட்டமிட்டிருந்தால் அந்த திட்டம் குழம்பிப்போவதற்கு ஒரு கைத்தொலைபேசியின் அழைப்பு போதுமானது. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்துமுடிக்கப்படவேண்டிய ஒரு வேலை ஒரு தொலைபேசி அழைப்பினால் பின்தள்ளப்பட்டு ஏனைய வேலைகளையும் பாதிப்படையச் செய்கின்றது. அலுவலக நேரங்களில் கைகளில் தொலைபேசிகளை வைத்துக் கொண்டு வேலைகளில் ஈடுபடுவதனால் சில சமயங்களில் அவ்வேலைகள் தவறாகச் செய்யப்படுவதும் இதனால் வீணான மேலதிகாரிகளின் திட்டல்களும் எம்மை வந்தடையக்கூடும். அதைவிட கைத்தொலைபேசிகளிலே முழுக்கவனமும் இருப்பதால் ஒழுங்கற்ற விதத்திலே வேலைகள் செய்யப்படுவதும் ஏனைய உத்தியோகத்தர்களின் கிண்டல்களும் கேலிப்பேச்சுக்களும் எம்மை அம்பெனத் தாக்கும் சந்தர்ப்பங்களும் உருவாகும். இவையெல்லாம் கைத்தொலைபேசியின் தவறான பயன்படுத்துகையே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக வாகனம் செலுத்துகையில் கைத்தொலைபேசிகளை தவறாகப் பயன்படுத்துபவர்களால் எத்தனையோ மரணங்கள் நடந்தேறி யிருக்கின்றன. வீதிகளில் பயணிக்கும் போது தாம் மட்டுமே பயணிப்பதாக எண்ணிக் கொண்டு கைத்தொலைபேசியினில் பேசிக்கொண்டு செல்வத னால் எதிரே வருபவர்களைக்கூடத் தெரியாமல் அவர் மீது மோதி வீணான ஒரு உயிரிழப்பை ஏற்படுத்திவிடுகின்றார்கள். **"கடவுளால் படைக்கப்பட்ட உயிரை எடுப்பதற்கு யாருக்குமே உரிமை கிடையாது"** ஆனால். கைத்தொலைபேசியின் தவறான பயன்பாட்டால் மனிதனாலே மனித உயிர் எடுக்கப்படுகின்றது. இச்சம்பவம் நடந்றேுவதற்கு மூல காரணம் இக்கைத்தொலைபேசிதான். கைத்தொலைபேசியானது உரையாடலின் இனிமையில் தன்னை மெய்மறக்கச்செய்து எதிரில் வரும் உயிருக்கு எமனாய் மாறிவிடுகின்றது என்பதே உண்மையாகும்.

விடுகதையான இந்த வாழ்க்கையில் விடைதேட முடியாது தவிக்கும் மனித வாழ்வானது கைத்தொலைபேசிப் பாவனையால் போதைக்கு அடிமைப்பட்டது போன்று பழக்கப்படுத்திவிடுகின்றது. அதாவது போதை பாவிக்கும் ஒருவன் அந்த போதைவஸ்து இன்றி உயிர்வாழ சிரமப்படுவதை நாம் அறிவோம். அதேபோல கைத்தொலைபேசிப் பாவனைக்கு பழக்கப் பட்டால் அது இல்லாமல் இருக்கமுடியாது என்ற மனஉளத்தாக்கத்திற்கு உட்பட்டு மனநோயாளியாக மாறும் சந்தர்ப்பங்களும் உண்டு. இதனால் வீண் பணச்செலவுகளும் மன உலைச்சலும் தான் மீதியாகக் கிடைக்கின்றது. இதைவிட இயற்கை அனர்த்தங்களான இடி,மின்னல் பாதிப்புக்களால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க நேரிடுகின்றது. அதாவது கைகளிலே கொண்டு திரிவதனாலும் காதுகளிலே வைத்துப் பேசுவதனாலும் மின்னல் இடி போன்றவற்றால் செவிப்பறை வெடித்துக் கொள்கின்றது மட்டுமன்றி கைத்தொலைபேசிகளும் வெடித்துக்கொள்ளும் சாத்தியங்களும் நடந்தேறியிருக்கின்றன. இவ்வாறு இயற்கையின் எதிரியாகக் கூட கைத்தொலைபேசியின் பாவனையுள்ளது.

இதைவிட அண்மையில் பெறப்பட்ட ஆய்வின் முடிவு பின்வருமாறு ஒரு வியத்தகு செய்தியை வெளியிட்டிருக்கின்றது. என்னவெனில் கைத்தொலைபேசியின் தொடர்பாடல் வலையமைப்பினால் ஏற்படும் கதிர்வீச்சுத்தாக்கத்தினால் தேனீக்களின் வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படுவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்திருக்கின்றது. அதாவது தேனீக்களின் ஒருவித ஒலியமைப்பினால் தான் அவை தம் கூட்டத்துடன் இணைந்து தமது கூட்டை அமைத்துக் கொள்கின்றன. இந்த கைத்தொலைபேசியின் கதிர்வீச்சுத் தாக்கத்தினால் அவைகளின் ஒலியமைப்பில் தாக்கம் ஏற்பட்டு அதன் இனப்பெருக்க விருத்தி பாதிப்படைகின்றது. ஒரு தேனியின் வாழ்க்கையே இவ்வாறெனில் மனிதனின் வாழ்க்கை எவ்வாறு அமையப்போகின்றதோ யாரறிவார்?

இதைவிட நவீன வசதிகளுடன் கூடிய கைத்தொலைபேசிகளின் வருகையினால் இன்றைய இளைய தலைமுறையினர் கலாசாரத்திற்குப் பொருந்தாத பல விடயங்களை செய்யுமளவிற்கு தள்ளப்பட்டுக் கொண்டி ருக்கிறார்கள். "Face Book" என்ற முகப் புத்தகமூடாக முகம் தெரியாத பல புதிய நண்பர்களை உருவாக்குவதிலும் வாசித்து சகித்துக்கொள்ள முடியாத குறுந்தகவல்களை அனுப்புவதிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அண்மையில் எமது நாட்டில் நடந்தேறிய ஒருசம்பவத்தை உதாரணமாகக் கூறலாம். அங்கு நடந்தது என்ன? என்று ஆராய்ந்து பார்த்தால் எமது நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் வெளிநாட்டில் வசிக்கும் ஆண் ஒருவருடன் முகப் புத்தகமூடாகத் தொடர்பு கொண்டிருக்கிறார். இது நட்புடன் ஆரம்பித்து பின் காதலாக மலர்ந்து கொண்டது. இருவரும் சந்திக்கவும் நேரிட்டது. வெளிநாட்டிலிருந்து வந்த ஆண் பெண்ணை சந்தித்ததும் அவருக்கு பிடிக்காமல் போக தன் காதலை முறித்துக்கொள்ளுமாறு கேட்டிருக்கிறார். அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத பெண் பத்தொன்பது வயதினில் உலக வாழ்வை வெறுத்து தற்கொலைசெய்து கொண்டிருக்கிறார். இவ்வாறு எத்தனையோ சம்பவங்களைக் கூறிக்கொண்டே செல்லலாம். இணைய வசதி கொண்ட தொலைபேசிப் பாவனையால் பெண்களை படமெடுத்தல், அதனை விற்று கேவலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடல் என்றும் தம் வாழ் நாளை கழிக்கும் ஒரு இளைஞர் சமுதாயமும் உருவாகிக்கொண்டு தான் வருகின்றது. இவையெல்லாம் கைத்தொலைபேசியின் தீய பக்கங்களையே காட்டி நிற்கின்றது.

மேற்கூறப்பட்டவாறு பயன்கொள் சாதனமாக உருவாக்கப்பட்ட கைத்தொலைபேசியினால் பல தீமைகளையும் மனித சமுதாயம் எதிர்கொள்கின்றது என்பதும் உண்மையே. இருப்பினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மோர் உண்ண ஆசைப்பட்டால்
தயிரைக் கடைந்துதானே ஆக வேண்டும்"

என்ற முது மொழிக்கிணங்க ஒரு நன்மையை பெறவேண்டுமானால் அதன் பக்கவிளைவுகளையும் சகித்துத்தன் போக வேண்டும். ஆனாலும் எம்மால் அந்த விளைவுகளைக் கட்டுப்படுத்த முடியுமென்றால் அதனைச் செய்யவும் பின்னிற்ககூடாது. கைத்தொலைபேசி நிறைய பயன்களைத் தருகின்றது. அதனால் நன்மையடையும் நாம் அதன் தீய விளைவுகளையும் கண்டும் காணாதது போல நடப்பது தவறாகும். ஏனெனில், இதனால் பாதிக்கப்படப் போவது நாமும் எமது சந்ததியும் தானே. எனவே, நன்மையைப் பெறத் துடிக்கும் நாம் அதன் பாதக விளைவுகளையும் எமது சமுகத்திற்கு எடுத்து விளக்கி அவர்களையும் நன்மைகளை மட்டுமே அடையச் செய்வோமானால் கைத்தொலைபேசியின் சாதகத் தன்மைகளை சிறந்த முறையில் அனுபவித்துக்கொள்ள முடியும்.

காற்றை எடுத்துக்கொண்டால் அது இதமாய் வீசும் போது தென்றலாய் உணரப்படுகின்றது. வேகம் கொண்டு சுழன்றடிக்கும் போது புயலாய் மாறுகின்றது. இது போலத்தான் கைத்தொலைபேசியும் நன்மையான விதத்தில் பயன்படுத்தும் போது நல்ல பயனையும் தீய வழிகளில் பயன்படுத்தும் போது தீய விளைவுகளையும் உண்டுபண்ணுகின்றது. எனவே, தீமையைத் தவிர்த்து நன்மையை மட்டும் எடுத்துக் கொண்டால் அன்னம் நீரை விட்டு பாலை பிரித்தறிந்து பருகும் இயல்பினையுடையதுபோல நாமும் நன்மைகளை அனுபவித்துக் கொள்ளலாம்.

இவ்வாறு, கைத்தொலைபேசியினால் பல சாதக பாதக விளைவுகள் காட்டப்பட்டாலும் கைத்தொலைபேசியில்லாமல் வாழமுடியாத சூழ் நிலைக்கும் மனிதன் தள்ளப்பட்டு விட்டான் என்பதே உண்மையாகும்.

**"அவன் இன்றி அணுவும் அசையாது"** என்று சொல்வார்கள். இன்றைய உலகில் கைத்தொலைபேசியில்லாமல் தொடர்பாடலையோ அபிவிருத்தியையோ எதிர்பார்க்க முடியாது. மொத்தத்தில் கைத்தொலைபேசிப் பாவனையானது ஒரு மனித சமுகத்துடன் இணைந்து அவனது வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துவிட்டதே உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் இடம்பெற்ற சிறுகதை

## நிழலில்லா விருட்சங்கள்

திருமதி. இறஞ்சிதமலர் அருணாசலம்
*கிளி / உருத்திரபுரம் மகாவித்தியாலயம்,*
*கிளிநொச்சி.*

நீண்டு சடைத்திருந்த தேக்குமரங்கள், பாலைமரங்கள், உடலை மெல்லென தடவிச்செல்லும் தென்றலை அள்ளித் தந்த வேப்பமரங்கள், குளிர் நிழலைச் சொரிந்த நாவல் மரங்கள் எனப் பசுமையாக இருந்த வன்னியின் வனப்பைப் பெருக்கிய மரக்கூட்டம், இப்போது அபிவிருத்தி என்று மின்சாரத்துக்காகச் சாய்த்து விழுத்தி நிழலையும் பறித்தெடுத்து கொடூர பூமியாகக் காட்சிதந்து கொண்டிருந்தது.

வளைந்து செல்லும் பாதையில் எட்டி அடி வைத்து நடக்கக் கஷ்டப்பட்டாள் மலர்விழி. கையில் ஒரு பிள்ளை. அவளின் முந்தானைச் சேலையைப் பிடித்தபடி ஒரு பிள்ளை. கால்கள் பின்னப் பின்ன நடந்தாள். முன்பு இருந்தது போலவே அந்தக் கிரவல்பாதை எந்த மாற்றமும் இன்றி நீண்டு கிடந்தது.

"சீ.... இந்தப் பிள்ளையளால வெள்ளண ஒரு டத்துக்கும் போகேலாது.... சீலையை விடு...."

கடுகடுத்துக் கொண்டு நடையைக் கடுகதியாக்கினாள்.

பெயர் தான் மலர்விழி. அவள் வாழ்வில் மலர்ந்திருந்த வசந்தம் வாடிக் கருகியதை, அவள் ஏற்றுக் கொள்ளாமலே திணிக்கப்பட்டது. மெலிந்து கறுத்து வாயடி கருவேப்பங்கட்டை போல் இருந்தாள்.

"அம்மா.... எங்கையம்மா... போறம்...."

மகள் விழியழகியின் நடை வேதனையால் வந்த ஈனக்குரலைக் கேட்டு, கேள்விக்குப் பதில் சொல்ல, கிரகிக்கும் நிலையில் இருந்தால் தானே திருப்பி மறுமொழி சொல்ல...

ஒருவாறு நீண்டு கிடந்த **A9** சாலையை வந்தடைந்தாள். கல்லும் முள்ளும் குத்திக் கிளறிப் புண்ணாகிப் போயிருந்த கால்களை மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வதை செய்தது. காலில் செருப்பு இருந்தால் தானே பாதுகாப்புக் கிடைக்கும். மலர்விழியின் பாதுகாப்புக்கே ஆள் இல்லாத போது.... கால்கள் நொந்தால் என்ன... தலை சுட்டால் தான் என்ன....

கடந்துபோன வாழ்வின் சுகந்தங்களை மனக்கண்முன் கொண்டு வந்து திரும்ப... அதையே நினைத்து இன்பம் காணுபவளாக இருந்தாள். கையில் மூன்றுவயதுக் குழந்தையைத் தூக்கி வைத்திருந்தாலும் அவளின் இளம் பிள்ளையின் தாயாக நினைக்க விடவில்லை. கரிப் பாவாடையும், கசங்கிப்போன பழுப்புநிற மேற்சட்டையும் ஒரு வருடமாக அவளுக்கு, அதுவே தேசிய உடை....

மரநிழலில் ஒதுங்கியிருந்த அவளையும் பிள்ளைகளையும் கவனித்து ஆதரவுக் கரம் நீட்ட அங்கு யாரையும் தெரியவில்லை. யாரைப் பார்த்தாலும் தெரியாத முகங்கள் தான்...

பதுங்கியிருந்து, மேலே அண்ணாந்து பார்த்து ஓடி ஒளிந்த சனங்கள்.... மோட்டார் சைக்கிள், கார், ஸ்கூட்டியில் உல்லாசமாக... கண்மண் தெரியாமல் தம்மை மறந்து சிரித்துக் கதைத்துச் செல்வதைப் பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.

இரவு வெறும் சோறும் முருங்கையிலை வறையும் மலர்விழியும் பிள்ளைகளும் சாப்பிட்டு விட்டு, அயல் வீட்டு "மணியம்மா" ஆச்சி வீட்டில் தஞ்சம் புகுந்தாள், தினமும் அவள் இதையே செய்வாள்... அந்த ஆச்சியின் நச்சரிப்புத் தாங்காமல் தான்... யாழ்ப்பாணத்திலுள் 'கத்தோலிக்க மதகுரு' ஒருவரைச் சந்திக்க வெளிக்கிட்டாள், கையில் ஒரு சதக் காசும் இல்லாமல் வெளிக்கிட்டது பெரிய பிழையாகிவிட்டது அவளுக்கு.....

"அம்மா... பிஸ்கட் வாங்கித் தாங்கோ..."

"சும்மா.... இரு" பிஞ்சுக் கை நோகும் வரை ஆழமாக நுள்ளினாள். நோவினால் கதறிய பிள்ளைக்கு பிஸ்கட் வாங்கிக்கொடுக்க முடியாமல்.... மீண்டும் நுள்ளினாள்.

முனங்கியபடி கண்ணீரை ஆறாகப் பாய்ச்சிக் கொண்டிருந்தாள் விழியழகி. அவளின் சட்டை தோய்த்து மூன்று நாள். கட்டைச் சட்டை.... காலில் செருப்பு இல்லை.... முகத்தை வடிவாகக் கழுவிவிடாமல் தலைமயிரை மாத்திரம் படியச் சீவி விட்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியழகி..... பக்கத்து 'பிஸ்கட்' கடைகளைப் பார்ப்பதும், தாயை ஓரக் கண்ணால் பார்ப்பதுமாக இருந்தாள்.

'முகாமில இருக்கக்குள்ளே பிஸ்கட் ரொபியள்

ஆரும் தந்தினம்.... இஞ்சை ஆர் உனக்கு வாங்கித் தாறது....

என்னட்டை ஒரு ரூபாக் குத்தியுமில்லை... அந்தக் குழந்தைக்குச் சொல்லியபடி அழுதுகொண்டாள். அவளுக்கு எதுவுமே விளங்கவில்லை. பிஸ்கட் சிந்தனை அவளை ஆக்கிரமித்தது. பேரூந்தின் வருகையை எதிர்பார்த்துக் கால்கடுக்க நின்றவளுக்கு.... விழியழகியின் தொல்லை பெரிய பாடாகிவிட்டது.

டிப்பர் வாகனங்கள், வெள்ளை வான்கள், இராணுவ கனரக வாகனங்கள், சகோதர இனத்தவரின் சுற்றுலாப் பேரூந்துகள், லீசிங்கில் எடுத்த முச்சக்கரவண்டிகள்.... உழவு இயந்திரங்கள் புற்றீசல் போலப் போய்க் கொண்டிருந்தன.

பசி வயிற்றைக் கிள்ள.... கீழே குந்தி இருந்தாள். மழை.... திடீரெனப் பெய்தது.... பக்கத்துக் கடையின் முன்புறம் ஒதுங்கினாள். கடையில் நின்ற 'ஒற்றைக்கல்' தோடு அணிந்த இளம் வாலிபர்கள், இளம் பெண்கள் "அருவருத்த" பார்வையை மலர்விழியில் வீசினர். நனைந்த கோழி போல் இருந்தவளைப் பார்த்து இரக்கம் காட்ட இளசுகளுக்கு மனம் வரவில்லை....

"கடவுள்... ஏன் கல்லானார்.... மனம் கல்லாய்ப்போன மனிதர்களாலே...." எனப் படிக்கவேண்டும் போல் இருந்தது. 'இளம் வாலிபன் அந்தக் கடைக்குள் வந்து ஒதுங்கினான்... முழுவதும் நனைந்து தோய்ந்து.... அவனது முகத்தை எங்கோ பார்த்தது போல இருந்தது... அவளையறியாமல் "அவனைப்" பார்த்தாள்... அவனோ சாலையை வெறித்தபடி இருந்தான். 'அவனும்.... என்னைப் போல யாழ்ப்பாணத்துக்கோ...." "அம்மாக்குட்டி... அந்தச் சைக்கிள்..." கெஞ்சினாள் "பொத்து வாயை.... ஏதும் கேட்டியெண்டால் தள்ளி விட்டுடுவன்...."

"ஏனக்கா... பிள்ளையை இப்படி ஏசிறியள்.... சைக்கிள் கடயில... பிள்ளையை விட்டா.... பிள்ளை... என்ன கேட்கும்....?

மிகவும் மென்மையாகச் சொல்லிக் கொண்டு விழியழகியின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினான். எவரும் விழியழகியைப் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பாத இந்த நேரத்தில்... இவன் ஆசையாகக் கிள்ளுறானே...

மலர்விழி நினைத்தாள். "அம்மா... இனிக் கேட்கமாட்டேன்... ஒரு பிஸ்கட் வாங்கித் தாங்கோ...." இப்போ அவளால் பிள்ளையை அடிக்க முடியவில்லை. "அக்கா.... பிள்ளை ஆசையாகக் கேக்குது வாங்கிக் குடுங்கோ..." மலர்விழியின் நிலைமை அந்த வாலிபனுக்கு எப்படி விளங்கும்? 'வறுமைக் கோலம் கூட அவன் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லையே....' எனக் கலங்கினாள்.

திடீரென... தாண்டித் தாண்டி ஒற்றைக்காலால் இழுத்து நடந்துபோய், பிஸ்கட்டுடன் வந்தான்.... பிஸ்கட்டை உடைத்து குழந்தைகளின் கையில் கொடுத்தான்.

தேவிபுரத்தில் இரண்டாயிரத்து ஒன்பதில்... காயப்பட்டுக் கிடந்த மலர்விழியின் தாய்தந்தை.... தம்பிமார்.... தங்கைமார்... கணவன் சகுந்தலன்... சித்தி குடும்பத்தைக் காப்பாற்ற தனது வாகனத்தில் தூக்கி ஏற்றி வைத்தியசாலைக்கு கொண்டு போய்விட்ட ஆபத்பாண்டவன்... இவன்தான்... அதேமுகம்.... அதே சிதிலமாகிய கரங்கள்... தெய்வமான அந்த நேரக் காவலன்... இவன்தான் எப்படிச் சொல்வது.... இவனுக்கு... இவர்கள் 'யார்' என்பதை வினவ வேண்டிய நிலையிலும் இவன் இல்லை. பேரூந்து.... வேகமாக.... கத்தியபடி உரசி வந்து நின்றது. ஏராளமான சனங்கள். "பிள்ளைகள்" இருவரையும் தூக்கி ஏற்றிவிட்டான். மலர்விழி பிள்ளைகளை அணைத்தபடி 'A.C' பஸ்ஸிற்குள் ஏறினாள். ஏற்றிவிட்ட 'அந்த மாமாவை' திரும்பிப் பார்த்தார்கள் பிள்ளைகள். வேகமாக, மின்னல் போல் போட்டி போட்டுக் கொண்டு ஓடிய பேருந்தைப் போல்அவள் மனமும் வேகமாக ஓடியது. இப்போது.... 'காசு' பற்றிய ஏக்கம் வந்துவிட்டது.

நேற்று இரவு எடுத்த முடிவில்... காசைச் சிந்திக்காது.... நிம்மதியான வாழ்வுக்கு.... உதவிப்பணம் பெற்றுத் தொழில் செய்ய வேண்டும் என்ற நோக்கு.... எல்லாவற்றையும் மறக்க வைத்துவிட்டது. தேநீர் வைத்துக் கொடுக்க பக்கத்துக் காணிக்குள் விறகு பொறுக்கச் சென்றபோது எதிர்ப்பட்ட ஆண்களின் விரசப் பார்வை... காதால் கேட்கமுடியாத வசனங்கள்... பொம்பிளையள் எங்கேயும் இப்ப தனியாகப் போகேலாது.... அதுவும் ஆண் துணையில்லாத என்னைப் போன்ற பெண்கள் இந்த நாட்டில் பாதுகாப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழேலாது... என்று தீர்மானித்து விறகு எடுக்காமலே திரும்பி வந்ததை இப்போ மீட்டிப் பார்த்தாள். இரண்டாயிரத்து எட்டில் வட்டக்கச்சியில் உயிரைப் பாதுகாக்க ஓடி ஒளிந்து இருந்த சமயத்தில் கணவர் சகுந்தலனின் "உறவு" தாய் தந்தையரால் எதிர்பாராது ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அந்த நேரம் படிக்கும் பாடசாலை கூட பாதுகாப்பற்றதாக இருந்தது. முன்வீட்டுப் பதுங்கு குழிக்குள் சகுந்தலன், ஐம்புலன்களையும் அடக்கி ஒடுக்கி பதுங்கியிருந்தபோது, மலர்விழியின் பெற்றோரும் சகுந்தலனின் பெற்றோர் தண்ணீர் பெறச் சென்ற கிணற்றடியில் ஒருவரை ஒருவர் சந்தித்து சுகம் விசாரிக்கும் போது, குடும்பம் ஆக்கி "மேலும்" பாதுகாப்பாக வைத்திக்க திருமணம் என்ற பந்தத்திற்குள் இணைக்க முனைந்து "யார்" "எவர்" எப்படி என்று அறியாமல் மனங்கள் இணையாமல், பதுங்கு குழிக்குள்ளே சோற்றைப் பரிமாறி "உறவு" ஆரம்பிக்கும் போது, விமானத்தின் பேரொலியும் மரண ஓலம் என்ற நாதஸ்வர இசையும் பந்தத்தை ஒன்றாக்கியது.

பதுங்கு குழியும் சில மாதங்களில் பாதுகாப்பு அற்றதாக மாறிவிட மீண்டும் பல்லாயிரக்கணக்கான மக்களோடு மக்களாக இடம் பெயர்ந்து காடு மேடுகளில் "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" போல பதுங்கு குழியைத் தோண்டுவதும் இரண்டாம் நாள் இருந்துவிட்டுப் பின் ஓடுவதும்.... இதுவே..... வாழ்க்கையாகிவிட்டது.... விழியழகியின் பிறப்பும் பதுங்கு குழிக்குள் தான்.... கைக்குழந்தையுடன் மீண்டும்......... ஓட்டம்..... உடையார்கட்டில் இருந்தபோது மின்னாமல், முழங்காமல் வந்த கணையால் கடைப்பட்ட மலர்விழியின் பெற்றோர், தங்கைமார், தம்பிமார், கணவர் சகுந்தலனை... வைத்தியசாலையில் கொண்டு போய்க் கொட்டினர்.... அங்கே கணவன் சகுந்தலனைத் தவிர.... எல்லோரும் சடலங்களாக...

அடக்கம் செய்யவோ.... அழுது துயரம் தீர்க்கவோ அவகாசம் கிடைக்காமல்... நடையில், காயப்பட்ட கணவருடன்.... ஓட்டம்.... உறவுகளைப் பறிகொடுத்த துயரம் ஒருபுறம், பசிக் கொடுமை.... உடல் உள வேதனைகள்.... மாத்தளன் கடற்கரையில் தஞ்சம் புகுந்தபோது "அருணன்" வயிற்றில் உதயமானதும்... சகுந்தலனின் வாழ்க்கையும் அஸ்தமனமாகிவிட்டது.... கொத்தாக விழுந்த எறிகணைக்குள் சகுந்தலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமமாகியதை... நினைத்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்....

"அம்மா.... ரிக்கெற்...."

அவள் அழுகை.... மேலும் வேகமெடுத்தது..... துள்ளல் இசையை இரசித்துக் கொண்டிருந்த பயணிகளுக்கு இதுவெல்லாம் எங்கே தெரியப் போகிறது. கொழும்பிலிருந்து யாழ் நோக்கிச் செல்லும் பேரூந்து... வெளிநாட்டில் இருந்து உறவுகளைப் பார்த்து மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்ததையும்.... விதம் விதமான தின் பண்டங்களுடன் கூடிக் கும்மாளமிடுவதையும்.... பார்த்து வேதனையோடு நின்றிருந்தாள்.

"தங்கச்சீ.... இதில இருங்கோ...."

பெண்ணுக்குப் பெண்தான்... இரங்கும். தான் இருந்த இடத்தில் மலர்விழியை இருத்தினாள்.... அவளின் ஒரு கை இழந்திருந்தது. மனம் ஊனமில்லாதிருந்ததை நினைத்து ஆறுதல் பட்டாள்....

"அம்மா... ரிக்கற் காசு...."

நடத்துநர் நச்சரித்தார்... இதை அவதானித்த அந்தப் பெண் தனது பைக்குள் இருந்து "பச்சைத் தாள்" ஒன்றை நீட்டினாள். நடத்துனரிடம் பார்வையாலே.... அந்தப் பெண்ணுக்கு.... நன்றியைத் தெரிவித்தாள்.

"அம்மா.... தண்ணி விடாக்குது" அருணன் ஓவென்று கத்தினான்... மீண்டும் அந்தப் பெண்ணே கையிலுள்ள சோடாவைப் பருக்கினாள் அருணனுக்கு.

"எங்கை.... தங்கச்சீ..... போறீங்கள்....." ஆதரவாகக் கேட்டாள்.... அவளால் எதுவும் சொல்லமுடியவில்லை.... எப்படிச் சொல்லுவது... மௌனமாக இருப்பதைப் பார்த்து "தங்கச்சீ.... உங்கட அப்பா எங்கை" விழியழகியைக் கேட்டாள்.... விழியழகி தாயின் முகத்தைப் பார்த்தாள். "அப்பா இல்லை" மேலும் அவளிடம் கேள்வி கேட்பதை நிறுத்தி விட்டாள் அந்தப் பெண். "அக்கா... நீங்கள் நிக்கிறீங்கள்.... எங்கை இறங்கப் போறீங்கள்.... "மலர்விழி ஆதரவாகக் கேட்டாள்.

"இயக்கச்சி சந்தி...."

குலுங்கலுடன் வளைந்து செல்லும் வாகனத்துக்குள் இருப்பது கஷ்டமாக இருந்தது. முன்னிருக்கையில் இருந்த இளங்குடும்பம் கோயில் நேர்த்திக்காக "பெரிய குத்து விளக்கை" கொடுப்பதற்கு வாங்கி வைத்திருந்ததை பக்கத்து இருக்கை நண்பருக்குச் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டாள். "ம்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட பெருமூச்சு விடுவதைத் தவிர என்ன செய்ய முடியும்.....? புதிது புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட பெரிய கட்டடங்கள், வீடுகள்..... மலர்விழியின் "தற்காலிக கொட்டகையில் படும் துன்பங்கள்.... பார்த்து ஏங்கச் செய்தன.

கணவனை இழந்தாலும் "பெண்" உயிர்வாழ உரிமை கிடைப்பது கடினம் என நிஜவாழ்வில் அனுபவித்ததை எப்படிச் சொல்வது. பதினாறு வயதில் திருமண பந்தத்திற்குள் நுழையுமுன் மலர்விழியின் மாணவப் பருவம் குதூகலமாகவே சென்றதை மீட்டுப் பார்க்க அச்சமடைந்தாள். கல்வி கற்கும் ஆசை கட்டாயத் திருமணத்தால் தூக்கி வீசப்பட, இளமை துள்ளும் பருவத்தில் துணையை இழந்து பிள்ளைகளுடன் தனித்துச் சுமையைத் தூக்கிச் சுமக்க விதித்தது.... ஏன் தானோ!

தலைகளை இழந்த பனைகளின் காட்சி இயக்கச்சி வந்து விட்டதைப் பறை சாற்றியது. கையிழந்த உதவிக்கரம் நீட்டிய "அந்த நல் உள்ளம்" இறங்கும் நேரம் வந்துவிட்டதை உணர்ந்து அவளை ஏறிட்டபோது.....

"இந்தாங்கோ.... இந்த "பாக்கை" வைச்சிருங்கோ...." என்று கூறியபடி இறங்கி மறைந்துவிட்டாள்... அழகான தனது கைப்பையை விழியழகியிடம் கொடுத்ததை, வாங்கிப் பார்த்தாள். மலர்விழியிடம் "கைப்பை" இல்லாததை அவதானித்தே இவ்வாறு செய்துள்ளாள்.

பின்னிருக்கையிலிருந்த இரு பெண்கள் நீண்ட நேரமாக உரையாடிக் கொண்டிருந்தார்கள். பேருந்தின் இரைச்சலை மீறி அவர்களின் உரையாடல் வெளிவந்தது..... காணாமற் போன தனது பெண் பிள்ளைகளைத் தேடி அலைந்து திரிந்ததை பட்ட துன்பத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள்..... திரும்பிப் பார்த்தாள்.... இந்த அம்மாவின் நெற்றியும் புல்வெளியிற் கட்டாந்தரையாகிக் கிடந்தது. "பிள்ளை.... உன்ரை பிள்ளையளா இந்தப் பிள்ளைகள்....."

"ஓம் அன்ரி"

"அப்ப.... உந்தப் பிரச்சினைக்குள்ள அம்பிட்டனியே....." ஏளனம் கலந்த பச்சாதாப ஒலியாக காதில் மோதியது. "என்னண்டு பிள்ளை... உந்தச் சின்ன வயசில... பிள்ளையளைப் பாக்கிற.... மனிசனும் இல்லாம".... காணாமல் போன தனது பிள்ளைகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக நேர்த்தி வைத்து.... பெயர் விபரம் கிடைத்ததால் அந்த நன்றிக்காக கடவுளுக்கு "இராஜகோபுரம்" அமைக்க லட்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணங்களை அனுப்பிய தனது உறவினர்களின் உதவியைச் சொல்லிவிட்டுப் பெருமூச்சுவிட்டாள்....

இங்கு மலர்விழி போன்ற இளம் விதவைகளின் மனத்துயர் இராசகோபுரம் போல் கொழுந்து விட்டெரியும் நிலையை யார் வந்து பார்ப்பார்?

"பிள்ளை..... தையல் வேலை.... செய்வாயோ....." மௌனமாக இருந்தாள்...." தோட்டம் செய்வாயோ" ஏன் இப்படி இந்த "அம்மா" கேட்கிறாள் என்பதை உணர்ந்து தன்னை நினைத்து வெட்கப்பட்டாள். ஏதாவது தொழிலைச் செய்து பழகியிருந்தால் அடுத்தவரை நாடி படியேறத் தேவை ஏற்பட்டிருக்காது.....

"பிள்ளை..... என்ரை பிள்ளையும் உயிரோடு இருந்தால் உன்னை மாதிரித்தான் இருப்பாள்....." என்று சொல்லியவாறு கண்ணீர் சொரிந்தாள்.....

இரண்டு பிள்ளைகளும் மடியில் நித்திரை, சாவகச்சேரி கடை அருகில் சிறிது நேரம் பேருந்து நின்றது. பயணிகள் இறங்கினர்..... மலர்விழி இறங்கி..... பிள்ளைகளுக்கு எதை வாங்கிக் கொடுப்பாள்......?

"கன்டோஸ் இருக்கு..... பிள்ளைகளுக்குப் பிரிச்சுக் குடு பிள்ளை...." ஆதரவாகத் தந்துவிட்டு ஒருபுறம் ஒதுங்கி நின்றாள். மீண்டும் பேருந்து பயணத்தைத் தொடர்ந்தது.... ஆனால் அவள் போகும் பயணம் எங்கே முடியப் போகுது. சிந்தனைக் குழிக்குள் அகப்பட்டாள். "சீ.... பெத்ததுகளையும் பறிகொடுத்து கட்டினவனையும்.... இழந்த சரியான பாவியாகி விட்டனே....." கண்கள் பனித்தன.... இந்தப் பிஞ்சுகளை எப்படி வளர்க்கப் போறன்....? பாரிய பொறுப்புக்கு முகம் கொடுக்கத் தனக்குத் தைரியம் இருக்குமா.... யோசித்து மண்டை குழம்பியது. மலர்விழியைக் கண்வெட்டாமல் பார்த்தாள் அந்த வயதான அம்மா..... நாவற்குழி தாண்டி யாழ் நகரை நோக்கி பேருந்து விரைந்தது. பல வருடங்கள் காணாது இருந்த யாழ்ப்பாணத்தின் புது மெருகைக் கண்டுகளிக்க புலம்பெயர் நாட்டில் இருந்து வந்தவர்கள் எழுந்து நின்று இரசித்தனர். புறத்தில் புதுப்பொலிவு இருந்தாலும் அகத்தில் அருவருப்புத்தான் என்பதை மண்ணில் மிதித்த பின்பேனும் உணர்வார்களா?

தான் போய் இறங்கும் இடத்தை யாரிடம் விசாரிப்பது? கடவுள் தான் எல்லாம். "என்னைப் படைத்த ஆண்டவன் வழியைக் காட்டாமலா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவான்" தற்துணிவுடன் இருந்தாள். எத்தனையோ விருட்சங்கள் வெளியில் இனம் காட்டாது உதவி செய்து தூக்கிவிடும் பரோபகாரிகள் இன்னும் இருப்பதால் தான் இந்தப்பூமி வாழ்கிறதோ...."

கோயில் நேர்த்திக்கான பணத்தை, ஆதரவற்ற குடும்பத்துக்கு உதவியாக இருக்க கொடுத்துதவுவதே இறைவனுக்குச் செய்யும் கைம்மாற்றாக இருக்கும்... என இந்த வயதான "மீனாட்சி அம்மா" மனம் மாறி..... பேய்க் கோலத்தோடு பச்சிளம் பாலகரை வளர்க்க வழி தெரியாமல், கொடிய கயவர்களோடு போரிட்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள சுயதொழில் நிச்சயம் தேவை என அனுபவ ரீதியாக உணர்ந்ததனால் தான்... இந்தத் திடீர் முடிவு.... '

"பிள்ளை..... என்னோட இறங்கி வா.... நான் உனக்கு தையல் மெசின் வாங்கித் தாறன். நீ.... தைச்சுப் பழகி... உன்ரை சீவியத்தைப் பார்...." அந்த அம்மாவின் இளகிய வார்த்தைகள் மலர்விழியின் நொந்து போன இதயத்துக்குப் பால் வார்த்தது போன்றிருந்தது. பேருந்தின் தரிப்பிடம்..... மலர்விழியின் வாழ்விற்கு வழிகாட்டிய விருட்சங்களின் விருப்பினால்... எதிர்கால வாழ்வின் நிம்மதியை இப்போதே நினைத்து... நன்றியுடன் பார்த்தபடி, குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு மனப்பாரமின்றி அந்த அம்மாவுடன் நடந்து சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் இடம்பெற்ற சிறுகதை

## வேர் படரா அறுகுகள்

திரு. பா. ஜெயதாசன்,
*பிரதேச செயலகம்,*
*பச்சிலைப்பள்ளி.*

"காத்தெல்லே பிள்ளை சரியா அடிக்குது உனக்கு இதுகூடத் தெரியேல்லயே. உந்தப் பெரிய விளக்க கொழுத்திற ஆளின்ர அளவப் பாரன்" என நக்கலடித்தபடி,

"இதென்ன இப்படி விளக்க கொழுத்தல்லாமே" எனக் கேட்டுக் கொண்டும் விளக்க கொளுத்தக் கஸ்ரப்பட்டுக் கொண்டிருந்தவளிடம் இருந்து எட்டித் தீப்பெட்டிய பறிச்சு தனது இரண்டு கையும் பொத்தி பெரிய விளக்கின்ர எல்லாத் திரியளையும் கொழுத்தி போட்டு நிமிர்ந்தார் திரவியம் அண்ணர்.

பெயருக்கேத்த மாதிரி அவர் ஒரு திரவியம் தான். ஊருக்குள்ள தன்ன ஒரு ஆளாகக் காட்டுவதில் அவருக்கு அவ்வளவு பிரியம். இப்பவும் பாக்கிறீங்க தானே அவற்ர நக்கலான கதைய. இப்படிக் காத்துக்குள்ளயும் விளக்க கொழுத்தினது அவற்ற முகத்தில என்னவோ சாதித்துவிட்ட சந்தோசம் கிடந்தது.

மண்டபத்தூணுடன் சாய்ந்தபடி இதை எல்லாத்தையும் பாத்தபடி விளக்கை காத்துக்க கொளுத்தேலாத ஆற்றாமையுடன் நின்று யோசித்துக் கொண்டிருந்தாள் றஞ்சி. எத்தின தரம் யோசிச்சும் இந்த வேலையள செய்யாம இருக்கவேணுமெண்டு நினைக்கிறவள். ஆனா சனியன் பிடிச்ச ஆசை மட்டும் விடாம முந்தின பழக்கத்தில ஓடி ஓடி முன்னுக்கு வாறத நிப்பாட்டேலாம கிடக்கு.

கோயிலச் சுத்திப் பார்த்தாள் இண்டைக்கு சனிக்கிழமை என்பதான போல என்னவோ அவள ஒத்த கன பிள்ளைகள் கோயிலுக்கு இண்டைக்கு வந்திருக்கினமென மனதுக்க நினைத்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனடி விடியவே சமையல் வேலைக்கு வரேல்ல" வெருட்டுற மாதிரி கேட்டுக்கொண்டே வள்ளியம்மா தலையைக் குனிஞ்சு தலை மடப்பள்ளி கூரையில இடிபடாத திரும்பி இவளயும் பாத்துக்கொண்டு மடப்பள்ளிக்குள்ள போறா.

வெளிய சரியான வெய்யில். சுடுமணலில் காலை வைச்சு நடந்ததாலோ என்னவோ வள்ளியம்மா காலத் தூக்கித் தூக்கி வேகமாய் மண்டபத்துக்க போறா.

"ம்.... என்னதான் ஒவ்வொரு நாளும் நேரத்துக்கு வந்தும் ஒரு நாள் பார் விடிய வரேல்லையென்டவுடன மனிசி என்ன மாதிரி கத்திப்போட்டு போகுது" என முணுமுணுத்தாள் றஞ்சி. முன்னமெல்லாம் அப்பாவோட வரேக்க தன்மேல் அன்பு பாராட்டும் வள்ளியம்மா இடம்பெயர்ந்து போய் இப்ப நாங்களெல்லாம் ஊருக்கு திரும்பி வந்தாப்பிறகு அவவின் போக்குச் சரியில்லாமல் இருக்கு.

திரும்பிக் கோயிலுக்குள்ள பாக்கிறாள்.

அங்க பூசாரி பூசைக்குரிய ஆயத்தங்களுடன் உள்மண்டபத்துக் குள்ளால போறது தெரியுது. கையில் தட்டத்துக்க பூ, பழம் மற்றும் இதர பொருட்களுடன் எங்கட பானுவண்ண பூசாரிக்குப் பின்னால போறார். முந்தியெண்டா அப்பாதான் எல்லாம் கோவில வேலையள் ஒண்டும் விடாம செய்துபோட்டு ஒரு ஓரமா போய் நிப்பார். எல்லாம் முடிய ஐயா சொல்லிறதயும் செய்து போட்டுதான் வீட்டை போவார். இப்ப அப்பாவத்தான் ஆர் நினைக்கப் போகினம். என்னத்தான் ஆர் கவனிக்கப் போகினம். ம்... பூசாரி போன வேகத்தைப் பாத்து அட பூசைக்கும் நேரம் ஆகீட்டுது போல என யோசித்தாள்.

பத்து நாளைக்கு முந்தி எங்கட வீட்டிக்கு வந்திருந்த எங்கட பக்கத்து வீட்டு மகேசனரி அம்மாவோட ஏதோ பெரிசா கதைச்சுக் கொண்டிருந்தா.

"அம்மன் கோவிலை கும்பாபிசேகமாமக்கா அதோட நாப்பத்தைஞ்சு நாளைக்கு மண்டலாபிஷேகமாம் அதோட அத்தின நாளும் அன்னதானமு மாமக்கா" என மகேசக்கா அம்மாவோட கதைச்சுக்கொண்டிருந்ததக் கேக்கவே சந்தோசமாயிருந்தது. "என்னக்கா செய்வம் கொஞ்ச நாளென்டாலும் பிள்ளையள் பிராக்காய் போய்வரட்டும் வேற நாங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னத்ததான் செய்யிறது" என மகேசக்கா கதைச்சுக் கொண்டிருந்தா.

எங்கட குடும்பத்தைப் போல அவாவாவும் நாலு பிள்ளையளோட இப்பதான் தன்ர வீட்டுக்கு மீள்குடியேற்றத்துக்கென வந்திருக்கிறா. வீட்டுக்கு எண்டு சொல்லக்கூடாது வளவுக்க எண்டுதான் சொல்ல வேணும். ஏன்ன அப்படிச் சொல்லிறனென்டா நாங்க இங்கயிருந்து எல்லாத்தையும் விட்டுட்டு போகேக்க இங்க எல்லாமிருந்தது. வீடு, மரங்கள் என எல்லாமே இருந்தது. ஆனா திரும்பி இங்க வந்து பாக்கேக்க ஒண்டுமேயில்ல. ம் ஒண்டுமில்ல.

ம்.... வளவுக்கதான் நாங்களெல்லாம் வந்திருக்கிறம். எங்கட வீட்ட போகலாம் என்ட கனவோட தான் செட்டிகுளத்தில பஸ்ஸில ஏறினனாங்கள். எல்லோரோடையும் சேர்ந்து வந்து இஞ்ச வந்து பாக்கத்தானே எல்லாம் தெரியுது. எல்லாம் இடிஞ்சு போய், மிஞ்சினது பாதி மிஞ்சாதது பாதியுமா யார் யாரோவெல்லாம் எங்கடயள எல்லாத்தையும் கொண்டேச் சேத்துப் போட்டாங்கள். முதல்ல வந்து பாத்தாக்கள் சொல்லிச்சினம் தாங்க வந்து பாக்கேக்க இருந்த வீட்டுக் கூரையெல்லாம் இப்ப தாங்களும் வந்த பிறகு பாக்கேக்க ஒண்டுமில்ல எண்டிச்சினம்.

நாங்கள் வந்து தனிய வளவுக்க சின்னக் கொட்டிலுக்க குந்திக் கொண்டிருக்கிறதுதான் மிச்சம். கடவுள் எல்லாத்தையும் பாத்துக்கொண்டு தானே இருக்கிறார். நாங்கள் எவ்வளவு கஸ்ரப்பட்டம். அப்பெல்லாம் யாருமே வரேல்ல. ம்... என்னத்த யோசிச்சென்ன இப்பவும் கடவுள் கூட காப்பேத்தேலாத ஆக்களாத் தானே ஆகிட்டம்.

நாங்களென்டாலும் பரவாயில்லை எண்டுதான் உங்களுக்குச் சொல்லனும். பக்கத்து றோட்டில இருக்கிற மாரியண்ணையின்ர நிலைமையொ அப்பவும் இப்பவும் வேற மாதிரி இருக்கு. அவர்ர காணிய ஆமிக்காறர் தங்கட காம்பிருக்கென்டாம் "கொஞ்ச நாள் பொறுக்கிறது தானே" எண்டும் இப்பவும் ஏழெட்டு மாதமாச் சொல்லிக்கொண்டிருக்கிறாங்கள் காணி விடுற மாதிரி இல்ல.

ம்.... அவரும் பாவம் என்னத்த செய்யிறது. இதெல்லாம் கதைக்கக்கூடிய நேரமா, இடமா. என்னமாதிரி வாழ்ந்தவர்கள். எங்கட அப்பா அடிக்கடி சொல்லுவார் "வாழ்ந்தா மாரியண்ணர் மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கோணும் பிள்ளையள். நல்லா படிப்பிசசுக்கொண்டும் அவையள நல்லா கவனிச்சுக் கொண்டும் என்னமாதிரி இருக்கிறேர்" என்று. இப்ப எல்லாம் போய் பிள்ளையளவும் பறிகொடுத்து ஆற்றையோ காணிக்க கொட்டில் போட்டுக்கொண்டு என்ன மாதிரி எல்லாம் நிலைமை மாறிப்போட்டுது. ம்..... காலம் மாறிப்போச்சு.

அண்டைக்கு மகேசக்கா அம்மாவோட கதைச்சிட்டுப் போகவே கோயில் திருவிழாவ நினைக்க அப்பவே றஞ்சிக்கு பழைய நினைவுகள் மனசுக்குள்ள விரியத் தொடங்கீட்டுது.

முந்தி திருவிழாவெண்டா அப்பா விடிய முந்தியே கோயிலுக்கு போயிடுவார். நானும் தான் அப்பாவோட போயிடுவன். அம்மா தான் கத்துவது பின்னால கேக்கும்.

"இஞ்ச எனக்கு எவ்வளவு வேலை கிடக்கு, தம்பி தங்கச்சியவளவயள விட்டுட்டு நீ கொப்பரோட போ எண்டுதான் கத்துவா"

கோயில்ல அவ்வளவு வேலையையும் அப்பாதான் மாஞ்சு மாஞ்சு செய்வார். நானும் சேந்து செய்வன். நல்ல சந்தோசமாயிருக்கும். இப்ப தனியத்தான் போகணும். விடிய நேரத்தோட தனிய குளிக்கணும், பூக்கொண்டு தனிய போகணும். தாமரை இலை தனிய புடுங்கிக் கொடுக்கணும்.

'ம்....' நித்திரை கண்ணுக்க வாறமாதிரி..... அண்டைக்கும் இரவு போலியான கனவுகளுடன்தான் றஞ்சி உறங்கிப் போனாள்.

"பகல் கனவோடி என நுள்ளிப்போட்டு சிரிச்சுக்கொண்டு காவியா புதுப்பாவாடை சட்டையுடன் தன்ர அப்பாவோட பூஜை மண்டபத்துக்க போறாள். பின்னால அவளின்ர தங்கச்சி குடு குடு எண்டு சின்னக்காலால நடந்து அவைக்குப் பின்னாலேயே போறாள் "ம்...." அவளப் பாக்க வடிவாக்கிடக்கு. தன்ர உடுப்ப குனிஞ்சு பாத்தாள். "ம்...." என்ர உடுப்பு ஊத்தையில்லாட்டியும் பழசு எண்டு அப்பிடியே தெரியுது என நினைத்துக் கொண்டு வீட்டை தம்பி இப்ப என்ன செய்யிறானோ தெரியா. சி அவனையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கலாம் என நினைத்தாள். அவனெங்க விடிய எழும்பிறானே. இங்க கொஞ்ச நேரம் பிந்தி வந்ததுக்கே சனம் கத்துதுகள். அவனோட வாறதென்டா நேரமாயிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்...." அவனுக்கும் நல்ல உடுப்பில்ல.

ம்.... என்ர அப்பாவும் இப்ப இருந்திருந்தா.....

அட என்னத்த தான் நாங்களும் செய்யிறது. எல்லாத்தையும் கொடுத்துப் போட்டு எல்லாரையும் தானே விட்டுப்போட்டு வந்து கிடக்கிறம். ம்..... அப்பா இருந்திருந்தா இப்படி ஓடி ஓடி கோவில் வேலைகளைச் செய்துகொண்டிருப்பார். நானும் தானே அப்பாவோட சேர்ந்து ம் ம்.....

எங்கட அப்பா என்டா இங்க தெரியாத ஆக்களே இல்ல. ராசு என்டாத்தான் எல்லாருக்கும் தெரியும். சின்னராசு என்டது தான் அப்பான்ர பேர். ஆனா எல்லாரும் தங்களுக்கு சுகமாக கூப்பிறதுக்கெண்டு ராசு எண்டு வைச்சிட்டினம். அதுவே அப்பாக்கும் நிலைச்சு இப்ப என்னையும் ராசுவின்ர பெட்டை என்ற அளவுக்கு வந்திருக்கு. அப்பாவுடன் கோயிலுக்கும் பள்ளக்கென்றும் போற அப்பத்த நாட்கள் நினைச்சா அவளின் பிங்சு மனசுக்க என்னவோ செய்யும்.

இண்டைக்கும் ராசுவின் குடும்பம், ராசு இல்லாம மனிசி வடிவும் அவளின்ர பிள்ளைகளும் ஊருக்கே புதிராகத்தான் இருக்கினம். இண்டைய காலத்தில வேலை செய்பவர்களே கஷ்டப்படும் நிலையில் நிரந்தர உழைப்பெண்டு ஒன்றில்லாமல் தனியாக தையல் மிசினுடன் மட்டும் வருமானமின்றி குடும்ப பாரம் தாளாமல் தத்தளிக்கும் வடிவுக்கு அவளின்ர மகள் றஞ்சிதான் நல்ல துடுப்பு. அதுதான் ஊர் சனம் புதினமாக பாத்துக்கொண்டிருக்குதுகள்.

பிள்ள இதைத் தையம்மா. இதை வெட்டம்மா. பிள்ளை இதை செய்யம்மா. பிள்ளை தண்ணி கிள்ளிக்கொண்டாம்மா. பிள்ளை தம்பிய பாரம்மா....

என தன்ர தம்பி தங்கைகளின் வேலைகளில் அம்மாவுக்கு வலம் கரம் போல உதவுவாள். அம்மா சனிக்கிழமையள்ள எங்காவது வேலைக்கு போய்விட்டா சில நேரம் றஞ்சிதான் சமையல். ஏதோ செய்து தன்ர தம்பி தங்கச்சியளுக்கு குடுத்து தானும் சாப்பிட்டு அம்மாவுக்கும் வைப்பாள்.

அம்மாவின் கவலைகள் கூடி ஏலாத நேரங்களில் "அப்பனதின்னி" என கடைக்குட்டித் தம்பி வாங்கும் அடிகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடத்தால சாப்பிடாம கொண்டுவந்து தம்பிக்கு கொடுத்து தானும் சாப்பிடும் பாடசாலை மதிய உணவும், சில நேரங்களில் அதைப் பாக்கும் வடிவுக்கும் குடும்ப சுமை கஸ்ரமாயிருக்கும். யாருக்குத் தெரியப்போகுது அவளின்ர கஸ்ரமும் அவள் படும் பாடுகளும். பால் குடிக்கலாமெண்டதுக்காகவே நேசறிக்கு போற வயசு வராம நேசறிக்கு எண்டு போகும் தம்பியெண்டும் அது தான் றஞ்சியின்ர குடும்பம்.

இப்ப மூண்டு மாதத்திற்கு முன்னமே நிவாரணத்தையும் ஆறுமாதமாகிப் போட்டுதெண்டு நிப்பாட்டி போட்டினம். இப்ப இரண்டு நாளா வீட்டிலயும் சோறில்ல. ஒருத்தரக்கும் ஒழுங்கான சாப்பாடில்ல. இரவும் தம்பி அழுதவன். சோறு வேணுமெண்டு. ம்... எப்படியும் இண்டைக்கும் தம்பிக்கும் தங்கச்சியளுக்கும் அன்னதான சோத்தை கொண்டேக் கொடுக்கணும் என நினைத்தவளுக்கு தோள் விண்ணென்று வலிக்கவே திரும்பிப் பார்த்தாள்.

"என்ன கோவிலுக்கு வந்திட்டு கனவு கண்டுகொண்டிருக்கிற" "இஞ்ச வா வா இந்த மரக்கறிக் குப்பையைக் கொண்டுபோய் ஒருக்கா அந்தாத் தெரியுது பார் அந்த குப்பை குழியிக்க போட்டுட்டு ஓடிவா"

எனச் சொல்லியடி உதயன் பெரிய குப்பை சாக்கொண்ட வைச்சுட்டு போய்க்கொண்டிருந்தார்.

என்னது இது இவ்வளவு பெரிசா இருக்கு. பாரமாயிருக்கும் போல ம் தூக்க ஏலுமோ தெரியேல்ல... ம் ஆ....

அட அங்க பார் எல்லாப் பெரியாக்களும் நிக்கினம் அவையளக் காண்டு இந்த குப்பையை தூக்கிப் போடாம என்னட்ட தருகினம்.

சின்னப்புள்ளயளக் கொண்டு கடும் வேலையள செய்விக்க கூடாதென்டு இவருக்கு தெரியாதே ம்.... கேட்டா விதானையார் எண்டு மட்டும் சொல்லிப் போடுவார். தன்ர வேலையளோடு இதையும் இவர் தானே கவனிக்கணும். அத விட்டுட்டு சின்னாக்களுக்கு வேலை சொல்லிக் கொண்டு. சரி ம்... பாப்பம் மெதுமெதுவாக் கொண்டுபோய்க் கொட்டிவிட்டு வருவம் என நினைத்தவள் பையை இழுக்கிறது பாதியும் தூக்கிறது பாதியுமாக் கொண்டுபோய்க் கொண்டிருந்தாள்.

சீ இப்ப அப்பா இருந்திருந்தா இப்படி எனக்கு வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுவினமே. அப்பா எப்ப பாத்தாலும் "படியம்மா படி படிப்புத்தான் எங்களுக்கு எப்பையும் உதவும். அத மட்டும் பிள்ள மறந்திடாத" எண்டு சொல்லுவார்.

ம் நானும் இப்ப பள்ளிக்கூடத்தில கஸ்ரப்பட்டுத்தான் படிக்கிறன். கெட்டிக்காறி எண்டும் ரீச்சர்மார் அடிக்கடி சொல்லிக்கொண்டு இருக்கிறவ. விளையாட்டிலும் உதுகள் குடியிருப்புப் பிள்ளயள தோக்கடிக்கேலாது எண்டு தான் மாஸ்ரர் மாரும் கதைப்பினம். ஆனா பள்ளிக்கூடத்தில் இருக்கேக்க அப்பான்ர நினைவுதான் அடிக்கடி வருகுது. சாப்பாட்ட பாக்கேக்க, கோவிலுக்கு போகேக்க, உடுப்புக் கடையில் புது உடுப்புகளப் பாக்கேக்க எல்லாம் அப்பாவத்தான் யோசிக்கச் சொல்லுது.

குப்பையை கொட்டிப்போட்டு திரும்பிவர பூசைக்காக ஆரம்ப மணியடிச்சுக் கேட்டுது, அட நான் தானே இப்ப கனநாளா மணியடிக்கிறனான். யாரடிக்கிறதெண்டு மணியடிக்கிற இடத்துக்கு போனா அங்க தான்தான் மணியடிப்பனென்று மாறன் சொல்லிக் கொண்டிருந்தான்.

"இண்டைக்கு எங்கட பூச நான்தான் அடிப்பன் நான் தான் நான் தான்" என கத்திக்கொண்டு தன்ர பள்ளிக்கூட பொடியள் நாலைஞ்சு பேரோட கால் நிலத்தில படாத மாதிரி தொங்கித் தொங்கி மணிக்கயித்த இழுத்துக் கொண்டிருந்தான். மணியும் ஒரு தரம் அடிபடுவதும் பின்னர் மெதுவாக சத்தம் போடுவதும் பின்னர் பெரிதாக கேப்பதுவுமாக இருந்தது. புது வேட்டியும் கட்டி புதுச்சட்டையும் போட்டிருந்தான். இண்டைக்கு அவங்கட பூசையாம் தன்ர பள்ளிக்குடப் பொடியளுக்கும் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தான். இவன் இண்டைக்கு விடமாட்டான் என நினைத்தவள் திரும்பி வந்து பூசைய பாத்துக் கொண்டிருந்தாள்.

பூசை முடிஞ்சு ஐயர் பஞ்சாராத்தியை கொண்டந்து கையால பொத்தியபடி எல்லோரிடமும் காட்டிக் கொண்டிருந்தார். பொம்பிளயள் தனியா ஆம்பிளயள் தனியா பெரிய வரிசையில் நிக்கினம். பூசாரி ஆம்பிளயள் பக்கமா முதலில் தீபத்தைக் காட்டிக்கொண்டு வாறார். பொம்பிளயள் பாத்துக்கொண்டு நிக்கினம். தீபத் தட்டில சில்லறைக் காசுகளும் தாள் காசுகளும் வைச்சு வச்சு தீபத்த தொட்டுக் கும்பிடுகினம். பொம்பிளயனின்ர பக்கமா ஐயா திரும்பி வாறார். சரி உள்ள போவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட குப்பைப் பை தூக்கினதெல்லே கைகளுப்போட்டு வருவமே என யோசித்தாள். கையக்கழுவிப்போட்டு வந்து யோசிச்சுக்கொண்டு நிக்க "அங்கபார் ராசுவின்ர பெட்ட வெளியில நிக்கு இங்க வாவனடி" என கூறியபடி ஐயர் வெளிப்பிரகாரத்துக்கு வெளிய வாறார். நான்தான் கிட்ட போய்த் தொட்டுக் கும்பிட்டன்.

இப்பவும் எல்லாரும் என்ன ராசுவின்ர பெட்டை, ராசுவின்ர பெட்டை என்டுதான் கூப்பிடுறவ. ராசு என்டத அளுத்திச் சொல்றதில இவயளுக்கு பரம சந்தோசம். அடிப்படி மூர்த்தி நாதண்ணையளின்ர முகங்கள நீங்க அப்படிக் கூப்பிடேக்க பாக்கவேணும் நக்கலா இல்லாட்டி வெறுப்பா, சுளிப்பா என்னன்டே தெரியாது நீன்டுபோகும் முகங்கள் அது. நீங்களும் அத கண்டுபிடிக்கிறதென்டா புதிய ஆராய்ச்சிதான் செய்யணும்.

ராசுவென்டவுடன அப்பாவின்ர நினைப்பு றஞ்சிய மெதுவாத் தொட்டுச் சென்றது. அப்பாவ நினைக்கவே அழுகை அழுகையா வருகுது. ஏன் எங்களுக்கு மட்டும் அப்பா இல்ல. ம் ஏனென்டு தெரியல்ல. கடவுள் தனக்கும் அப்பா இல்ல எண்ட்டு எங்கட அப்பாவையும் கூப்பிட்டு விட்டாரோ. இப்ப கணபேருக்கு இப்பா இல்லதான். அப்ப நாங்க எல்லாம் கடவுளின்ர ஆக்களாக்கும். கவலைக்குள்ளும் சிரிப்பு வந்தது. ஆனா என்ர அப்பா ம்... யார் யாரோவெல்லாம் என்னவோ எல்லாம் சொல்லினம். பள்ளிக்கூடத்திலயும் ஏதும் உதவி செய்வதென்டால் அந்த அப்பா இல்லாத பிள்ள றஞ்சிய கூப்பிடுங்கோ என்டுதான் அடிக்கடி சொல்லுவினம் ம்....

அப்பிடி சொல்லேக்க எனக்கு குப்பென்று அழுகை அழுகையா வரும். கையாள முகத்தை மறைச்சுக் கொள்ளுவன்.

கடசித்தம்பிய மடியில வச்சுக்கொண்டு அம்மா செட்டிகுளம் காம்பில இரண்டு நாளா அழுதுகொண்டிருந்தத பார்த்தன். அதுக்குப் பிறகு அப்பாவக் காணவேயில்ல. "ஏனம்மா அப்பா எங்க" என்டு அடிக்கடி கேட்டன். அம்மா பெலத்தா அழுவா. பிறகு இரண்டு நாள்ல அண்ணாவையம் கானேல்ல. தேடவேணும் என்ட மட்டும் தேடி அம்மா முகாமுக்க இருந்த ஆமிக்காறர் அலுவலகங்களுக்கெண்டு அலைஞ்சதா ஞாபகம். பிறகு என்னையையும் தம்பி தங்கச்சியையும் மடியில் வச்சு அழுதழுது அரற்றினா ம் ம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா....

"ம்"

அப்பா எங்கம்மா?.... அப்பா எங்கென்டு தெரியாதாம்மா....?

ஏனம்மா இங்க எல்லாரும் இருக்கினம் அப்பாவ மட்டுமேன் காணேல்ல?

தங்கச்சி பெரிசா அழவெளிக்கிட்டாள்.

"எத்தின நாள் மற்றவைக்கெண்டு திரிஞ்சேர். எவ்வளவு உதவியள செய்திருப்பேர். இப்ப எங்களுக்கு கஸ்ரமென்டு வரேக்க யாருமில்லயே" என்டு பெரிசா கத்தி அழுதா தொடர்ந்து அழுதா இரவிரவா சாப்பிடாம அழுதா. அதுக்குப்பிறகு அம்மா அழுதத நான் பாக்கேல்ல.

"டே மணியம் இஞ்ச வா... இந்த பந்திப் பாயக்கொண்டேப் போடடா" என்று வல்லிபுரத்தார் சத்தத்துடன் திடுக்கிட்ட சுற்றுமுற்றும் பார்த்தாள். பிரசாதங்கள் குடுத்து முடிஞ்சு சாப்பாட்டு பந்திக்கு எல்லாரும் போக இவளும் பந்தியில் போய் இருக்கப்போனாள்.

"அட பொறுபிள்ளை முதல் சபையில் ஆம்பிளையள் போகட்டும், கொஞ்சம் பொறு" என வல்லிபுரமண்ணை கூறிக்கொண்டே என்ர வகுப்பு நிகேதனை போய்ச் சாப்பிடச் சொல்லி இலையக் குடுத்து விட்டார்.

சரி அடுத்த சாப்பிட்டு பந்திக்கு போவம் எண்டுட்டு தனது பாவாடை பொக்கற்றை ஒரு தடவை தொட்டு சொப்பின் பாக் இருக்கா என்று தடவினாள்.

பெரிய சொப்பிங் பாக் விடிய எடுத்து வைச்சது. அப்பிடியே அமத்துப்பட்டு பொக்கற்றுக்க கிடந்தது. மற்ற பொக்கற்றுக்க பார்த்தாள் அங்கயும் ரெண்டு சொப்பிங் பாக் கிடந்தது.

கார்த்திகேசு வாத்தியின்ர மனிசி சொன்னது "பாலப்பழம் ரெண்டு பாக் புடுங்கித் தாவனடி ஒரு பைக்கு ஐம்பது ரூபா தாறனென்டவா" ஆரோ அவாவின்ர தங்கச்சியின்ர பிள்ளையள் இந்தக் கிழமை கொழும்பால வந்து நிக்குதுகளாம். அவைக்குக் குடுக்கவெண்டு கேட்டவா. இங்க இருக்கேலாதென்டு அப்பவே கொழும்போட போனவையாம். இப்ப வீட்டுத்திட்டம் வந்ததென்டு விதானையார் சொல்லிப்போட்டு இவையின்ர பேரையும் பதிஞ்சவராம். எல்லாம் விதானையின்ர செல்வாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்.... இங்க பூசைக்கு வரமுதல் ஏத்தக் காட்டுக்கு போய் கொஞ்சம் பாலப்பழம் புடுங்கியிருக்கலாம். அட அண்டைக்கு கொஞ்சம் உள்ளுக்க விறகு பாக்கப்போனப்ப எவ்வளவு காய் நிலத்துக்கு கிட்ட கையிக்க எட்டுறமாதிரி கிடந்தது. இப்ப அதெல்லாம் பழுத்திருக்கும். ஏன் ஒருத்தரும் புடுங்கேல்ல எண்டு யோசிச்சாள்.

என்னவோ இண்டைக்கு அம்மாட்ட சாப்பாட்ட குடுத்திட்டு ஏத்ததுக்கு போகவேணும். மனதுக்க கூறிக்கொண்டாள். இருட்டான அந்த இடத்தில் பத்தைகள் நிறைந்த இடமொன்றினூடாக பல பாலப்பழக்குலைகள் யாரின் வரவுக்காக என்றில்லாமல் காத்துக் கொண்டு கிடந்தன.

நேரமாகிக் கொண்டிருக்க ஐயோ எனக்கு சரியாப் பசிக்குது. முதல் பந்தி முடியப்போகுது. எப்பிடியும் இதில இரண்டாவதிலையாவது இருந்து சாப்பிட்டு உடன போகோணும். நினைத்தபடி இருந்தவள பூசாரியின் சத்தம் மடபள்ளிப் பக்கம் திருப்பியது.

இது உபயகாருக்கு. இதடா அதுஉபயகாரற்ற தங்கச்சிக்கு. உத உந்த சண்முகத்தின்ர கடையடிக்கு குடுத்துவிடு. இது சாந்தியம்மாவுக்கு, இது....

யார் யாருக்கோ எல்லாமோ பெட்டி பாத்திரங்களுக்குள்ள நிரப்பி சாப்பாடு போகுது. பூசாரி கெட்டிக்காறர். தன் வயித்துப்பாட்டை மட்டுமல்ல, தன்ர சொந்தங்களுக்கும் இந்த கோயில பாவிச்சுச் கொண்டிருக்கிறார். அன்னதானமென்டத விளங்கிக்கொண்ட விதம் அவரைப் பொறுத்தமட்டில் சரியாத்தான் இருக்கு.

“ஆ பந்தி முடிஞ்சிட்டு எல்லோரும் வாங்கோ” வல்லிபுரத்தார் இரண்டாவது பந்திக்கு ஆக்கள கூப்பிடுறார். முதல்ல சாப்பிட்ட எல்லாரும் இலையைக் கொண்டேப் போட்டுட்டு கையக் கழுவிறதுக்கு முண்டியடிச்சுக் கொண்டு கிணத்தடிக்கு போகினம்.

இங்க வெளியில இருந்து ஆக்கள் பந்தலுக்கு போகினம். நானும் போகவேணும். வெடுக்கென சாப்பாடு போடும் இடத்துக்கு ஓட்டமும் நடையுமா போனவள வள்ளியம்மா இடைமறிச்சா.

“எடி பிள்ள உதுல பிறகும் இருந்து சாப்பிடலாம், இஞ்ச ஒருக்கா வா உந்த கடையடிக்குப் போய் ஒருக்கா இந்த சோத்துப் பாசல கணேஸ் மாமாவிட்டு குடுத்திட்டு வாடி, அவன் பசிக்குதெண்டு சொன்னவன்” என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியபடி பார்சலொன்றை நீட்டினா.

இதென்ன இந்த மனிசி எனக்குப் பசிக்கிதெண்டு சாப்பிடப்போறன் மனிசி இத நீட்டுது. அந்தா அனு, சாயிரன் அவான்ர பிள்ளைகளெல்லாம் சாப்பிட்டிட்டு வருகினம் அவேற்ற குடுக்கலாம் தானே?

"நான் மாட்டன். எனக்கு பசிக்குது மெதுவாச் சொன்னாள்...."

சொல்லிப்போட்டு பந்திக்கு இருக்கப்போனவள பாத்து வள்ளியம்மா திரும்ப கூப்பிடுறா.

"இஞ்ச வாடி குஞ்சு இதிலொருக்கா ஓடிப்போட்டு ஓடிவாவென் வந்து சாப்பிடு செல்லம்" என குழைஞ்சபடி றஞ்சியின் கையப்பிடிச்சா வள்ளியம்மா.

இம் இதென்ன கஸ்ரமாக கிடக்கு என்னத்தைச் சொல்லியும் மனிசி விடுகிதில்லையே.

றஞ்சியிடமிருந்து மெதுவான சினுங்கலொன்று வெடித்து

"நான் மாட்டன் நான் சாப்பிடப்போறன்...."

வள்ளியின் கைய உதறிக்கொண்டு றஞ்சி சாப்பிடப்போனாள். அவான்ர பிள்ளையள் நிக்கினம் தானே அவேற்ர தன்ர மருமோனுக்கு சாப்பாட்ட குடுத்துவிடலாம் தானே மனதுக்க திட்டித் தீர்த்தாள்.

அப்பாடா வரிசையில் கடசியிடமாவது கிடைச்சிதே ஒடுங்கி உட்கார்த்தாள். இலை போட்டுக்கொண்டு குமாரண்ண போனார். பின்னால குழைசாதத்தினை வச்சிக்கொண்டு வைத்தி வந்து கொண்டிருந்தார். கொஞ்ச சோத்த கையில் அள்ளி வாய்க்குள்ள போட்டு அகத்தினாள். சோறு வாய்க்க சரியாச் சுட்டுக்காண்டிருந்தது. பசியில சூடும் தெரியேல்ல. நாக்கு விறைச்ச மாதிரியிருந்தது.

மெதுவா சொப்பின் பாக்கையெடுத்து அரவாசிச் சோத்த இலையில் இருந்து எடுத்து அதுக்க போட்டுட்டு திரும்பி பார்த்தாள். குமாரண்ண திரும்பி சாப்பாடு வச்சிக்கொண்டு வந்தார். இவள் இலையிலையும் திரும்ப சோத்த வச்சிட்டு ஒரு மாதிரி பாத்துக்கொண்டு அங்காலயும் வச்சிக்கொண்டு போனார்.

ம் என்ன செய்யலாம் திரும்பவும் சொப்பிங் பாக்கில அள்ளி அள்ளிப் போட்டு பாவாடைக்குப் பின்னுக்கு லேசா மறைச்சு வச்சிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடத் தொடங்கினாள். திரும்பி வந்த குமாரண்ண இலையில் சோத்த காணாம திகைச்சிட்டு பிறகும் கொஞ்சம் வைச்சிப்போட்டு

"இதென்ன சின்னபிள்ள இப்பிடிச் சாப்பிடுதென்று" அங்கால யாருக்கோ சொல்வது கேட்டது. அவர் சொன்னா சொல்லீட்டுப் போகட்டும். திரும்பிப் பாத்தாள் றஞ்சி. யாரும் தன்னப் பாக்கேல்ல என்டவுடன் மிச்ச சோத்தையும் கிள்ளி பாக்குக்க போட்டுக்கொண்டு இப்ப எழும்பினாதான் நல்லம் வாசல்ல சனமுமில்ல ஒண்டும் 'கேக்காதுகள் கெதியா வீட்டையும் போகலாம். என நினைத்தபடி சொப்பிங் பைய தூக்கிக் கொண்டு இலைய எறிஞ்சுபோட்டு திரும்பிப் பாத்தாள் கிணத்தடியில் கன சனம் ம்....

சட்டையில் கையைத் துடைச்சுக்கொண்டு வெளிக்கிடத் திரும்பினாள்.

"உனக்கு எத்தின தரமெடி சொல்லுறது சொப்பிங் பாக்கில் சோத்த கொண்டுபோகாத கொண்டு போகாத எண்டு இண்டைக்கும் சனம் கூட வருகுதுகள். அங்க பார் ஓவிஸ் காறரும் வந்திருக்கினம். நாங்க குழையல் காணாதெண்டு யோசிக்க நீ சொப்பிங் பாக்கில கொண்டு போறியே"

வள்ளியம்மா பேய்க்கத்து கத்தினா

கோயிலுக்க நின்ட சனமெல்லாம் திரும்பி பாக்குது. றஞ்சியின் சொப்பிங் பாக்கிருந்த கைய வள்ளியம்மா பிடிச்சிருக்கா.

ஆ ஆ.... ஆ ஆஆஆஆஆஆஆ....

வலி தாங்கேலாம கிடந்தது. ஆ விடுங்கோ வலிக்குது விடுங்கோ.

நான் வீட்ட போகேல்லும் வீட்ட ஆ... ஆ ஆ நோகுது.

மெதுவா சிணுங்கத் தொடங்கினாள் றஞ்சி.

எல்லாரும் பாக்கீனம். சீ என்னோட படிக்கிற காவியா, அஜித், சுகிம் எல்லாரும் பாக்கீனம். கண் கலங்கிக்கொண்டு வந்தது. பொலபொலவென கண்ணீர் சட்டைய நனைச்சது.

கை நோக பைய கைவிட்டாள். அது மண்ணுக்க விழ அத எடுத்து வேலிப்பக்கமா எறிஞ்சு போட்டு விறுவிறுவென மடப்பள்ளிக்க போனா வள்ளியம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீ இதுகளோடு கரைச்சல்தான். பூசாரி பக்ககத்தில் நிண்டு கொண்டிருந்த யாருக்கோ சொல்வது கேட்டது. உது உந்த குடியிருப்புக்க இருக்கிறதுகள். உவன் துலைஞ்சுபோன ராசுவின்ர பெட்ட. உதுகள் வந்தாலே பிரச்சினைதான். கோயிலுக்க இருந்து அதைக்கொண்டு போகுங்கள், இதைக் கொண்டு போங்கள், சொன்னாலும் கேக்காதுகள்... ம்...." என கத்திக்கொண்டிருந்தார்.

"உதுகள எல்லாம் வைக்கவேண்டிய இடத்தில் வைக்காட்டி இப்பிடிதான்" எனக் கூறிக்கொண்டு பெரிய பெட்டியொன்ட ஆட்டோக்குள்ள ஏத்திப்போட்டு ஆட்டோ றைவருக்கு ஏதோ சொல்லிப்போட்டு பூசாரி வசந்த மண்டப பக்கமாக கத்திக்கொண்டு போனார். அவற்ற பிரச்சனை அவருக்கு.

நான் அழக்கூடாது ம்... ம்....

நான் வீட்டை என்னெண்டு போறது. தம்பிபாப்பா தங்கச்சியோட பாத்துக்கொண்டிருக்குங்கள்... அம்மா கெதியா வாவெண்டவா.

ம்... கோயிலுக்குள்ள எல்லாரும் இப்பவும் பாத்துக் கொண்டிருக்கினம். கோயிலுக்கு வெளியில வரவே சரியான வெய்யிலாக்கிடக்கு. காத்தும் தூக்கியடிக்குது. அட சீ கண்ணுக்க மண்ணள்ளிப் போட்டுது. சீ.... கையாள மண்ணத் துடைச்சுக்கொண்டு கோயிலுக்கு வெளியில வந்தாள். மன வெக்கைக்குள்ள ஒண்டும் தெரியேல்ல.

கோயில் மடப்பள்ளிக்கு பின்புற வேலியோரமா நாய் அவளின் சொப்பின்பாக்கை இழுத்துக் கொண்டிருந்தது. அது அதக்கெளவி இழுக்கிறதும் சொப்பின்பையும் பிஞ்சு இழுபட்டுக்கொண்டு கிடந்தது. பிய்ந்த இடத்தால சோறு வெளித்தள்ளியது. நாய் அவசர அவசரமா அவக் அவக்கென அதத் தின்னத் தொடங்கியது.

கோவம் கோவமா வருகுது யாரிடமெண்டு தெரியேல்ல. யாரக் கோவிக்கிறது. ம் எங்கட கஸ்ரம் அப்பா இல்ல. அப்பா இருக்கேக்க அப்பாவ கொண்டு சிரிச்சு சிரிச்சு வேல வாங்கின சனம் இப்ப தங்கட வேலையள செய்யேல்ல என்டவுடன்....

தூ.....

விறுவிறுவென நடக்கத் தொடங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி தங்கச்சியள் பார்த்துக்கொண்டிருப்பினம். வீட்டுப் படலையடியில் தன்ன பாத்துக்கொண்டிருக்கும் தம்பி தங்கச்சியின் உருவங்கள் மனதில் நிழலாய்த் தெரிந்தன. ஏத்தடிக்குப் போய் காட்டில பாலப்பழத்தையாவது புடுங்கிக்கொண்டு போவமென்று யோசித்தாள்.

பாவாடை பொக்கற்றுக்குள்ள தடவிப் பாத்துக்கொண்டாள். இன்னும் இரண்டு சொப்பிங்பாக் கிடக்கு. காட்டுப்பக்கமா நடக்கத் தொடங்கினாள். அதில் ஒரு சொப்பின்பாக்கைத் தூக்கி காத்தில் வீசி எறிந்தாள். அது வாய் விரிந்து காத்து உள்ளுக்க போக சுத்திசுழன்று காத்தில பறந்து போனது.

கோவிலும் கோவிலல இவளப் பாத்துக்கொண்டிருந்த சனத்தின்ர உருவமும் தூரம் தூரமாய் சின்னன் சின்னனாய் போய்க்கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆம் இடம்பெற்ற கட்டுரை

## பெண்

திருமதி. உமாநிதி கணேசநாதன்
*மே.கு.ந. உத்தியோகத்தர்.*
*சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.*

வாழ்க்கை எவ்வாறெல்லாம் போய்க்கொண்டிருக்கிறது. பலவிதமான பல வழிகளில் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது. திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் என்கிறார்கள். விதியை மதியால் வெல்லலாம் என்கிறார்கள். ஆனால் அவளின் வாழ்வு..... சொர்க்கத்தில் நிச்சயமானது என்று ஒரு குழந்தை பிறக்கும் வரை நம்பியவள் இன்று.... நனவுகள் எல்லாம் கனவாகி, கற்பனையாகி உணர்வுகளே மரத்துப்போகும் வண்ணம் கணவனிடம் வாங்கிய அடி,உதை,ஏச்சுக்கள்..... என்று வாழ்க்கையே நரகமாகிய போது......

சாரதா மெதுவாக கண்களை திறக்க முயன்றாள் இமைகள் பெரும் பாரமாய் அழுத்தமாக மூடியிருந்தன கண்கள். அம்மா.... அம்மா.... என்று முனகினாள். உடல் முழுவதும் ஒரே வலியாக இருந்தது கைகால்களை அசைக்க முடியவில்லை. அது ஒரு அரச வைத்தியசாலை காவறையில் ஒரு கட்டில். அவளை சத்திரசிகிச்சை கூட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வரை அவளின் சகோதரி அவளுடன் நின்று கொண்டிருந்தவள். யாரோ அழுவது கேட்க மெதுவாக கைகளைத் தூக்கி அவளை தேற்ற முயன்றாள். முடியாது போகவே அக்கா... அக்கா... என அரற்றினாள்.மிகவும் கஷ்டப்பட்டு இமைகளைத் திறந்தாள். தீயால் தீண்டப்படாத இடம் அவளது கண்கள்,மூக்கு,வாய் என்பன மட்டும் தான்.

அக்கா நெருங்கி வந்து அவளின் கை,கால்,முகம் என ஒவ்வொன்றாக தொட்டுப் பார்க்கிறாள். முகம் தவிர எல்லா இடமும் கட்டுக்கள் போடப்பட்டிருப்பது தெரிகிறது. தலையில் மயிர் முழுவதும் மழிக்கப்பட்டுக் கட்டுப்போடப்பட்டிருந்தது. அக்காவின் கண்கள் மழையாக கொட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் இருப்பது தெரிகிறது. அக்காதான் அழுகிறா "நீ பிழைத்து விட்டாய் சாரதா.... இனி எப்படி...." என்று மீண்டும் அழுகிறாள்.ஆனால் சாரதாவிற்கு அழுகையே வரவில்லை. வீரக்தி... வெறுப்பு இவற்றின் முடிவில் தான் அவள் தீக்குளித்தாள்.இனி அவளின் கண்களால் வருவதற்கு கண்ணீரே இல்லை. 23 வருட தாம்பத்யவாழ்வில் வற்றிப்போய்விட்ட கண்ணீர்..... 38 வயதுக்குள் 5 பிள்ளைகளின் தாயாகி ஆணாதிக்கத்தின் ஆழுமையில் அடிமையாகி வாழ்ந்தவள்.... குடும்பம் என்கிற பந்தத்தை உடைத்து தனித்து வாழ மனப்பலம் இல்லாதவள்... சுயதொழில் செய்து வாழத்தெரியாதவள் ஊர்வாய்க்கு பயந்தவள் பிள்ளைகளின் காலத்திலாவது நிம்மதியாக வாழலாம் என எண்ணியவள்.ஆனால்..........

"அக்கா... அக்கா..." மெதுவாக சகோதரியை அழைத்தவள் குடிக்க தண்ணீர் கேட்டாள்.

"சாரதா...குளுக்கோஸ் ஏத்திக்கிடக்கு மயக்கமருந்து தந்தபடி யால் தண்ணி கொடுக்க வேண்டாம் என்று சொன்னவா மிசி."

"ம்...ம்" என்ற படி மீண்டும் கண்களை மூடிய சாரதாவின் மனக்கண்ணில் விரிகிறது அவளின் வாழ்க்கை.... கணவனின் இளமைப் பருவம்.சத்தியனின் வெற்றிலைக்காவி படிந்த பற்கள் சுருள் முடியும் எப்பவும் சிரித்த முகமும் அப்போது அவளிற்கு ஏற்படுத்திய மாற்றங்கள்..... கிணற்றுக்குப் போனால்,கடைக்குப் போனால்,கேற்றுக்குப் போனால், வயலுக்குப்போனால் எல்லாம் பின்னால் தொடர்ந்த சத்தியன்.... சிரிக்க சிரிக்க பேசிய சத்தியன்... இவற்றைக் கண்டு பேதலித்த பெண்மை ஆண்மைக்கு அடிமையாகியது. ஆரம்பத்தில் அவனைக் காண அருவெறுத்தவள் பின் எப்படி அடிமையாகினாள். இது அவளுக்கே புரியாத புதிர்..... அவளை வாழ்க்கைத் துணையாய் கொண்ட பின் அவன் இரகசிய குடிகாரன் என்று அறிந்ததும் துவண்டாள்... முன்பே அவன் குடிகாரன் என்று பெற்றோர் மறுத்தபோது பெற்றோரை எதிர்த்து,சகோதரங்களைப் பிரிந்து சத்தியனின் பின்னால் நாய்க்குட்டி போல சென்ற நாள்......

தன்னிலும் பெரியவர்கள்,அனுபவசாலிகள் கூறுவதில் உண்மை இருக்கும் என்று சிந்திக்க அந்தப் பாலியல் பருவம் விடவில்லை. இன்று.... கூலிக்குப்போய் என்றாலும் மகாராணியாய் வைத்திருப்பன் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியனின் சத்தியத்தை நம்பி..... வெறும் உடல் உணர்ச்சிக்கு அடிமையாகி.... இப்படி எத்தனையோ பெண்களின் வாழ்வு வெறுமையாகிப் போனதை அறியாத பேதையாகி.... தேவதாஸ் படத்தின் கதாநாயகியாய் கற்பனை செய்து.... சத்தியனை வெறுத்தால் தேவதாஸ் போல் பைத்தியக்காரனாகிப் போவான் என்று அறிவையே முழுக்க இழந்து இன்று கண்ட சுகம்......

ஒரு குழந்தை பிறந்தபின் படிப்படியாக சத்தியனின் சுயரூபம் தெரியத் தொடங்கியதும்... தாயாகிநின்ற பேதை உற்றார்,உறவினரின் ஆறுதல் இன்றிப் பேதலித்தாள். அடுத்தவாரிசும் உருவானபோது....பெண் வெறும் போகப் பொருள் என்று அவன் உணர்த்தியபோது....தனது தேவைகள் முடிய அவன் உதாசீனம் செய்தபோது....அவள் தன் பெண்மையின் மென்மையை மறந்தாள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு நான்கும் நாலுதிசையில் செல்ல... விறகு கட்டையுடன் வீறிட்டு அலறத் தொடங்கினாள். அவனுடன் மல்லுக்கு நின்றாள். குழந்தைகளை அடித்தான். முடிவில் சத்தியனின் மூர்க்கத்தனம் அதிகரிக்க... அடி தாங்கமுடியாது வேதனையில் நஞ்சுப்போத்தலை நாடினாள். அப்போது 2வது மகனுக்கு 2 வயது.

குடித்தவளின் முன்னே தன்பிள்ளைகள் இரண்டும் சத்தியனிடம் அடிவாங்கி சீரழிவது போல் தோன்ற அவர்களுக்கும் கொடுக்க நினைத்து பிடித்தாள் பிள்ளைகளை. உதறிக்கொண்டு அழுதுகொண்டு அடுத்த வீட்டினுள் குழந்தைகள் பாய சாரதாவும் காப்பாற்றப்பட்டாள். மரணத்தின் விளிம்புவரை சென்றவள் மீண்டும் திரும்பியபோது குற்றக்காசு வேறு அவளைப் பயமுறுத்தியது. இதைக்கண்ட சத்தியன் தன்னில் பழிவிழப்போவதை அறிந்து நல்ல பிள்ளைபோல் குற்றப்பணத்தையும் கட்டி, அவளையும் அன்பாக அழைத்துச் சென்றான். மீண்டும் அவள் நஞ்சு குடித்தால் தான்தான் கம்பி என்ன வேண்டிவரும் என பயந்த சத்தியன்

சிறிதுகாலம் திருந்தியவன்போல் காலத்தைக் கழித்தான். இந்த சந்தர்ப்பத்தில்தான் அவளின் பெற்றோர், சகோதரங்கள் எல்லோரும் ஒற்றுமையாகி மகிழ்ச்சி கொண்டாடினர்.

குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு ஆனால் சத்தியனின் பேச்சு ஒருவருடம் நீடித்ததே பெருமைதான். குடிப்பவன் யாராவது மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் அடிமையாகாமல் இருப்பான் என்றால் நாட்டில் எவ்வளவோ விபத்துக்கள், தற்கொலைகள் இல்லாது போயிருக்கும். சாரதாவும் தன்கணவன் திருத்திவிட்டான் என்ற மகிழ்ச்சியில் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள். இந்த மகிழ்ச்சியின் விளைவால் கிடைக்கப் போகும் பெண்குழந்தையால் தன் வாழ்வு மீண்டும் சீரழியப் போகிறது என்கிற விசயம் எங்கே அவளுக்குத் தெரியப்போகிறது. தெரிந்திருந்தால் அவள் எல்லாவற்றையும் முன்கூட்டியே அறிந்து தவிர்த்திருப்பாள். மூன்றாவதாக பெண் குழந்தை பிறந்தபோது மீண்டும் வீடே அமளிதுமளிப்பட்டது. தான் தன் பெண்ணுக்கு என்ன கொடுப்பது என்று ஆரம்பித்தது சண்டை.

"அடியே சாரதா நீ என்னடி கொண்டுவந்தனீ. எனக்கு, என்ரை பிள்ளைக்கு நான் என்னடி குடுக்கிறது. போடி போய் வாங்கிவாடி உன்ரை அப்பனிட்டை" என்று விரட்டி அடித்தான் சத்தியன்.ஒருமாதமும் முடியாத குழந்தையையும் கூட்டிக் கொண்டு பெற்றோரிடம் சென்றவள் ஒருவருடம் கழித்து சத்தியன் வந்து அழைத்தபோது சில பவுண் நகைகளுடன் வீடு திரும்பினாள். பொருளைக் கண்டவன் அவற்றைப் பறிக்கும் மட்டும் இனிய கணவனாக உருமாறி எல்லாம் முடிந்ததும் மீண்டும் உருக்கொண்டான். இப்படியே அவளின் வாழ்வு இன்பதுன்பங்களின் கலவையாகி 5 பிள்ளைகளின் தாயாகி கர்ப்பத்தடையும் செய்தவள் பெரும் நிம்மதியடைந்தாள்.

பிள்ளைகள் வளர்ந்ததும் உழைப்புதர மறுத்த சத்தியன் தெருக்களில், கடைகளில் என்று இரவைக்கழிக்கத் தொடங்கினான். கால்வயிறு,அரைவயிறு பட்டினியாக குழந்தைகள் கிடப்பதைக் காணச்சகியாத சாரதா கூலிவேலைக்குப் புறப்பட்டாள். முதன் முதலில் உழைக்கத் துணிந்த சாரதா இப்போது தான் பெண்ணாலும் சம்பாதிக்க முடியும் என்பதனை உணர்கிறாள். வளர்ந்த மகன்கள் இருவரும் சம்பாதிக்க ஆரம்பித்ததும் சற்று இருள் நீங்கி நிலவு தெரிவதுபோல் சிறிது மகிழ்ச்சி அவளின் வாழ்வில் எட்டிப்பார்க்கிறது. அவளுடலில் பவுண் மின்னுவதைக் கண்ட சத்தியன் அவற்றையும் பறித்து குடியில் அழிக்கிறான்.இதனால் கோபம் கொண்ட மூத்தவன் தந்தையுடன் கோபம் கொள்கிறான் சமாதானம் செய்து வைக்கிறாள் சாராதா ஆனால் அடுத்தடுத்து இருமகன்களும் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வந்தபோது சத்தியனிடம் வாங்கிய அடி பெரிதாக தோன்றவில்லை. இதனால் வீட்டில் பெரும் சண்டையும் சத்தியனுக்கே அடிக்கும் அளவுக்கு மகன்கள் துணிந்தும் கோழைபோல் மூன்று பெண்களையும் விட்டுத்தீக்குளிக்க முயன்று தோல்வியுடன் வைத்தியசாலை யில்... கண்களை மூடியபடி படுத்திருந்தவள் தீவிரமாக சிந்திக்க ஆரம்பிக் கிறாள். ஒன்றுக்கு இரண்டு தடவையாக தோற்றுப்போனவள். மரணத்திற்கு அவளுக்கு இன்னும் காலம் வரவில்லை.அவள் வாழவேண்டும்.... இவ்வளவு தோல்விகளுக்கு மத்தியில் அவள் வாழ வேண்டுமா? ஆம் அவள் வாழத்தான் வேண்டும் யாருக்காக? அவளின் மூன்று பெண்களுக்குமாக.

அந்த கிராமத்து மிஸ் தீபாக்கா அவளின் பிரச்சினை அறிந்து ஆலோசனை வழங்கினாள். சாரதாவிடமே தீர்வு என்ன என்று கேட்டாள். தனித்து வாழ்ந்தால் தான் இதற்கு முடிவு என கூறிய சாரதா,தனித்து வாழப் பயந்தாள். ஆணாதிக்கத்தின் பிடியில் சிக்கி உழலும் சில பெண்கள் மத்தியில் அவள் தனித்து வாழப் பயந்தாள்.

யாரோ வரும் அரவம் கேட்டு கண்களை திறக்கிறாள் சாரதா தீபாக்காவும் அவளின் கடைசி மகள் ரேகாவும் தாயைக்கண்டவுடன் அழுது குளற ஆரம்பிக்கும் ரேகாவை சமாதானம் செய்கிறாள் தீபா.

"அம்மா தான் தப்பிட்டாவே ரேகா இனி அழக்கூடாது.அம்மாவும் பெண்களுமாக நிமிர்ந்து வாழ்ந்து காட்டவேணும். " என்ற படி சாரதாவிடம் வந்தாள் தீபா.

"நீங்கள் சொல்லுவதுதான் சரி தீபாக்கா நான் இனி வாழப்போகிறேன்.... என் பெண்களை என்னைப்போல் கோழையில்லாது வளர்க்கப்போகிறேன். என் பெண்களுக்கு படிப்பு இல்லாதுவிட்டாலும் சுயதொழில் கற்றுகொடுக்கப்போகிறேன். ஒரு பெண்ணால் தனித்து வாழமுடியும் என்று இந்த சமுதாயத்திற்கு காட்டப்போகிறேன்."படபடவென்று கதைத்தவள் பெரிதாக மூச்சு விட்டாள்.

"எல்லாம் சரி சாரதா உமது உடல் சுகமடைந்த பிறகு எல்லாம் கதைப்பம் நீர் இப்ப பூரணமாக ஓய்வெடுக்க வேணும் கண்டபடி மனதை அலட்டாமல் படுத்து நித்திரை கொள்ளும்.நான் போட்டு வாறேன்"என்றபடி சென்றுவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்து நின்ற ரேகாவை அழைத்து தன்னருகே இருத்துகிறாள். தன்னைப்போலவே மிகவும் அழகான பெண்ணாக பிறந்துவிட்ட ரேகாவை தனியே விட்டுப் போயிருந்தால்... தன்னைவிட அவள் சீரழிந்து போயிருப்பாள் என்று எண்ணியபோது அவள் திடமான முடிவுக்கு வருகிறாள்.

ஆம். அவள் இனி அழமாட்டாள் தான் மூன்று பெண்களின் பொறுப்பை உதறிவிட்டு இறக்க நினைத்தது பெரும் மடத்தனம் என்று உணர்கிறாள். தன் பெண்களை பாரதி கண்ட புதுமைப் பெண்களாய் வளர்க்கப்போகிறாள். பெண் சுகந்திரம் பற்றி பேசிய பாரதியின் ஆத்மா தன்னைப்போல கோழைகளைக் கண்டால் சாந்தியடையாது என்று எண்ணுகிறாள் ஆமாம் அவளின் பெண்கள் முழுமையான பெண்களாய் வளரவேண்டும்... வளர்க்க வேண்டும் என்று உறுதியான முடிவுடன் அமைதியாக உறக்கத்திற்காய் கண்களை மூடுகிறாள் நிம்மதியாய்.

*முற்றும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ஆம் இடம்பெற்ற கவிதை

# பண்பாட்டு வாழ்வு மாறலாமா?

திருமதி. சுரேஸ்குமார் நிலாகினி
*முகாமைத்துவ உதவியாளர்,*
*மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.*

மணக்கவரும் பூச்சூடி மயக்கவரும் பட்டுடுத்தி
குணக்கொழுந்தாய் நம்மங்கை
வாழ்ந்திருந்த காலமெங்கே? இன்று
தடுக்கிவிழும் மிடியுடனும் இடைதெரியும் ஜீன்சுடனும்
மிடுக்காய் நம்பாவையர்கள் நடமாடல் காணீரோ?

காதிலோர் தோடிட்டு குடுமியும் தலையிலிட்டு
வீதியிலே நம் இளைஞர் பாதி பைத்தியமாய்,
பூணூலும் தரித்து விட்டால் காணும் எனச் சொல்லி
பேணுமெம் பண்பாடு நாணிவிடச் செய்வாரோ–இல்லை
அன்ன நடையெண்ணி தன்னடையும் இழப்பாரோ?

மணப்பந்தல் தனில் முதலாய் தன்
மணவாளன் கைபிடித்த தமிழ் மங்கை தானிங்கே
அரங்கேறி ஆடுகிறாள் கரங்கோர்த்து நண்பனுடன்
குரங்கின்கைப் பூமாலை ஆனதுவோ நம்பண்பு?
தரங்கெட்ட குணம் வந்து சேர்ந்ததுவோ நம்மோடு?

இல்லாளும் இல்லிருக்க –வேறு
பொல்லாள் தொடர்பெதுக்கு?
தேடுகிறார் இங்குபலர் வேற்றூரு பண்பாடு
போடுகிறார் மண்ணெடுத்து – எம்
பண்புகளின் புதைகுழிக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை செய்தியெல்லாம் சித்தரிக்கும் கருத்தென்னே!
நித்தம் நித்தம் வல்லுறவு செய்திகளே ஏராளம்
சித்தம் தான் கலங்கியதோ பித்தர்களோ எம் மாந்தர்?
பச்சிளங் குழவியிலும் குச்செடுக்கும் கிழவியிலும்
இச்சைகொள்ளல் ஒழுக்காறோ?இங்கிதமோ இது நமக்கு?

கல்வி சொல்லிக் கொடுக்கும் ஆசான்
எல்லையறு மதிப்பெங்கே?குணமெங்கே?வளமெங்கே?
கல்விதருங் குருவை எள்ளி நகைக்கின்றார்
கற்றோர்க்கும் குணக்கேடு கற்போர்க்கோ மனம் கூறு
கற்றோ(போ)ர் திருந்துவரோ நாம் உற்ற பழி தீர்ப்பாரோ?

செல்லாக் காசெனவே செல்கிறதே எம்பண்பு
பொல்லாக்கனவெனவே போகட்டும் கறைகள் இனி
மாற்றங்கள் வேண்டுவது பண்பிற்குள் வேண்டாமே
ஏற்றங்கள் மிகச்செய்வோம் எம்பண்பு செழித்தற்காய்
போற்றுங்கள் யாரெவரோ பண்புற்று வாழ்திடுங்கால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் இடம்பெற்ற கவிதை

# பண்பாட்டு வாழ்வு மாறலாமா?

திரு. க. லிங்கராசா
*மாவட்டச் செயலகம்.*
*கிளிநொச்சி.*

நிலாச்சாரல் தனையுடுத்தி நிர்மலமாய்ப் பூத்திருந்த – எம்
கலாச்சார வாழ்வொழிந்து கண்ணெதிரே கருகுவதோ?
பண்டுதொட்டுப் பேணிவந்த பசுமைநிறை நம்வாழ்வை
கொண்டுவந்து தெருவினிலே குப்பையெனக் கொட்டுவதோ?

காலங்கள் பலகோடி கண்ணீரில் கரைந்தாலும் – பெரும்
ஓலங்கள் எழுந்தெங்கள் இருப்புக்கள் அழிந்தாலும்
நேற்றுவரை நம்வாழ்வு நெறிகெட்டுப் போனதில்லை
சேற்றுக்குள் அகப்பட்ட செருப்பாக ஆனதில்லை

சங்கம் வளர்த்தோரும் சான்றோரும் சரித்திரரும்
வங்கக் கடலேறி வாளெடுத்து வென்றோரும்
கட்டிக் காத்துவந்த பண்பாட்டு வாழ்வதனை – நாம்
தட்டிக் கழிப்பதுவோ? தலைகீழாய் நடப்பதுவோ?

விண்தாண்டி விரைந்தோடும் விஞ்ஞான வேகத்தில் – எம்
பண்பாட்டுக் கலைகளெல்லாம் பதிவிழந்து போகிறது.
கட்டுடைத்துப் பாயுமிந்தக் கால நதியினுள்ளே – நாம்
விட்டெறிந்து விடலாமோ எம் விழுதெறிந்த பெருவாழ்வை.

பஞ்சம் பசியோடு பலநாட்கள் கழிந்தாலும்
நெஞ்சம் இனித்திருந்த நேற்றைய நம்வாழ்வு – இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடம்பரம் என்றெதையோ அரைகுறையாய் அணிந்தபடி
கோடம்பாக்கத்துக் "கொலைவெறி"யில் அலைகிறது.

காதிலே சொருகிய கைத்தொலை பேசியுடன் - வாழ்வின்
பாதியே அதுவென்ற பாவனையில் திரிகிறது.
பாலர் வயதினிலே பாதை தடம்புரண்டு
காலம் முந்தியே கருவினைச் சுமக்கிறது.

முறைதவறி இணையத்தில் மூழ்கிப்போய்ச் சுயமிழந்து
கறைபடிந்த வாழ்வுக்குள் காலெடுத்து நடக்கிறது.
இணையம் தனிலேறி (Facebook) முகநூலில் முறைகெட்ட
துணையைத் தேர்ந்தெடுத்து துயரத்தில் துவழ்கிறது.

போர்க்களங்கள் விரிந்திருந்த புறநா னூற்றுலகில்
ஆர்ப்பரிந்த ஆயுதங்கள் - எம் மூத்தோர்தம் முதுசொம்கள்
கசாப்புக் கடைகளுக்கும் கொள்ளையர் குழுவினுக்கும்
அசாத்திய விலைகளில் அடகுவைக்கப் படுகிறது.

வண்ணம் பூத்திருந்த எம்மினிய வாழ்தடத்தை
எண்ண நினைக்கையில் ஏக்கம் சுடுகிறது.
ஆறவே முடியவில்லை; அடிமனது கேட்கவில்லை- இன்னும்
மாறவே விடலாமோ - எம் மாண்புமிகு பண்பாட்டை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆம் இடம்பெற்ற கவிதை

# மெல்லத் தமிழ் இனிச் சாகுமா?

செல்வி. யோ. அனுசியா
*முகாமைத்துவ உதவியாளர்,*
*பிரதேச சபை, கரைச்சி.*

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து
முன் தோன்றிய மூத்த மொழி
காவலரும் பாவலரும் பாட்டிசைத்து
கட்டிக்காத்த மொழி
நாடுநகர் வளம் தந்து
நாற்றிசையும் போற்றி நின்று
சீரும் சிறப்புடனும் சீர்
தூக்கி பார்த்த மொழி

இமயம் முதல் குமரி வரை
கால் பதித்து நடைபயின்று
சேரசோழ பாண்டியரின்
மடிதவழ்ந்த மொழி
தொல்காப்பியன் இலக்கணமும்
வள்ளுவன் வாய் மொழியும்
கம்பன் படை காவியமும்
கொண்ட மொழி தமிழ் மொழி

உணர்வின் சுரங்கமாய்
ஊற்றின் பெருக்கமாய்
பாவலன் வாய் பாட்டுக்களாய்
பயின்று வந்த மொழி
உற்றோரும் மற்றோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றோரும் நல்மனத்தோரும்
காதலொடு கடைவாய் தொட்டு
கலந்து வந்த மொழி

குறிஞ்சியில் புணர்ந்து
முல்லையில் இருந்து வந்து
மருதத்தில் ஊடல் கொண்டு
திழைத்த மொழி தமிழ் மொழி
இன்று தறிகெட்டு முறைகெட்டு
சல்லடைகள் துளையிட்டு
வேற்றுமொழி கலப்புற்று
வீழ்ந்து கிடக்கிறதே

காலம் எனும் இராச்சியத்தில்
கல்யாணம் என்ற அரசமைத்து
காதலுடன் கதை பயின்ற
நம் தமிழ் மொழி
இன்று சிதைந்து போன சித்திரமாய்
சித்திரவதைப்பட்டு நிதம்
காயப்பட்டு நிற்கிறதே
காலத்தின் கோலமென்ன

தமிழ் பெண்ணாள் உடுத்தும்
தூய வெண் சேலையிலே
கறைபட்டு வேற்று மொழிவந்து
அலங்கரித்து நிற்கிறதே
நாட்டைப்பிடிக்க வந்த
நாடோடிகள் பார்வையினால்
நாசமாய் எம் மொழி
நடையிழந்து போகிறதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைபிடிக்க வேற்றுநாட்டான்
வலைகொண்டு வந்து விட்டால்
வலையறுத்து காப்பது
தமிழ் மகன் என் கடமையன்றோ
பாலகனின் பேச்சினிலும்
பாட்டியரின்; மூச்சினிலும்
பாவையரின் பேச்சினிலும்
பயிலச் செய்வோம் தமிழ் மொழியை

தொட்டால் தென்றலாய்
வீசினால் புயலாக
நுகர்ந்தால் நறுமணமாக இருந்த
எம் தமிழ் மொழியை
வானத்து தாரகையாய்
நடுவானில் தொங்கவிட்டு
அழகுபடுத்த விருப்பு கொண்டால்
அரங்கேறும் தழிழ் சிறப்பு

உலகெலாம் பறந்தாலும்
உனைமறக்க மாட்டோம் என்று
புலம் பெயர் தமிழரெல்லாம்
ஓன்றாக குரல் கொடுத்தால்
விளைநிலம் நாடு விட்டு
தேடியதெல்லாம் விட்டாலும்
பாடிடும் தமிழ் மட்டும்
பாதையில் பாதியில் விட்டிடாது

கற்பனை உலகத்தை
கையிலே படித்து நின்று
காலத்தை கழிப்போரெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை தவறிப்போனாலும்
அற்புதப்பாட்டி தமிழை
அடையாளம் கண்டு கொண்டு
அடக்கமாய் வாழ்ந்து வந்தால்
தமிழ் கிழவி உயிர் மலர்வாள்

மெல்லத்தமிழ் இனிச் சாகுமா?
மேல்நாட்டார் பார்வையினால்
என எண்ணி ஏங்குவோர் எலாம்
ஏப்பம் விடும் வகையில்
மூக்கு முட்டி மூச்சிரைக்க நின்று
பேசும் வகைசெய்தால்
பேதையாய் போய்விடாமல்
தமிழ் பெண்ணாள் உருவெடுப்பாள்

குழவியாய் பறந்தோடி
குமரியாய் நிமிர்ந்து வந்து
குதித்தாடிடச் செய்வோம்
எம்தமிழ் அன்னையை அவள்
குன்றிலிட்ட தீபமாய் என்றும்
குப்பென்று நின்று ஒளிவீசி
குரல்கொடுக்க வேண்டி நிற்போம்
எம்நாட்டினில் தமிழ் மக்கள் மனதினில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
04939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANDRA DIGITAL PRINTERS T.P : 021 222 8929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org